
1 - 15 ஏப்ரல் 99
www.padippakam.com
ரூ. 4.00

# புதிய ஜனநாயகம்



**போலீசு அராஜகத்துக்கு "தீவிரவாத" சாக்கு**




**பஞ்சாலை நெருக்கடிக்கு பலிகடா தொழிலாளியா**

படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## அப்பாவிகளுக்குச் சிறைச்சாலை பீரங்கித் திருடனுக்கு ராஜ மரியாதை

தேசிய மனித உரிமை கமிசனின் தலைவர் வெங்கடாச லையா, "போலீசாரால் கைது செய்யப்படுவோரில், 60 சதவீதமான கைதுகள் தேவையற்றது; அநீதியானது; தில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளோரில், 85 சதவீதமான பேர் விசாரணைக் கைதிகள்" எனக் குறிப்பிட்டு, போலீசு - நீதி மன்றங்களின் அதிகாரத் திமிரால், மனித உரிமை மீறப்படுவதைப் போட்டு உடைத்துள்ளார். அப்பாவிகள் அநீதியான முறையில் தண்டிக்கப்படுகையில், உச்சநீதி மன்றமோ, போஃபர்ஸ் ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட வேண்டிய ராஜீவ் குடும்பத்தின் நண்பரான குட்ரோச்சிக்குச் சாதக மாகத் தீர்ப்பு வழங்கியது. "போஃபர்ஸ் ஊழல் வழக்கில் சாட்சியமளிக்க, மார்ச் 15 அன்று தான் இந்தியாவிற்கு வந்தால், தன்னை சி.பி.ஐ. கைது செய்யக்கூடாது" என குட்ரோச்சி நிபந்தனை விதித்தான். பீரங்கிக் கொள்ளையனின் நிபந்தனையை ஏற்றுக் கொள்ளுமாறு போஃபர்ஸ் ஊழல் வழக்கை விசாரிக்கும் நீதி மன்றத்திற்கு உத்தரவிட்டது உச்சநீதி மன்றம்!

## வறுமை ஒழிந்தது.....கோப்புகளில்

வறுமையை விரட்டியடித்துவிட்ட இந்தியாவின் முதல் நகரம் மும்பைதான் என்ற அறிவிப்பு விரைவில் வெளிவந்தால், யாரும் ஆச்சரியப்பட வேண்டாம். சமீபத்தில் பா.ஜ.க - சிவசேனா கூட்டணி அரசு வெளியிட்டுள்ள ஒரு புள்ளி விவரத்தின்படி, மும்பையில் 38,940 குடும்பங்கள் தான் வறுமை கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றன. ஆசியா கண்டத்திலேயே மிகப்பெரிய குடிசைப் பகுதியான தாராவியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 365 குடும்பங்கள் வறுமையில் வாடியதாம்; இப்பொழுதோ, அந்த எண்ணிக்கை 151 ஆக குறைந்து விட்டதாம்! காண்டிவாலி, விக்ரோலி என்ற இரு குடிசைப் பகுதிகளிலும் தலா ஐந்து குடும்பங்கள் தான் வறுமைக் கோட்டைத் தாண்டவில்லையாம்! அதிகாரத் திமிரெடுத்துத் திரியும் இந்துமத வெறியர்கள், மும்பையில் நாளொன்றுக்கு நாற்பது ரூபாய் சம்பாதிக்கும் கூலிகளை ஏழையென்று சொல்ல முடியாது என அறிவித்துள்ளனர்.

## மக்கள் நலனை விட சமசுகிருதம் உயர்ந்ததா?

இந்த ஆண்டை சமசுகிருத ஆண்டாக அறிவித்துள்ள பா.ஜ.க அரசு, அப்பார்ப்பன மொழியின் 'வளர்ச்சி'க்காக பத்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. இது, இந்திய மக்கள் பேசும் பல்வேறு மொழிகளின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதியில் 40 சதவீதமாகும். இது தவிர, "ராஷ்ட்ரீய சமஸ்கிருத சன்ஸ்தன்" என்ற அமைப்பிற்கு 14.51 கோடி ரூபாயும், பார்ப்பன வேத சம்பந்தமான நூல்களை வெளியிடும் மற்றொரு நிறுவனத்திற்கு நான்கு கோடி ரூபாயும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படி மக்கள் மத்தியில் புழக்கமில்லாத, செத்துப் போன, மக்கள் விரோத மொழிக்காக 28 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ள பா.ஜ.க அரசு, மக்கள் நலன் - சுகாதாரத் திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கும் தொகையோ வெறும் 98 கோடி ரூபாய்தான்!



குட்ரோச்சி

## குப்பை தானே என ஒதுக்கிவிட முடியுமா?

சென்னையில் திருவல்லிக்கேணி, கோடம்பாக்கம், மயிலாப்பூர் பகுதிகளில் குப்பை வாரும் துப்புரவுப் பணிகளைத் தனியாரிடம் ஒப்படைத்துவிட்டது மாநகராட்சி நிர்வாகம். இத்தனியார்மயத்தை எதிர்த்த கவுன்சிலர்களை வெளியேறச் சொல்லிவிட்டு, விவாதமே நடத்தாமல் சர்வாதிகாரமாக இத்தீர்மானத்தை நிறைவேற்றினார் மேயர் ஸ்டாலின். குப்பையில் தொடங்கியிருக்கும் தனியார்மயம், குடிநீர், பொதுசுகாதாரம் என நீளும் நாள் வெகு தொலைவில் இல்லை.

## பா.ஜ.க: அமெரிக்காவின் தலையாட்டி பொம்மை

கடந்த பிப்ரவரி மாத இறுதியில், அமெரிக்க சுங்க அதிகாரிகள் குழுவொன்று, இந்தியாவில் குழந்தை தொழிலாளர் நிலை பற்றி ஆராய்வதற்காக வந்திருந்தது. இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தரைவிரிப்புகளைத் தயாரிக்கும் உ.பி. மாநிலத்திலுள்ள தரைவிரிப்பு நெசவுப் பட்டறைகளை, அமெரிக்க அதிகாரிகள் சோதனையிட்டுவிட்டுத் திரும்பிச் சென்றனர். குழந்தைத் தொழிலாளர் சுரண்டப்படுவதை எதிர்க்கும் பல்வேறு அமைப்புகளும், இந்தியாவின் இறையாண்மைக்கு வேட்டு வைக்கும் அமெரிக்காவின் மேலாதிக்க அடாவடித்தனத்தை எதிர்த்தனர். ஆனால், சுதேசி சவடால் அடிக்கும் பா.ஜ.க அரசோ, அமெரிக்க குழுவின் முகம் கோணிவிடாதபடி நடந்து கொள்வதில் தான் கவனமாக இருந்தது!

## 'மார்க்சிஸ்டு'களின் சாதனை தொழிலாளர்களின் வேதனை

மேற்கு வங்க மாநிலத்தில் கடந்த இரண்டு வருடங்களாகப் பூட்டிக் கிடக்கும் டன்லப் தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்த பிராசென்ஜித் சர்கார் என்ற இளம் தொழிலாளி, மார்ச் 12 அன்று தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். புற்றுநோயால் அவதிப்படும் அவரது ஐந்து வயது மகளின் வேதனையையும், அவளுக்கு மருந்து வாங்கித் தர முடியாத அளவுக்கு வாட்டிய வறுமையையும் சகிக்க முடியாமல்தான் அவர் தற்கொலை செய்து கொண்டார். டன்லப் ஆலையைப்போல, கிட்டதட்ட 12 ஆண்டுகளாக மூடிக்கிடக்கும் "மெட்டல் பாக்ஸ்" ஆலைத் தொழிலாளர்களுள் 160 பேர் வறுமையின் காரணமாக தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயினர். இப்படி தொழிலாளர்களைச் சுடுகாட்டுக்கு அனுப்பி விட்டு, "மேற்கு வங்கத்தைப் பார்" என சுயதம்பட்டம் அடித்துக் கொள்ளும் 'மார்க்சிஸ்டு'களின் வக்கிரத்தை என்னவென்பது?

## பன்னாட்டு நிறுவனங்களின் கோரப் பிடிக்குள் விவசாயம்

ஏழை நாடுகளின் விவசாயிகளை குறிப்பிட்ட பன்னாட்டு நிறுவனங்களின் நவீன கொத்தடிமைகளாக்கும் வகையில், அமெரிக்க ஏகாதிபத்தியம் மரபணு விஞ்ஞானத்தை முறைகேடாகப் பயன்படுத்தி வருகிறது. மான்சாண்டோ என்ற பன்னாட்டு நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள பருத்தி விதைகளில் இருந்து முளைக்கும் பருத்திச் செடிகளின் விதைகளை விதைத்தால், அவை முளைக்காது. விவசாயிகள், விதைகளுக்கு பன்னாட்டு நிறுவனங்களை அண்டியிருக்கும் நிலையை உருவாக்க முனையும் இத்தொழில்நுட்பத்தின் பெயர்தான் "டெர்மினேட்டர்". இதையடுத்து, "ட்ரெய்டர்" (TRAITOR) என்ற புதிய தொழில்நுட்பம் கொண்ட விதைகளை அறிமுகப்படுத்தவுள்ளன. "ட்ரெய்டர்" விதைகளைப் பயன்படுத்தும் விவசாயிகள், குறிப்பிட்ட பன்னாட்டு நிறுவனம் தயாரிக்கும் உரம் - பூச்சி மருந்துகளைத்தான் பயன்படுத்த வேண்டிய நிர்பந்தம் உருவாகிவிடும்.



படிப்பகம்

www.padippakam.com


புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 14

இதழ்: 9 - 10

16 மார்ச்'99 - 15 ஏப்ரல்'99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# கொசோவா எண்ணெய் கிணறுகளுக்காக அல்பேனிய சிறுபான்மை மக்களை பலியிட்டு நடக்கும் போர்

ஐரோப்பாவின் பால்கன் பிராந்தியத்தில் உள்ள யுகோஸ்லாவியாவின் மீது அமெரிக்காவின் தலைமையிலான "நேட்டோ" (வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு) போர் விமானங்கள் குண்டு மழை பொழிகின்றன; போர்க் கப்பல்கள் ஏவுகணைகளை வீசுகின்றன. ஆசியாவின் வளைகுடா பிராந்தியத்தில் உள்ள ஈராக் மீதான குண்டுவீச்சு - ஏவுகணைத் தாக்குதலுக்கு பிறகு, அமெரிக்காவும் - பிரிட்டனும் இரண்டாவது போர் முனையைத் துவக்கியுள்ளன. வளைகுடாவில் நடப்பதைப்போல ஒரு தலைப்பட்சமான தாக்குதல் என்றில்லாமல், பால்கனில் யுகோஸ்லாவியாவின் எதிர்த் தாக்குதலும் தொடங்கி முழு யுத்தமாக வெடித்துவிட்டது.

"ஐரோப்பாவில் நடக்கும் மனிதப் பேரழிவை முடிவுக்குக் கொண்டு வரும் நல்ல நோக்கத்துக்காகவே" இந்தப் போரைத் துவங்கியிருப்பதாக "நேட்டோ" தலைமை கூறுகிறது. ஈராக்கின் சதாம் உசைனையும், யுகோஸ்லாவியாவின் ஸ்லேபோடோன் மிலோசேவிச்சும் ஒரே மாதிரியான காட்டுமிராண்டிகள் - பாசிசக் கொடுங்கோலர்கள் என்று மேலை வல்லரசுகள் சித்தரிக்கின்றன. ஏற்கனவே, குரேஷியா, போஸ்னியா, செர்பிய முஸ்லீம் மக்கள் மீது இனவெறிப் படுகொலை - யுத்தக் கிரிமினல் குற்றங்கள் புரிந்தனர் யுகோஸ்லாவியப் பேரினவாத செர்பியர்கள்; இப்போது, அந்நாட்டு கொசோவா மாநிலத்தில் பெரும்பான்மையினராக வாழும் அல்பேனியப் பூர்வகுடி இசுலாமிய மக்களைக் கொன்றொழித்து வருகின்றனர்.

கொசோவா விடுதலை இராணுவத்தின் தலைமையில் போராடும் கொசோவா இயக்கத்தினருடன் சமாதான ஒப்பந்தங் காணும்படி மேலை வல்லரசு நாடுகள் அடுத்தடுத்து யுகோஸ்லாவியாவை நிர்பந்தித்தன. இறுதியாக, இரு தரப்புக்குமிடையே "நேட்டோ" நாடுகளின் முன் முயற்சியில் நடந்த பாரிசு பேச்சுவார்த்தை முடிவுகளை யுகோஸ்லாவியா நிராகரித்துவிட்டது. இந்தக் காரணத்துக்காக, ஒப்பந்தத்தை ஏற்கும்படி பணிய வைப்பதற்கே யுகோஸ்லாவியா மீது குண்டுவீசித் தாக்கிவருவதாக "நேட்டோ" நாடுகள் கூறுகின்றன. ஆனால், "நேட்டோ" நாடுகள் நம்புவதுபோல இப்பிரச்சினை அவ்வளவு எளிதாக முடியப்போவதில்லை. "நேட்டோ" யுகோஸ்லாவியாவின் உள் விவகாரங்களில் இராணுவத் தலையீடு செய்வதை இரசியா, சீனா இரண்டுமே எதிர்த்துள்ளன. ஈராக் விவகாரத்திலும் அவை இப்படித்தான் செய்தன. ஆனால், இரசியாவோ ஒருபடி மேலே போய், அதன் பிரதமரை யுகோஸ்லாவியா அனுப்பி, செர்பிய அரசுடன் ஆதரவுப் பேச்சுவார்த்தை நடத்தியது. யுகோஸ்லாவியாவுக்கு இராணுவ உதவி செய்யப்போவதாக "நேட்டோவை" மிரட்டியுள்ளது. "யுகோஸ்லாவியா" என்பதே தெற்கில் வாழும் ஸ்லாவிய பூர்வகுடி மக்கள் என்று பொருள். இந்தப் பூர்வகுடி இன ஒற்றுமை காரணமாகவே இரசியா உட்பட கிழக்கு ஐரோப்பாவில் வாழும் ஸ்லாவிய மக்கள் அனைவரும் "நேட்டோ" படையெடுப்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து, ஆர்ப்பாட்டங்கள் நடத்துகின்றனர். மீண்டும் ஒரு போரில் மேலை வல்லரசுகள் குதித்திருப்பதை எதிர்த்து அமெரிக்கா, பிரிட்டனிலும் மக்கள் போராடுகின்றனர். "நேட்டோ" நாடுகள் எதிர்பார்த்ததைப் போலன்றி யுகோஸ்லாவிய பாசிச சர்வாதிகாரி மிலோசேவிச் அந்நாட்டு மக்களிடம் இருந்து தனிமைப்படுவதற்கு பதில் ஸ்லாவிய பூர்வகுடி இனவெறி - செர்பிய தேசிய இனவெறி ஆதரவைத் தூண்டி ஆதரவும் பெற்று வருகிறார் "நேட்டோ" விமானங்களை சுட்டு வீழ்த்துவதோடு, அல்பேனிய இன மக்களைப் பழிவாங்கும் நோக்கோடு கொசோவா மீது ஏவுகணை, குண்டு வீசி தரைமட்டமாக்கி - தீய்க்கும் தாக்குதலை யுகோஸ்லாவியா நடத்தி வருகிறது.

உலகப் புரட்சிகர - ஜனநாயக சக்திகளைப் பொருத்தவரை "நேட்டோ" - யுகோஸ்லாவியா போர் ஒரு சிக்கலான பிரச்சினை. ஆறு தேசிய இனமக்களை ஸ்லாவிய பூர்வகுடி இன மக்கள் என்கிற அடிப்படையில் இணைத்து உருவானதே யுகோஸ்லாவியா. அங்கே தேசிய சுயநிர்ணய உரிமை பெயரளவுக்கே நிலவியது; பெரும்பான்மை மக்களாகிய செர்பிய இனவெறியே மேலோங்கியிருந்தது. போலிக் கம்யூனிஸ்டு டிட்டோ மரணத்துக்குப் பிறகு, தேசிய இன இயக்கங்கள் வெடித்து, பிற தேசிய இனங்கள் பிரிந்து போயின. அப்போதும் செர்பியர்கள் கட்டவிழ்த்துவிட்ட இரத்த வெள்ளத்திற்கு பிற இனமக்கள் கொடுத்த விலையோ அளவற்றது. குறிப்பாக, மிகப்பெரிய பிராந்தியத்தைத் தமது ஆதிக்கத்தில் வைத்துக் கொள்வதற்காக பிற இனத்தவரைக் கொன்றொழிப்பதிலும், பிற இனப் பெண்களைக் கற்பழித்து, சிறையில் பூட்டி, குழந்தை பெறவைத்து இனக்கலப்பு செய்ததிலும் நாஜிக்களையும் விஞ்சினர். அதே போல, இன்றைய யுகோஸ்லாவியாவிலேயே, கொசோவாவிலும் பாசிச ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். இப்படி சொந்த நாட்டு மக்கள் மீது பாசிசக் கொடுங்கோன்மை புரியும் உள்நாட்டுப் பகைவர்கள் ஒருபுறம்; அவர்களை எதிர்த்து மனிதாபிமானத்தை சாக்காக வைத்து ஆக்கிரமிப்பு, அழிவுப் போர் நடத்தும் மேல்நிலை வல்லரசுகள் மறுபுறம். உண்மையில் இந்தப் போர் வளைகுடாவைப்போல எண்ணெய் வளமிக்க கொசோவாவைக் கைப்பற்ற இவ்விரு சக்திகளிடையே நடக்கும் போர்.இவர்களில் எவர் மேலானவர் என்று தேடிப் பிடித்து ஆதரிப்பதல்ல புரட்சியாளர்களின் கடமை. மூன்றாவது ஒரு பாதையாக புரட்சிகர உள்நாட்டுப் போரையும் அந்நிய ஆக்கிரமிப்பு ஏகாதிபத்திய எதிர்ப்பையும் இணைக்க வேண்டிய சிக்கலான ஒரு பாதையை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

www.padippakam.com

# போலீசு அராஜகத்துக்கு "தீவிரவாத" சாக்கு

**முசுலீம் தீவிரவாதிகளைக் காட்டி தமிழகப் போலீசுக்கு வழங்கப்படும் வரம்பற்ற அதிகாரம், மக்களின் நடமாடும் உரிமையைக் கூடப் பறிப்பதாக மாறிவிட்டது.**

இப்போதெல்லாம் தமிழ்நாட்டுக்குள்ளேயே கூட இரயில்கள், பேருந்து - கார் உட்பட மோட்டார் வாகனங்களில் பயணம் போய் வருவது என்பது அவ்வளவு சுலபமான வேலை இல்லை. நீங்கள் நிறைய ரொக்கப் பணத்தையோ, விலை உயர்ந்த அணிமணிகளையோ மட்டுமல்ல, வெறும் துணிமணிகளையே கூட ஒரு "பையில்" போட்டுக் கொண்டு வெளியே நடமாட முடியாது.

அவ்வளவு ஏன்? நீங்கள் உங்கள் வீட்டிலே கூட நிம்மதியாக மனைவி மக்களுடன் தூங்க முடியாது. நெருங்கிய உறவினர்கள் யாரும் உங்கள் வீட்டுக்கோ, நீங்கள் யாரும் அவர்கள் வீடுகளுக்கோ போய்வர முடியாது. இத்தனையும் கொள்ளைக்காரர்களாலும், "தீவிரவாதிகளாலும்" ஏற்படும் ஆபத்தல்ல. உங்களுடைய பாதுகாப்புக்காகப் போடப்பட்டுள்ளதாகக் கூறப்படும் போலீசு - அதிரடிப் படையினால் ஏற்படும் நிரந்தரத் தொல்லையாகிவிட்டது.

உங்கள் பிரச்சினைகள், அவசரங்கள் எதையும் பொருட்படுத்தாமல் எங்கும் போலீசு உங்களை வழிமறிக்கலாம். எந்த நேரத்திலும் உங்கள் வீட்டுக்குள் புகுந்து விடலாம்; அதிரடி சோதனை என்கிற பெயரில் உங்களைப் புரட்டிப் போடலாம். எல்லாவற்றுக்கும் ஆவணங்களும் ஆதாரங்களும் விளக்கங்களும் நீங்கள் தயாராக வைத்திருக்க வேண்டும். மடியில் பணத்தை ரொக்கமாகக் கட்டிக் கொண்டு பயணம் போகும் வியாபாரிகள், சிறு தொழில்காரர்கள் வெளியூர் விடுதிகளில் தங்கும்போது அவதிப்படுவது அதிகமாகிவிட்டது.

இப்போது கிரிமினல்களும் "தீவிரவாதிகளும்"தான் போலீசுடன் நிறையவே நெருங்கிப் பழகிவிட்டார்கள். போலீசின் பலத்தையும் பலவீனத்தையும் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். குற்றப் பட்டியலில் உள்ள கிரிமினல்கள் போலீசிடம் மாமன் மச்சான் உறவு கொண்டாடி தோள் மேலே கையைப் போட்டுக் கொண்டு ஊர் சுற்றும்போது, சாமானிய மக்களுக்குத்தான் போலீசு நெருங்கி வந்தாலே பதட்டமாகி விடுகிறது. போலீசுக்கும் இப்படிப்பட்டவர்களைக் கண்டால்தான் இளக்காரமாகிவிடும். சாதாரண நாட்களிலேயே இப்படிப்பட்ட சாமானிய மக்கள் போலீசிடம் சிக்கித் தொல்லைப்படுவதும் கையில் சிக்கிய அப்பாவிகளிடம் பணம் பறிப்பதும் போலீசின் வாடிக்கையாகி விட்டதை நாடறியும்!

ஆனால் இப்போதோ விசேஷமான காலம்! "தேசத்தைத் தீவிரவாதப் பேராபத்து சூழ்ந்திருக்கிறது. சதிகார ஐ.எஸ்.ஐ. உளவாளிகளும், அவர்களிடம் பயிற்சி பெற்ற கூலிப்படையினரும் கையில் ஆர்.டி.எக்ஸ். வெடி குண்டுகளுடன் அலைகிறார்கள். அவர்கள் எல்லா நேரமும், எல்லா இடங்களையும் வெடி வைக்கச் சதித்திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள். எங்கும் மனிதவெடி குண்டுகள்; அமைதிப் பூங்காவாக இருந்த தமிழ்நாடு கலவர பூமியாகிவிட்டது. துப்பாக்கிக் கலாச்சாரம் வெடிகுண்டுக் கலாச்சாரமாக வளர்ந்துள்ளதாக"ப் பிரகடனப்படுத்தி விட்டார்கள்.

சட்டம் - ஒழுங்கையும், பொது மக்களின் உயிரையும் காப்பதற்காகவே தமிழ்நாட்டுப் போலீசார் உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றும் காலம். அதற்காகவே அவர்களுடைய கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிற காலம். போலீசாகட்டும், இராணுவமாகட்டும் இந்த மாதிரியாக தனிச் சிறப்பான பணிகளுக்காகப் புறப்படும் போதெல்லாம் என்னென்ன செய்வார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டுகள் பலவும் உள்ளன.

**சென்னை - தாம்பரம் பகுதியில் நள்ளிரவு நேரத்தில் வீடுகளில் புகுந்து அதிரடிச் சோதனையிடும் தமிழகப் போலீசு.**




ராஜீவ் கொலையாளிகளைப் பிடிக்கத் தேடுதல் வேட்டைக்குப் போன சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுப் படை கையில் சிக்கிய ஈழத்தமிழர்களையும், ஈழ ஆதரவாளர்களையும் துன்புறுத்தினர். புலிகள் "ஊடுருவுவதை"த் தடுப்பதற்காகக் கடற்கரையோரங்களில் நிறுத்தப்பட்ட காவல்படை புதுக்கோட்டை மாவட்டம் - ஜெகதாபட்டினம் கிராம மக்களைத் தாக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியது. சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்கப் போன அதிரடிப் படை, கோவை மாவட்டம் சின்னாம்பதி கிராமத்துக்குள் புகுந்து தாழ்த்தப்பட்ட பெண்கள் மீது கும்பல் பாலியல் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டது. சந்தனக் கடத்தல் கிரிமினல் கும்பலைப் பிடிக்கப் போன போலீசும் - வனத்துறை அதிகாரிகளும் தர்மபுரி மாவட்டம் வாச்சாத்தி கிராமத்துக்குள் புகுந்து வீடுகளைச் சூறையாடியதுடன், அங்கும் நூற்றுக்கணக்கானோர், ஆதிவாசிப் பெண்



படிப்பகம்

www.padippakam.com




தமிழ்கப் போலீசால் 'சீல்' செய்யப்பட்ட கோவை - கோட்டைமேடு பகுதி: மக்களின் நடமாடும் உரிமை பறிப்பு.

களைப் பாலியல் பலாத்காரம் செய்தனர்.

ஆகவே, விசேஷமான காலம், விசேஷமான பணி என்று போலீசார் இறங்கினாலே மக்களுக்கு ஆபத்துத்தான்.

★☆★

குஜராத், பீகார், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிறித்துவச் சிறுபான்மை மக்கள் மீது பாசிசப் பயங்கரவாதத் தாக்குதலை ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் கட்டவிழ்த்து விட்டபோது, கட்டாய மதமாற்றத்துக்கு எதிரான இயக்கம்தான் என்று பகிரங்கமாகவே பிரகடனம் செய்தது பா.ஜ.க. தலைமை. பின்னர், கிறித்துவக் கன்னிப் பெண்கள் கற்பழிப்பு, ஒரிசாவில் பாதிரியாரும் அவரது மகன்களும் உயிரோடு எரிப்பு ஆகியவை கண்டு நாடு முழுவதும் கண்டனம் எழுந்தது. அப்போது பா.ஜ.க.வின் போலீசு மந்திரி பாசிச சகுனி அத்வானி ஒரு உத்தரவு போட்டார். ''சிறுபான்மையினரைப் பாதுகாப்பதே எங்கள் கடமை. இனி எல்லாப் பாதிரியார்களுக்கும் போலீசு பாதுகாப்பு அளிக்கப்படும்'' என்றார். அதாவது இனிமேல் கிறித்துவப் பாதிரியார்கள், ''கன்னிப் பெண்கள்'' போகும் இடமெல்லாம் கூடவே இயந்திரத் துப்பாக்கியோடு இரண்டு கருப்புப் பூனைப் படையினர் நிழல்போலத் தொடர்வார்கள்.

இதன் பொருள் அல்லது விளைவு என்ன? இனி கிறித்துவப் பாதிரியார்களோ, ''கன்னிப் பெண்களோ'' சுதந்திரமாக சமுதாய சேவை மற்றும் மத ஊழியம், பிரச்சாரங்கள் செய்ய முடியாது. ''பாதுகாப்புக்காக'' என்ற பெயரில் எப்போதும் இரண்டு கருப்புப் பூனைகள் ஒவ்வொருவரையும் கண்காணித்துக் கொண்டிருக்கும். இதுதான் பார்ப்பன சாணக்கியனின் ''அர்த்த சாஸ்திர'' அரசியல் சூது. இந்து மதவெறிக் குண்டர்களிடம் இருந்து பாதுகாப்புத் தருவதாகத் தோன்றும் இந்த நடவடிக்கையின் மூலம், பாதிரியார்களையும் ''கன்னிப் பெண்களையும் '' பரோலில் விடப்பட்ட கைதிகளின் நிலையில் வைத்துவிட்டது அத்வானி - வாஜ்பாயி கும்பல்.

இதுபோன்ற பார்ப்பன சாணக்கிய அரசியல் சூழ்ச்சி என்பது ஆர்.எஸ்.எஸ். - பாசிச கும்பல்தான் கடைப் பிடிக்கிறது என்றில்லை. இந்த நாட்டை ஆண்ட, ஆளும் பல அரசியல் கட்சிகளும் இப்படிப்பட்ட சூது - சூழ்ச்சிகளைத் திறமையாகச் செய்வதுதான் அரசியல் திறமை, அரசியல் சாணக்கியம் என்று அவர்களிடையே போற்றப்படுகிறது. ஒரு இடத்தை, புறம்போக்கை ஆக்கிரமிப்பது என்றால் அங்கே கோவில் கட்டி, மன்றம் வைத்து ஏதோ சமூக சேவையில் அக்கறை இருப்பதாக நாடகமாடுவது உள்ளூர் அரசியல் பிரமுகரின் சாணக்கியம். உள்ளூர் பஞ்சாயத்து முதல் மாநில மத்திய அரசுகள் வரை, வட்ட உறுப்பினர் முதல் மாநில முதல்வர் - பிரதமர், அரசுத் தலைவர் வரை அனைத்து மட்டங்களிலும் இதே கதைதான். ஒரு சிறுநகரில் வியாபார உள்நோக்கத்தோடு ஒரு சாலையை ஒரு வழியாக்குவது முதல் நாடாளுமன்றத்தில் ஓர் அரசியல் சட்டமியற்றுவது வரை எல்லாமும் இம்மாதிரியான அரசியல் சாணக்கிய அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றன.

நாடாளுமன்ற ஜனநாயகத்திலேயே பார்ப்பன சாணக்கிய அரசியல் சூழ்ச்சிகளைக் கையாண்டு வருவதற்கு எடுத்துக்காட்டுகள் பலவும் உள்ள. முன்பு தி.மு.க. ஆட்சியில் ஊழல் குற்றச்சாட்டுகள் ஏராளமாக வந்தபோது ஊழல் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால், அது ஊழல் குற்றம் சாட்டுபவர்களையே தண்டிக்கும் சட்ட வாய்ப்புகளைக் கொண்டிருந்தது. ராஜீவ் ஆட்சியிலும், எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் தனிநபர்கள் மீது பத்திரிகைகள் அவதூறு செய்வதைத் தடுக்கும் நோக்கத்தை முன்வைத்து பத்திரிகைச் சட்டங்களைக் கொண்டு வந்தனர். ஆனால், அவை தங்கள் ஆட்சிகளின் இலஞ்ச ஊழல்கள் அம்பலமாகாமல் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடும் சட்டப் பிரிவுகளை உள்ளடக்கி இருந்தன. கல்வித் துறையை முன்னேற்றுவதாகச் சொல்லி ராஜீவ் கொண்டு வந்த நவோதயா பள்ளிகள் இந்தித் திணிப்புக்கும், மாநிலங்களின் கல்வித் துறை அதிகாரங்களைப் பறிப்பதற்கும் விரிவுபடுத்தப்பட்டது. ''சீக்கிய தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக''க் கொண்டு வரப்பட்ட ''தடா'' சட்டம் தொழிற்சங்கத் தலைவர்கள், ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், 9 வயதுக்குக் கீழான சிறுவர்கள் முதல் 70 வயதுக்கும் மேலான கிழவிகள் மீதும் பாய்ந்தது. இதே போலத்தான் தேசியப் பாதுகாப்புச் சட்டமும், அரசு துரோகச் சட்டமும்.

இந்தச் சட்டங்கள் அதிகாரிகள், போலீசு, அரசியல் வாதிகளால் தவறாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. சட்டங்கள் சரியாகத்தான் இருக்கின்றன என்பதல்ல உண்மை. அந்தந்தச் சட்டங்கள் இயற்றப்படும் போதே அவற்றைக் கேடாகப் பயன்படுத்துவதற்குரிய சட்டப் பிரிவுகளை நுழைத்து விடுகிறார்கள். எதிர்த் தரப்பில் இருந்து சிலர் சுட்டிக் காட்டினாலும், அப்படி நடக்காது என்று ஆளுவோர் தரும் வாக்குறுதியை ஏற்று அப்படியே நிறைவேற்றப்படுகிறது.

★☆★

பார்ப்பன சாணக்கிய சூழ்ச்சி அரசியலில் பா.ஜ.க. காங்கிரசுக்கு தாம் ஒன்றும் சளைத்தவரல்ல என்பதைக் கருணாநிதி எப்போதுமே நிரூபித்து வந்திருக்கிறார். சாதிக் கலவரங்களையும், மதவெறி தீவிரவாதத்தையும் ஒடுக்குவது, சட்டம் ஒழுங்கைக் காப்பது என்கிற பெயரில் தமிழ் மக்களது எல்லா ஜனநாயக உரிமைகளையும் பறிப்பதில் அவர் காட்டிவரும் வேகம் - உறுதி இதைத்தான் காட்டுகிறது.

இப்போது தமிழ்நாட்டில் எங்குமே ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகள் மட்டும்தான் பேரணிகள், பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு, தேவையானபோது அனுமதி பெற முடிகிறது. நாடாளுமன்ற சார்பற்ற சமூக - அரசியல் இயக்கங்களுக்கு இப்படிப்பட்ட ஜனநாயக உரிமைகள் அடியோடு மறுக்கப்படுகிறது. சாதாரண அரங்கக் கூட்டம் நடத்துவதற்கே போலீசு தடைவிதிப்பதும், உயர்நீதி மன்றம் வரைபோய் போராடினாலும் அங்கும் போலீசின் வாதங்கள் ஏற்கப்பட்டு அனுமதி மறுக்கப்படுகிறது.

பொதுக் கூட்டங்களில் என்னென்ன பேசலாம்; பேசக் கூடாது என்பதை போலீசே தீர்மானித்து, முன்கூட்டியே



படிப்பகம்

www.padippakam.com

எழுதி வாங்குகிறது. கோவையில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி நடத்த இருந்த நவம்பர் புரட்சி நாள் பொதுக்கூட்டம் தடை செய்யப்பட்டதோடு அதற்கான வழக்கு ஐந்து மாதமாகியும் உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. அங்கே தமிழினவாத மற்றும் சமூகக் குழுக்கள் பொதுக்கூட்ட அனுமதி கோரிய போது, அக்கூட்டத்தில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தை சேர்க்கக் கூடாது என்று போலீசு நிபந்தனை விதித்தது. மதுரையில் ஈழ ஆதரவு மாநாடு நடத்துவதற்கு உயர் நீதி மன்றத்தில் வழக்காடிய பிறகே தமிழினக் குழுக்கள் அனுமதி பெற்றன.

முக்கிய நகரங்களில் எங்கே, எப்போது ஊர்வலம் பொதுக்கூட்டம், மறியல், உண்ணாவிரதம் நடத்தலாம் என்பதை போலீசே தீர்மானிக்கிறது. மக்கள் நடமாட்டமிகுந்த மக்கள் பார்வையில் படும் இடங்களில் எல்லாம் இத்தகைய ஜனநாயகக் குரல் கொடுப்பதற்கான அமைதி வழிப் போராட்ட உரிமைகள் கூட மறுக்கப்படுகின்றன. பாபரி மசூதி இடிப்பு நாள், கோவை இந்துக் கலவரங்கள், கோவை குண்டு வெடிப்பு, அத்வானி - வாஜ்பாயி வருகை, விநாயக சதுர்த்தி என்று ஆண்டிற்குப் பல நாட்கள் போலீசு அணிவகுப்பு, அதிரடி சோதனை, அறிவிக்கப்படாத ஊரடங்கு போடப்படுகிறது. எதிர்த்தரப்பு, ஓட்டுக் கட்சி சாராத இயக்கத்தினர் ஆயிரக்கணக்கில் தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர்.




தனியார் பள்ளி அக்கிரமங்களை எதிர்த்துக் குரல் கொடுத்தற்காக கரூர் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி பொறுப்பாளர் தவமணி தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறையிலடைக்கப்பட்டார். இந்து மதவெறியை அம்பலப்படுத்தி பேசியதற்காக மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர் மீது அரசு துரோக வழக்குப் போட்டு சிறையிலடைக்கப்பட்டனர். இதுபோல பல அமைப்பின் மீதும் ஏராளமான பொய் வழக்குகள். இராஜீவ் கொலையாளிகளைத் தேடியதைப் போல இசுலாமியத் தீவிரவாதிகள் எனப் பட்டியல் போட்டு விளம்பரம் - தேடுதல் வேட்டை - பிடித்துக் கொடுப்போருக்குப் பரிசு அறிவிப்பு. அப்போது ஈழத்தமிழர்கள் அனைவரையும் விடுதலைப் புலிகள் என சந்தேகித்து வேட்டையாடியதைப் போல, இப்போது இசுலாமிய இளைஞர்கள் அன்னவரையும் அல்-உம்மா, ஜிகாத் தீவிரவாத அமைப்பினர் எனச் சந்தேகித்து வேட்டையாடுகின்றனர்.

குறிப்பான ஆதாரமோ, அடிப்படையோ எதுவுமில்லாமல், கைது செய்யப்படுபவர்கள் விடுதலையாகி விடக்கூடாது, பிணையில் வந்து விடக்கூடாது என்பதற்காகவே குண்டர்கள் சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் அடைக்கப்படுகின்றனர். சிறையிலடைத்துவிட்டு ஆவணங்கள் தருவது, முறையீடுகளுக்குப் பதிலளிப்பது ஆகிய சட்ட சடங்குகளைக் கூடக் கடைப்பிடிப்பதில்லை. இதைப் பயன்படுத்தி வாய்ப்புள்ள சிலர் உயர்நீதி மன்றத்துக்குப் போகும்போது, சட்டமுறைகளை மீறி அவர்கள் சிறையில் அடைக்கப்ப்ட்டதற்காக போலீசும், அரசும் கண்டனத்துக்குள்ளாகி விடுவிக்கப்படுகின்றனர். இந்த வாய்ப்பு வசதியில்லாதவர்கள் சிறையிலேயே வாடுகின்றனர்.

மொத்தத்தில், கடந்த ஓராண்டுக்கும் மேலாக தமிழ்நாட்டில் போலீசு - அதிகார வர்க்கத்தின் வரைமுறையற்ற ஆதிக்க ஆட்சிதான் நிலவுகிறது. இந்த வகையில் அதிகாரத்தில் இல்லாமலேயே தான் விரும்பும் ஆட்சிமுறையைத் தொடரச் செய்கிறது பாசிச ஜெயா கும்பல். கோல் எடுத்தால் ஆடும் குரங்கு போல தீவிரவாத பீதி, ஆட்சிக் கவிழ்ப்பு பீதி கிளம்புவதைக் கண்டு ஆடுகிறார், கருணாநிதி. பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் ஒவ்வொன்றும் தத்தமது சுயநல நோக்கோடு இந்தப் பீதியைத் திட்டமிட்டுக் கிளப்புகின்றன. "தீவிரவாதி"களை மையமாக வைத்து "ரீல், ரீலாக" சுருள்விட்டுக் கொண்டிருக்கிறார்கள், சினிமாக்காரர்கள். ஆபாசத்தையும் வன்முறையையும் போட்டி போட்டுக் கொண்டு திணித்து சினிமாக்காரர்கள் வியாபாரம் செய்வதைப் போல, பத்திரிகைக்காரர்கள் குறிப்பாக, தினமலர், தமிழன் எக்ஸ்பிரஸ், ஜூனியர் விகடன் ஆகிய பார்ப்பன ஏடுகள் தீவிரவாதப் பீதியைப் பரப்புகிறார்கள். மொத்தத்தில், தீவிரவாதம் தேசியவாதம் என்கிற பார்ப்பன நடுத்தர வர்க்கப் பத்தாம் பசலித்தனம் தமிழ்நாட்டு மக்களிடையே ஓயாது பிரச்சாரம் செய்யப்படுகிறது.

சிறையிலுள்ள இசுலாமிய தீவிரவாத இளைஞர்கள் தனிமைக்கொட்டடி, இந்து மதவெறி போலீசு - சிறை அதிகாரிகளின் சித்திரவதைக்குள்ளாகும் போது அதை எதிர்த்தும், சாதாரண ஜனநாயக உரிமைகள் கோரினாலும் சிறையில் பயங்கர ஆயுதங்கள் குவிக்கப்படுவதாகவும், எப்போதும் கலவரங்கள் மூழும் என்றும் பீதியூட்டும் வதந்திகளை - கிசுக்கிசுக்களைப் பார்ப்பன 'ஏடுகள் எழுதுகின்றன. இதையே ஆதாரமாக வைத்து மத்திய உளவுத்துறை எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்புகிறது. உடனே இசுலாமிய இளைஞர்கள் மீது அதிரடிப் போலீசை ஏவித் தாக்குகிறது, கருணாநிதி அரசு.

உளவுத்துறை என்றாலே, தாங்கள் செயல்படுவதாகக் கணக்குக் காட்டும் வகையில் பொய்களையும் வதந்திகளையும் உண்மைகளாகச் சித்தரித்து வாராந்திர மாதாந்திர எச்சரிக்கை அனுப்புவது வழக்கம். காய்ந்த மரத்தில் குருட்டுத் தனமாகக் கூட கல்லெறிந்தால் பிஞ்சோ காயோ விழுவதில்லையா? அதுபோல ஏதாவது சம்பவம் நடந்து விட்டால், முன் கூட்டியே எச்சரித்தோம்; நீங்கள்தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லிக் கொள்ளவும் இது வசதி. ஆனால், பல முறை உளவுத்துறை எச்சரிக்கை பொய்த்துப் போவதற்கு யாரும் பொறுப் பேற்பதில்லை.

இதெல்லாம் கருணாநிதிக்கும் தெரியும். தமிழ்நாட்டுச் சிறைகளில் எல்லாம் அதிரடிச் சோதனை நடத்தியும் ஆணிகள், கண்ணாடித் துண்டுகள், தீக்குச்சிகள், அலுமினியத் தகரங்கள் தான் சிக்கின என்று வெறுங்கையோடு திரும்பினர். இதையே "பயங்கர ஆயுதங்கள் சிக்கின" என்று பார்ப்பன ஏடுகள் எழுதுகின்றன. செல் ஃபோன்கள், வெடி குண்டுகள், துப்பாக்கிகள், ரொக்கப் பணம் சகிதமாக தீவிரவாதிகள் சிறைகளில் தனி ராஜ்யம் நடத்தியதாக இந்த ஏடுகள் முன்பு புளுகின. "அப்படிப் பயங்கர ஆயுதங்கள் எதுவும் சிக்கவில்லை" என்கிறார் கருணாநிதியின் சிறைத்துறை அமைச்சர். இருந்தாலும் வெறும் தீவிரவாதப் பீதி கிளப்பப்படுவதை ஒப்புக் கொண்டு தமிழ்நாட்டு மக்கள் நிம்மதியாக வாழக் கருணாநிதி அரசு அனுமதிக்குமா? அனுமதிக்காது! மக்கள் மற்றும் அரசியல் தலையீடற்ற போலீசு அதிகார வர்க்க ஆதிக்க ஆட்சிதான் திறமையான நிர்வாகம் என்ற பார்ப்பன சாணக்கிய அரசியலைத்தான் கருணாநிதியும் ஏற்றுக் கொண்டுள்ளார். நல்லது போலத் தீங்கு செய்வதையே கருணாநிதியும் தனது ஆட்சி முறையாகக் கொண்டுள்ளார்.

• ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# சாதி - தீண்டாமை எதிர்ப்பில் சி.பி.எம்.-இன் இரட்டை வேடம்

மேடைகளில் வாய்கிழிய புரட்சி பேசும் சிபிஎம் கட்சிப் பிரமுகர்களில் பலர் சொந்த வாழ்க்கையில் எப்படிப்பட்ட ஆதிக்க சாதி வெறியர்களாகச் செயல்படு கின்றனர் என்பதற்குக் கீழ்க்கண்ட சம்பவம் ஒரு சான்று.

ராமன் - கஸ்தூரி என்ற தம்பதியினர் போடியில் வாழும் மேல்சாதியினர். ராமர் சிபிஎம் கட்சியின் போடி வட்டக் குழு உறுப் பினர். இவரது துணைவியார் கஸ்தூரி 'மார்க் சிஸ்டு' கட்சி மாதர் சங்கத்தின் மாநிலத் துணைச் செயலாளர். மேலும் மாவட்ட மாதர் சங்கத் தலைவர், 'மார்க்சிஸ்டு' கட்சி யின் மாநிலக்குழு உறுப்பினர், போடி நக ராட்சி உறுப்பினர். இத்தம்பதியினரின் மூன்று மகள்களில் கடைசிப் பெண் நவபா ரதி.

நவபாரதி, பள்ளியில் படிக்கும் காலத் திலிருந்தே பெ. சக்தர் என்பவரைக் காத லித்து வந்தார். போடி சர்ச் தெருவில் வாழும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பெரிய சாமி என்பவரின் மகன் சக்தர். குடும்பத்தில் ஒரே மகன். இவரது இரு மூத்த சகோதரிக ளுக்கும் மணமாகி விட்டது. பள்ளித் தலை மையாசிரியராக இருந்து ஓய்வு பெற்ற பெரி யசாமி, இன்று போடி நகர த.மா.கா. கட்சி இணைச் செயலாளராக உள்ளார். மகனின் காதல் பற்றி இவருக்குத் தெரியாது.

ஆனால், நவபாரதியின் வீட்டிற்குத் தெரிந்து, அவரது தாய்மாமன் கண்ணன், நவபாரதியை அடித்து, மிரட்டியுள்ளார். நவ பாரதியின் மூத்த சகோதரியின் கணவன் இக்காதலை எதிர்த்து, 'நான் சொல்லும் மாப் பிள்ளையைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். இல்லை என்றால் நானே கற்ப ழித்து விட்டு உன்னை இரண்டாம் தாரமா கத் திருமணம் செய்து கொள்வேன்' என்று மிரட்டியுள்ளார்.

பல்வேறு மேடைகளில் பெண்ணினத் தின் விடுதலை பற்றியும், சாதி - தீண்டா மைக் கொடுமையை எதிர்த்தும் மேடைக ளில் முழங்கிய நவபாரதியின் தாய் கஸ்தூரி முன்னிலையில் தான் இவை நடந்துள்ளன.

இளங்கலைப் பட்டம் பெற்று, கூட்டுற வுப் பட்டயமும் பெற்றுள்ள நவபாரதி 28.2.99 அன்று சக்தர் வீட்டிற்குச் சென்று நடந்தவற்றைச் சொல்லி, 'இனி வீட்டிற்குச் சென்றால் அடித்தே கொன்றுவிடுவார்கள்' எனக் கூறினார். நிலைமையை உணர்ந்த சக்தரின் நண்பர்கள் உடனடியாக இருவருக் கும் திருமணத்தை நடத்தி முடித்தனர்.

இத்திருமணத்தை உடைத்து பெண்ணைத் தம்முடன் கொண்டு சென்றுவிட வேண்டும் என்று கஸ்தூரி, ராமர், கண் ணன் மட்டுமின்றி, சிபிஎம் கட்சியின் போடி வட்டாரச் செயலர் எஸ்.கே. பாண்டியும் சதி வேலையில் இறங்கினர்.

ஏற்கனவே மூன்று சாதி மறுப்புத் திரு மணங்களைப் பிரித்து வைத்த ஆதிக்க சாதி வெறியனும், த.மா.கா. கட்சியைச் சேர்ந்த போடி நகர் மன்றத் தலைவருமான சங்க ரேஸ்வரனிடம் சென்று சதியாலோசனை நடத்தி, நவபாரதியைக் கடத்தி வந்துவிட்ட னர். சக்தரும் அவரது நண்பர்களும் போலீசி டம் முறையிட்டனர்.

போலீசு ஆய்வாளர் பாலகிருஷ்ணன் கஸ்தூரி - இராமரை வரச் சொல்ல, இராமர் மட்டும் எஸ்.கே. பாண்டியுடன் போலீசு நிலையம் வந்தார். பி.ஏ. பட்டமும், கூட்டுற வுப் பட்டயமும் பெற்ற நவபாரதியை 'மைனர்' பெண் என்று எஸ்.கே. பாண்டி கூசாமல் புளுகினார். இதே பாண்டிதான் 6 மாதத்திற்கு முன் சர்ச் தெருவில் கூட்டம் போட்டு சாதி வேற்றுமை கூடாது, கலப்புத் திருமணம் செய்ய வேண்டும் என மேடை யில் முழங்கியவர்.

தமது கட்சிக்காரர் மகள் என்றதும் 'நீங்க வேறுசாதி, பெண் வேறு சாதி; கல்யா ணம் எப்படி நடக்கும்?' என்று சாதி வெறியு டன் பேசியுள்ளார்.

இந்தக் கட்டத்தில் செய்தியைக் கேள் விப்பட்ட விவசாயிகள் விடுதலை முன்ன ணித் தோழர்களும், புதிய ஜனநாயகம் இதழ் நிருபரும் தலையிட்டனர். இதைக் கேள் விப்பட்ட போடி வட்டார சி.பி.எம் கட்சித் தலைமை, தமது பிழைப்புவாத புரட்சி வேடத்தை விவிமுவினர் சந்தி சிரிக்க வைத்து விடுவார்கள் என்று பெண் வீட்டா ரிடம் கெஞ்சிக் கூத்தாடி சம்மதிக்க வைத்த னர்.

பிறகு தேனி மாவட்ட சிபிஎம் செயலா ளர் ராஜப்பன் தலைமையில் போடி கட்சி அலுவலகத்தில் திருமணத்தை நடத்தினார் கள். ஆனால், இத்திருமணத்திற்கு பெண் வீட்டார் ஒருவர் கூடவரவில்லை.

"இந்த மாதிரி புரட்சிகர திருமணத்தை சிபிஎம் ஒன்றுதான் நடத்த முடியும்" என்று ராஜப்பன் வாய் கூசாமல் புளுகியதைக் கேட்ட சர்ச் தெரு இளைஞர்கள் குமுறினார் கள்.

தகவல்:
வி.வி.மு.,
போடி வட்டம்.

## "அரசியல் ரவுடிகளை காந்தி வழிப் போராட்டங்களால் ஒழிக்க முடியாது" — சி.பி.எம். கட்சி உறுப்பினரின் ஒப்புதல் வாக்குமூலம்

தேனி மாவட்டம் போடிமெட்டு ஊரில் சிபிஎம் கட்சியின் வார்டு கவுன்சில ராக இருப்பவர் சுப்பிரமணி. போடி வட்ட ஜனநாயக வாலிபர் சங்கத் தலைவராகவும் இருக்கிறார்.

இந்த போடிமெட்டு கேரள - தமிழ் நாட்டு எல்லையில் இருக்கிறது. இங்கு சோதனைச் சாவடி உள்ளது. ஆனாலும், இங்கு கடத்தல் தொழில் சர்வசாதாரணமாக நடக்கிறது. அரிசி, ஏலக்காய், காபி, தேயிலை, மரங்கள் எனப் பல்வேறு பொருட்கள் கடத்தப்படுகின்றன.

தேனி மாவட்ட பாரதீய ஜனதா கட்சி செயலாளரான வி.எஸ். மணி, சில சமூக விரோதிகளைச் சேர்த்துக் கொண்டு, இந்தக் கடத்தல் தொழிலைச் செய்து வருகிறான். இந்தச் சமூக விரோத பாஜக கும்பல் "லோடு மேன் சங்கம்" என்ற பெயரில் ஒன்று சேர்ந்துள்ளது.

இச்சமூக விரோத கும்பல் போடிமெட் டுப் பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்று வந்ததை, சுப்பிரமணி ஏற்கனவே தடுத்து நிறுத்தி விட்டார். இப்பொழுது, இவர்களின் கடத்தல் தொழிலையும் சுப்பிர மணி எதிர்த்ததால், 20.12.98 அன்று பி. கிருஷ்ணன் என்ற சமூக விரோதி தலைமை யில் 18 பேர் சுப்பிரமணியை போடி மெட்டு சந்தையில் வைத்து இரத்தம் சொட்டத் தாக் கினார்கள்.

வி.எஸ். மணி தலைமையில் உள்ள இந்த சமூக விரோத ரவுடி கும்பல்களுக்கு போலீசும் உடந்தை. எனவே ஊரில் யாரும் இவர்களது சமூக விரோதச் செயல் களை எதிர்க்கத் துணிவதில்லை.

புரட்சியை நேசிக்கும் சிலர் இன்னமும் சிபிஎம் கட்சியை நம்புகின்றனர். அதனால் தான் இப்படிப்பட்ட சமூக விரோதிகளைத் துணிவுடன் எதிர்க்கின்றனர். ஏற்கனவே மதுரையில் லீலாவதி என்ற வார்டு கவுன்சி லரை சிபிஎம் கட்சி பலி கொடுத்துள்ளது. இங்கும் இந்த சமூக விரோத, பார்ப்பன மத வெறி பாசிச கும்பலுக்கு எதிராக ஆர்ப்பாட் டம் நடத்துவது, சுவரொட்டிகள் ஒட்டுவது என்பதைத் தாண்டி அடுத்த கட்ட நடவடிக் கைகளில் சி.பி.எம். இறங்கத் தயாராக இல்லை. இச்சமூக விரோதிகளின் வன்மு றைத் தாக்குதலை, இப்போராட்டங்களின் மூலமே அடக்கிவிட முடியும் என அணி களை நம்பச் சொல்கின்றனர்.

ஆனால், பா.ஜ.க. ரவுடிகளை எதிர்த்து வாழ்ந்து வரும் சுப்பிரமணியோ, "போடி காவல் நிலையமும், அதிகாரிகளும் பா.ஜ.க. ரவுடிகளுக்கு கையாட்களாக இருக் கும் வரை வெறும் ஆர்ப்பாட்டமும், போஸ் டராலும் ஒன்றும் செய்ய முடியாது என்ப தைத் தெரிந்து கொண்டேன்" எனக் கூறுகி றார்.



படிப்பகம்

www.padippakam.com

பஞ்சாலை நெருக்கடி:

# கோவையில் வெடிக்கக் காத்திருக்கும் குண்டு

**உள்நாட்டுச் சந்தையை அந்நிய நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கும், உள்நாட்டுத் தொழிலாளர்களின் நலன்களைப் புறக்கணிக்கும் தொழிற் கொள்கையையும் அரசியலையும் முறியடிக்காமல், பஞ்சாலை நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது!**

மிகப்பெரும் அளவில் சேதத்தை விளைவிக்கும் தொடர் வெடிகுண்டுகள் கோவை மற்றும் பல முக்கிய இடங்களில் வெடிப்பதற்கு நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன. இந்தக் குண்டுகள் எல்லாம் இசுலாமியத் தீவிரவாதிகள் வைத்தவையல்ல. இவை, பல ஆயிரம் தொழிலாளர் குடும்பங்களைச் சிதைத்துச் சின்னாபின்னப் படுத்திவிடுமாறு பஞ்சாலைத் தொழிலுக்கு வைக்கப்பட்டுள்ள வெடிகுண்டுகள். அந்நிய ஏகாதிபத்திய சதிகாரர்களால் திட்டமிடப்பட்டு, நரசிம்ம ராவ் - மன்மோகன் சிங் - சிதம்பரம் ஆகிய கைக்கூலிகளால் வைக்கப்பட்டு, அடுத்தடுத்து வந்த ஐ.மு. மற்றும் பா.ஜ.க. அரசுகளால் அடைக்காக்கப்பட்டு வருகின்றன.

பஞ்சாலைத் தொழிலுக்கு ஏற்படவிருக்கும் பேராபத்து குறித்து ஆலை அதிபர்கள், பொருளாதார நிபுணர்கள், தொழிற்சங்கத் தலைமையினர் மீண்டும் மீண்டும் எச்சரிக்கின்றனர். இதுவரை கண்டிராத, நீடித்த கடும் நெருக்கடியை பஞ்சாலைத் தொழில் சந்தித்து வருகின்றது. தமிழ்நாட்டிலுள்ள 800-க்கும் மேற்பட்ட பெரிய, சிறிய பஞ்சாலைகளில், 200 பஞ்சாலைகள் மூடப்பட்டு கிடக்கின்றன. மீதமுள்ள ஆலைகளில் 300-க்கும் மேற்பட்டவை பாதி அளவு திறனில்தான் இயங்குகின்றன. கோவை, சேலம், மதுரை, புதுக்கோட்டை, திருச்சி திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் மூடிக்கிடக்கும் இந்த ஆலைகளில் இருந்து 50,000 தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.


பஞ்சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருளாகிய பஞ்சு உற்பத்தி குறைந்து, பற்றாக்குறையும் கடும் விலையேற்றமும் ஏற்பட்டுவிட்டது. நூல் மற்றும் துணி ஏற்றுமதி வீழ்ச்சியேற்பட்டு கிடங்குகளில் குவிந்து கிடக்கின்றன. ஏற்றுமதியான, விற்பனையான சரக்குகளுக்குப் பணவரவுமின்று நிரந்தர நிலுவையாகி விட்டது. குறிப்பாக, தென்கிழக்காசிய நாடுகளின் நாணய மதிப்பு வீழ்ச்சி மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அந்நாடுகளுக்கான ஏற்றுமதி அடைபட்டுப் போனதுடன், நிலுவைத் தொகை வரவும் நின்றுவிட்டது. இதனால் தமிழ்நாட்டின் பெரும்பான்மையான பஞ்சாலைகள் நட்டமேற்பட்டுத் திவாலாகும் நிலையே நிலவுகிறது. இந்த நிலையிலிருந்து மீள்வதற்கான வாய்ப்பே கண்ணுக்குத் தெரியவில்லை.

நேபாளம், சீனா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் இருந்து இந்தியத் துணித் தொழில் கடும் போட்டியை எதிர்கொள்கிறது. உலகத் துணி வர்த்தகத்துக்கு உலக வர்த்தகக் கழகம் விதித்துள்ள கோட்டா மற்றும் கட்டுப்பாடுகள் 2004-ஆம் ஆண்டு முடிவுக்கு வருகிறது. அதன் பின் உலகச் சந்தையில் கடும் போட்டியை இந்தியத் துணித் தொழில் சந்திக்க வேண்டியுள்ளது. அதற்குள் துணித்தொழிலை அதிநவீனப்படுத்தாவிட்டால் அப்போட்டியில் இந்தியா நிச்சயம் வீழ்ச்சியுறும். இத்துறையை நவீனப்படுத்துவதற்காக மைய அரசு 25,000 கோடி ரூபாய் பெறுமான திட்டம் தீட்டியிருந்தாலும், அத்திட்டத்திற்குள் தென்னிந்திய ஆலைகளை, குறிப்பாக பஞ்சு - நூற்பாலைகளைச் சேர்க்க மறுத்து, முற்றாகப் புறக்கணித்து விட்டது. நீண்டகால நவீனமயமாக்கலுக்கான வாய்ப்புகள் மட்டுமல்ல, இப்போதே அன்றாட - நடப்பு மூலதன நிதிக்கே வழியின்றி, தமிழகப் பஞ்சாலைகள் தவிக்கின்றன; தொடர்ந்து நட்டமும், தேக்கமும் ஏற்பட்டு வருவதால், இந்தப் பஞ்சாலைகள் கோரும் கடனை நம்பித் தருவதற்கு நிதி நிறுவனங்கள், குறிப்பாக அரசுத்துறை வங்கிகளே மறுக்கின்றன.

இந்த நெருக்கடி பெரிய, சிறிய நூற்பு ஆலைகள் - துணி ஆலைகளை மட்டும் பாதிக்கவில்லை. கைத்தறி நெசவு, விசைத்தறி, பின்னலாடை, ஆயத்த ஆடை, ஆலைகளுக்குத் தேவையான உதிரி உறுப்புகள் தயாரிக்கும் பொறியியற் பட்டறைகள், லாரிப் போக்குவரத்து என தமிழ்நாட்டில் மட்டும் ஏறக்குறைய ஒரு கோடி மக்களின் வாழ்வையும் பாதித்துள்ளது.

இந்த நெருக்கடிகளுக்கெல்லாம் காரணம், பஞ்சு ஏற்றுமதி - இறக்குமதி வியாபாரம் செய்யும் பெரும் தரகு முதலாளிகள்; கொள்ளை இலாப வெறியும் நிர்வாகச் சீர்கேடும் மலிந்த ஆலை அதிபர்கள் கூட்டம்; உலக வர்த்தகக் கழகம், உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றின் சூத்திரதாரிகளான அமெரிக்கா மற்றும் பிற மேல்நிலை வல்லரசுகள்; கட்டளைகளை ஏற்று அவற்றின் புதிய பொருளாதாரக் கொள்கையை அமலாக்கும் காங்கிரசு, ஐ.மு., பா.ஜ.க. ஆட்சியாளர்கள்; ஆலை அதிபர்கள் மற்றும் அரசின் கூட்டுச் சதியில் பங்கேற்று, சமரசப் பாதையில் தொழிலாளர்களை இட்டுச் செல்லும் துரோகத் தொழிற் சங்கங்கள்.

**தாராளமயத்தால், தமிழ்நாட்டிலுள்ள 800-க்கும் மேற்பட்ட பஞ்சாலைகளில் 200 பஞ்சாலைகள் மூடப்பட்டு விட்டன; 300-க்கும் மேற்பட்ட ஆலைகள் பாதியளவு திறனில்தான் இயங்குகின்றன.**




படிப்பகம

www.padippakam.com




ஆனால், இந்த நான்கு சக்திகளால் ஏற்பட்ட ஆலை நெருக்கடியின் சுமை மட்டும், இதற்கு எந்த வகையிலும் பொறுப்பாகாத உழைக்கும் மக்கள், குறிப்பாக, பருத்தி உற்பத்தி விவசாயிகள் மற்றும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் மீது ஏற்றப்படுவதுதான் மிகப் பெரிய கொடுமை.

பருத்திப் பயிர் பூச்சி தின்றும், கருகியும் போய், எஞ்சியதற்கும் உரிய விலையின்றி பஞ்சு வர்த்தகச் சூதாடிகள் - தரகு வியாபாரிகளின் கொள்ளையினால், வறுமையின் பிடியில் சிக்கிய விவசாயிகள், குடும்பம் குடும்பமாகத் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள்.

50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை பறிக்கப்பட்டு வெளியே வீசியெறியப்பட்டுள்ளனர். எஞ்சிய தொழிலாளர்களுக்கும் நாளில் பாதி நேர வேலை, வாரத்தில் பாதி நாட்களே வேலை. பல மாதங்கள் சம்பளப் பட்டுவாடா செய்யப்படாமல், ஊதியமின்றியே உழைக்கின்றனர். ஊதியத்தோடு, போனஸ், (கிராச்சுவிட்டி) ஓய்வுறுதியீட்டுத் தொகை ஆகிய பலவகைப் பண நலன்களும் நிலுவையில் வைக்கப்படுகின்றன. கட்டாய - விருப்பு ஓய்வு பெற்றவர்களுக்கும் ஈட்டுத் தொகை தருவதில்லை.

பஞ்சாலை நெருக்கடிகளுக்கெல்லாம் காரணமாக இருப்பவர்களான தரகு வியாபாரிகளும், ஆலை அதிபர்களும், அரசிடமும், தொழிலாளர்களிடமும் திமிரான "கோரிக்கை"களை முன்வைக்கின்றனர். கச்சாப் பொருளான பஞ்சு பற்றாக்குறை - விலையேற்றத்தால் உள்நாட்டு ஆலைகள் மூடப்பட்டுக் கிடக்கும் இந்தச் சமயத்திலும், ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்தும்படி அரசை நிர்பந்தித்து, அதையும் சாதித்துக் கொண்டுள்ளனர். பின்னர் பற்றாக்குறையைக் காரணம் காட்டி, இறக்குமதியும் செய்து இரண்டு வகையிலும் கொள்ளையடிக்கின்றனர்.

அப்புறம் ஆலை அதிபர்கள் செய்வதோ தண்டனைக்குரிய கிரிமினல் குற்றங்கள். ஆனால் மதிப்புக்குரிய சமூகப் பிரமுகர்களாக சபாரி சூட், குளுகுளு கார், செல்ஃபோன் சகிதமாகத் திரிகிறார்கள். தாராளமயம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கைப்படி நூற்பாலை - நெசவாலைகளுக்கான "லைசென்சு" முறையை 1991-இல் நரசிம்ம ராவ் - மன்மோகன் சிங் கும்பல் ரத்து செய்தது. இதுதான் சமயமென்று ஆலை அதிபர்கள் திண்டுக்கல், உடுமலை போன்ற பகுதிகளில் நூற்றுக் கணக்கான சிறு ஆலைகளை நிறுவினர். கோவை மாநகரத் தொழிலாளரைப் பழிவாங்கவும், கிராமப்புறத் தொழிலாளரை மலிவான ஊதியத்துக்குச் சுரண்டவும் சிறிய ஆலைகளுக்கான சலுகைகளைப் பெறவும், வரி ஏய்ப்பு போன்ற கருப்புப் பணம் - கள்ளச் சந்தைக்காகவும் இப்படிச் செய்தனர். ஏற்றுமதிக்கான சலுகைகளைப் பயன்படுத்தி ஏராளமாக சம்பாதித்தனர். அதுவரை பருத்தி நூல் ஏற்றுமதியில் முதலிடம் வகித்த பாகிஸ்தானையும் விஞ்சி 1996-இல் உச்சபட்ச இலாபம் ஈட்டினர். அதன்பிறகு, குறிப்பாக, தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்றுமதி வீழ்ச்சியுற்று தேக்கம் - பின்னடைவு ஏற்பட்டது.

இப்போது தேவைக்கு மேலான உற்பத்தித் திறன், அதாவது மூன்றிலொரு பங்கு கதிர்களும் தறிகளும் உபரியாகிவிட்டது; இவற்றைக் குறைக்க வேண்டும். அதற்காக தேசியத் துணிக் கழகம் (என்.டி.சி.) மற்றும் கூட்டுறவு ஆலைகளை மூடிவிட வேண்டும் என்று தனியார் ஆலை அதிபர்கள் அரசை நிர்ப்பந்திக்கின்றனர். ஆலைகளை நவீனப்படுத்தவும், கிடங்குகளில் தேங்கிக் கிடக்கும் உற்பத்தி சரக்குகளுக்கு ஈடாகவும், ஆலைகளை நடத்தவும் கோடி கோடியாக அரசு கொட்டிக் கொடுக்க வேண்டுமாம்! தொழிற்சங்கத் தலைமை துணிச்சலான முடிவுகள் எடுத்து ஆலைமூடல், கதவடைப்பு (லே.ஆ.ஃப்), ஊதிய வெட்டு - ஊதிய முடக்கம், விருப்பு ஓய்வுத் திட்டம் ஆகியவற்றைத் தொழிலாளர்கள் ஏற்கும்படி செய்ய வேண்டுமாம்!

எப்படி இருக்கிறது பாருங்கள்! யாரைக் கேட்டுத் தறிகளையும் கதிர்களையும் இந்த முதலாளிகள் வரைமுறையின்றிப் பெருக்கிக் கொண்டார்கள்? புதிதுபுதிதாக ஆலைகளை நிறுவிக் கொண்டார்கள்? அரசுத்துறை மற்றும் கூட்டுறவுத்துறை ஆலைகளை மூடச் சொல்வதற்கு இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? இந்த ஆலைகளை மூடுவதால், அவற்றின் மூலம் ஏற்படும் தொழில் போட்டிகளுக்கு முடிவு கட்டி ஏகபோகமாகக் கொள்ளையடிக்கலாம் என்பதுதானே இவர்களின் நோக்கம்!

தனியார் ஆலை அதிபர்களின் கொள்கை என்ன? சுதந்திரமான - வெளிப்படையான தொழிற் போட்டிதானே தொழில் வளர்ச்சிக்கான அடிப்படையாக இருக்க வேண்டும். அதன்படியே அரசுத்துறை, கூட்டுறவுத்துறை ஆலைகளுடன் போட்டி போட்டு இலாபகரமாகத் தனியார் ஆலை அதிபர்கள் தொழில் நடத்த முயலுவதுதானே நியாயமாகும். அதைவிட்டு, தாம் ஏதோ வெற்றிகரமாகத் தொழில் நடத்துவது போல, நலிவடைந்த அரசுத்துறை, கூட்டுறவுத்துறை ஆலைகளை மூடிவிட வேண்டும் என்று யோசனை கூறுகிறார்கள். அந்த ஆலைகளின் நலிவுக்கு அதிகார வர்க்கத்தின் நிர்வாகத் திறனின்மை, இலஞ்ச ஊழல்கள்தான் காரணம். அது ஒரு புறம் இருந்தாலும், இதெல்லாம் "இல்லாத" தனியார் ஆலைகள் நலிவடைவது ஏன்?

ஏற்கனவே தனியாரால் நடத்தப்பட்டு, நலிவடைந்து விட்டதாகக் காரணம் காட்டி மூடப்பட்ட ஆலைகளை நடத்துவதற்காக அரசு ஏற்றவைதான் தேசியத் துணி ஆலைக் கழகம் (என்.டி.சி.). இவை தொடர்ந்து இயங்குவதற்கும், நவீனப்படுத்துவதற்கும் மூலதனம் தர மறுத்த அரசு, முதலாளிகளின் யோசனைப்படி என்.டி.சி. ஆலைகளிலும் 50-க்கு மேல் மூடிவிட்டது. எஞ்சிய ஆலைகளையும் மூடி, தொழிலாளர்களின் வாழ்வைப் பறிக்கவே இவர்கள் சதி செய்கிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

தனியார் ஆலை அதிபர்களோ, தமது பங்குதாரர்களையும், அரசையும், தொழிலாளர்களையும் ஏய்த்து விட்டு, ஆலை மூலதனத்தில் பெரும்பகுதியைக் கொள்ளை இலாபம் தரும் வேறு தொழில்களில் முதலீடு செய்கின்றனர். இதோடு, சட்டப்படி தண்டனைக்குரிய கிரிமினல் குற்றங்கள் புரிகின்றனர். தொழிலாளர்களுக்கு உரியகாலத்தில் ஊதியமளிக்க மறுப்பது, தொழிலாளரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட (பி.எஃப்., இ.எஸ்.ஐ.) தவணைத் தொகைகளையும், அவற்றுக்குரிய தம்பங்குகளையும் அரசு, கூட்டுறவு பண்டக சாலைகள், நாணயசங்கங்களுக்குச் செலுத்தாமல், ஆலை ஆதிபர்களே சுருட்டிக் கொண்டு வருவது கிரிமினல் குற்றமல்லவா?

இந்தக் கிரிமினல் குற்றங்களுக்கெல்லாம் உடந்தையாக இருக்கும் அரசு, தற்போது பஞ்சாலை நெருக்கடிகளில் இருந்து ஆலை அதிபர்களை மீட்பதற்காகத் தொழிலாளர்களின் நலன்களைப் பலிகடா ஆக்குகிறது. ஆலைமூடல், விருப்ப ஓய்வு, தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வது ஆகிய தொழிலாளர் விரோத நடவடிக்கைகளில் முதலாளிகளுடன் ஒத்துழைக்கிறது. நவீனமயமாக்கலுக்கு மூலதனம் என்று பல ஆயிரம் கோடி ரூபாய் அரசு நிதியை வாரித்தருவதோடு, ஏராளமான சலுகைகளும் அளிக்கிறது.

தரகு வியாபாரிகள் - ஆலை அதிபர்கள் - அரசின் கூட்டுச்சதியைப் போர்க்குணத்துடன் எதிர்த்துப்போராடி முறியடிப்பதற்கு பதில், துரோகத் தொழிற்சங்கங்கள் கையூட்டு வாங்கிக் கொண்டு, சட்டவாத சமரச வழிகளில் தொழிலாளர் வாழ்வைப் பலியிடவே வேலை செய்கின்றன. ''எப்படியாவது ஆலைகள் மூடப்படுவதைத் தடுத்துவிடுவதே ஒரே நோக்கம்'' என்கிற முறையில் ஆலை அதிபர்களுக்காக அரசிடம் வாதாடுகின்றன. தொழிலாளர்களுக்கு வட்டிக்குக் கடன் தருவது முதல் பேரவைக் கூட்டங்களை, ''தண்ணி, பிரியாணி, சீட்டாட்டக் கூத்துக்களாக'' மாற்றிச் சீரழிப்பது வரை தொழிலாளர்களின் வர்க்கக் குணத்தை மழுங்கடிப்பதே துரோகச் சங்கங்களின் நடைமுறையாகிவிட்டது. இன்று ஆலை அதிபர்களும், ஓட்டுச் சீட்டு தொழிற்சங்கத் தலைமைகளும் எதிரெதிரான நலன்களைக் கொண்ட பகைமையான சக்திகளாக இல்லை. ஒன்றுக்கொன்று ஒத்துழைக்கும் நட்பு சக்திகளாகவே உள்ளன. இதுகுறித்து ஆலை அதிபர்களே பகிரங்கமாகப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இந்த நிலை மாற வேண்டும். தொழிற்சங்கத் துரோகத் தலைமையைத் தொழிலாளர்கள் தூக்கி எறிய வேண்டும். புரட்சிகரத் தலைமையில் அணிதிரள வேண்டும். கிரிமினல் குற்றங்களுக்காக ஆலை அதிபர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இலஞ்ச ஊழல்கள் புரியும் அரசுத்துறை, கூட்டுறவுத்துறை அதிகாரவர்க்க முதலாளிகளைக் கையும் களவுமாகப் பிடித்துத் தண்டிக்க வேண்டும்.

உள்நாட்டுச் சந்தையைக்கூட அந்நிய நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கும் உலக வங்கி, ஐ.எம்.எஃப். உலகவர்த்தகக் கழகத்தின் கட்டளைகளை நிராகரித்து, ஏற்றுமதிக்கான சந்தையை மட்டும் குறிவைத்துத் திட்டமிட்டுத் துணி ஆலைகள் இயக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும். உள்நாட்டுத் தேவைக்கான திட்டமிடுதலை அடிப்படையாகக் கொண்டு ஆலைகள் இயங்க வேண்டும். உள்நாட்டு மக்களின் தேவை, உள்நாட்டுத் தொழிலாளர்களின் நலன்களைப் புறக்கணிக்கும் தொழிற்கொள்கை, அரசியலை எதிர்க்காதவரை, நெருக்கடியிலிருந்து பஞ்சாலைகள் மீளமுடியாது.

• மாதவன்

# மேல்சாதி வெறியர்களின் கூடாரமாக அத்திப்பாளையம் மேல்நிலைப் பள்ளி

**கோ**வை மாவட்டத்திலுள்ள அத்திப்பாளையம் கிராம சுதந்திர மேல்நிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரியும் திரு. ச. முரளி என்பவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர். படித்து, சமூக அந்தஸ்தும், பொறுப்பும் மிக்க அரசுப் பதவியில் இருந்தாலும், ஆசிரியர் முரளி, பணிபுரியும் இடத்திலேயே தீண்டாமைக்கு ஆளாகி வருகிறார்.



ஆசிரியர் முரளி

இப்பள்ளித் தலைமை ஆசிரியர் இரவிச்சந்திரன், முதுகலை ஆசிரியர் மாணிக்கம், அலுவலக ஊழியர் சுரேஷ் ஆகிய மூவரும் முரளியை சாதி ரீதியாக இழிவுபடுத்தி விரட்டியடிப்பது என கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகின்றனர்.

மேற்படிப்புக்கு அனுமதி கேட்டு முரளி விண்ணப்பித்த போது, பறையனுக்கு இப்படிப்பே அதிகம் என இழிவுபடுத்தி அனுமதி மறுத்துவிட்டார், இரவிச்சந்திரன். ஏற்கனவே இப்பள்ளியில் பத்தாண்டுகளாகப் பணிபுரிந்த ராணி என்ற தாழ்த்தப்பட்ட ஆசிரியையும் இதே போல இழிவுபடுத்தி விரட்டியடித்துள்ளனர்.

ஆசிரியர்கள் கதியே இதுவென்றால் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்கள் நிலை பற்றிச் சொல்லவே வேண்டாம். பிரேமா என்ற ஆசிரியை பத்தாம் வகுப்புப் படித்த மாரிமுத்து என்ற தாழ்த்தப்பட்ட மாணவரை அடித்தே பள்ளியிலிருந்து விரட்டிவிட்டார். இப்பள்ளியில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களை, மாடு மேய்க்கிறவனெல்லாம் பள்ளிக்கு வந்து விட்டான்கள் என்று இழிவுபடுத்துவது சாதாரண நிகழ்ச்சி.

மாவட்ட ஆட்சியர், போலீசு, தமிழக முதல்வர் எனப் பலருக்கும் தீண்டாமைக் கொடுமை பற்றி முரளி மனுச் செய்தும், இன்றுவரை நடவடிக்கை இல்லை.

இரவிச்சந்திரன், மாணிக்கம், சுரேஷ் ஆகிய மூவரையும் வன்கொடுமைத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யக் கோரி, கோவை மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர் சுவரொட்டி இயக்கம் எடுத்துள்ளனர்.

— மகஇக, கோவை

**து**றையூர் காய்கறிச் சந்தையில் விவசாயிகள் தங்களின் விலைபொருட்களை தாங்களே விற்பதற்கு தனி இடம் தரக்கோரி விவிமு பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்திற்குத் திட்டமிட்டிருந்தது. இதற்காகச் சுற்றுப்புறக் கிராமங்களில் விவசாயிகளை அணிதிரட்ட தெருமுனைக் கூட்டங்களை நடத்தியது.

தோழர் பொம்மன் தலைமையில் காளிப்பட்டி கிராமத்தில் பிப்ரவரி 25-ஆம் தேதி இரவு தெருமுனைக் கூட்டம் நடந்தது. அப்போது மூக்குமுட்டக் குடித்து விட்டு அங்கு வந்த துறையூர் ஒன்றிய பாஜக அமைப்பாளர் ஜவஹர் என்பவன் அமைப்பையும், பெண் தோழர்களையும் இழிவுபடுத்தி பேசி தகராறு செய்தான். தோழர்கள் வைத்திருந்த இரண்டு பறைகளையும் கிழித்துச் சேதப்படுத்தினான்.

இதைத் தொடர்ந்து தோழர்கள் அவனைத் தாக்கவே, அவனது மண்டை உடைந்தது. அவனுடன் வந்த 4 பேர் போன இடம் தெரியவில்லை. ஏற்கனவே இந்த குடிகாரப் பார்ப்பன மதவெறியன் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்திருந்தான். மக்களில் பல பேர் இவனது ரவுடித்தனங்களை எதிர்த்து போலீசிடம் முறையிட்டும், நடவடிக்கை ஏதும் இல்லை. கடந்த நவம்பர் மாதம் விவிமுவின் கொடிக் கம்பத்தை வெட்டி வீழ்த்தினான். இது பற்றி போலிசில் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

இந்த ரவுடியை வி.வி.மு. தோழர்கள் தாக்கி விரட்டியடித்ததற்கு முழு ஆதரவளித்த பகுதி மக்கள், எதிர்தாக்குதல் தொடுப்பதன் மூலம் மட்டும்தான் அரசியல் ரவுடிகளின் கொட்டத்தை அடக்க முடியும் என்பதையும் உணர்ந்து கொண்டனர்.

தகவல்: விவிமு, துறையூர் வட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

# மூன்றாவது அணியைத் தேடி... மண் குதிரை மீதேறி 'இடது'களின் புரட்சிப் பயணம்

**காங்கிரசு - பா.ஜ.க.விற்கு மாற்றாக, மதச்சார்பற்ற - ஜனநாயக சக்திகளின் மூன்றாவது அணியைக் கட்டப் போவதாகப் புறப்பட்ட போலி கம்யூனிஸ்டுகள், காங்கிரசிடம் வழிகேட்டு நிற்கின்றனர்.**

ஆண்டிகள் கூடி மடம் கட்டிய கதை என்று சாத்தியமில்லாதவற்றை கற்பனையில் சாதிக்கத் திட்டமிடும் வெட்டிப் பேச்சு முட்டாள்களைக் கேலி செய்வதுண்டு. அந்தக் கதையாக, போலி கம்யூனிஸ்டுகள் இப்பொழுது, மதச்சார்பற்ற ஜனநாயக அணி, மூன்றாவது அணியைக் கட்டக் கிளம்பி விட்டார்கள். காங்கிரசு, பாரதீய ஜனதா அல்லாத, அவற்றின் கூட்டணியில் அங்கம் வகிக்காத இதர கட்சிகளைத் திரட்டி, இந்த மூன்றாவது அணியைக் கட்டப் போகிறார்களாம். "இப்போதைக்கு இந்த அணியில் இடதுசாரி கூட்டணிக் கட்சிகள் மட்டுமே உள்ளன. விரைவில் காங்கிரசு - பாரதீய ஜனதா கூட்டணியில் இல்லாத கட்சிகள் இந்த அணியில் வந்து சேர்ந்து, பரந்து விரிந்த மதச்சார்பற்ற - ஜனநாயக முன்னணி உருவாகும். வகுப்புவாத பாரதீய ஜனதா அரசு வீழ்த்தப்படும்" என்று குளுரைக்கின்றனர்.

இருந்தாலும், இந்த அணி இன்றைய நிலையில் பலமாக இல்லையாம். அதனால் பாரதீய ஜனதாவுக்கு மாற்றாக ஓர் அரசு அமைக்க இந்த அணிக்கு உடனடி சாத்தியம் இல்லையாம். அதேசமயம் பாரதீய ஜனதா அரசை வீழ்த்த வேண்டியது இன்றைய தேவையாகவும் உள்ளதாம். எனவே, பாரதீய ஜனதாவுக்கு மாற்றாக காங்கிரசு அரசு அமைக்க முன் வந்தால் அதை நாங்கள் ஆதரிப்போம். காங்கிரசின் பொருளாதாரக் கொள்கைகளில் எங்களுக்கு உடன்பாடில்லை. எனவே காங்கிரசு அரசுக்கு பிரச்சினை அடிப்படையில் ஆதரவு தருவோம் என்று அறிவித்துள்ளனர்.

காங்கிரசு, பாரதீய ஜனதாவுக்கு மாற்றாக மூன்றாவது அணி, மதச்சார்பற்ற - ஜனநாயக சக்திகளின் அணி என்றெல்லாம் சவடால் அடித்த போலி கம்யூனிஸ்டுகள், கடைசியில் பாசிச காங்கிரசுக்குப் பல்லக்கு தூக்குவதையே தமது கொள்கையாக்கி விட்டனர். "இந்துத்துவ பேரபாயத்தை முறியடிக்க இத்தகைய செயல்தந்திரம் இன்று அவசியமாகியுள்ளது" என்கிறார், 'மார்க்சிஸ்ட்' கட்சிப் பொதுச்செயலாளரான சுர்ஜித். "காங்கிரசும் இடதுசாரிகளும் வேறுபாடுகளைக் களைந்து நெருங்கி வர வேண்டும்; இந்து வகுப்பவாத சக்திகளுக்கு எதிராக இணைந்து போராட வேண்டும்" என்கிறார், மே. வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வரான ஜோதிபாசு. தம்முடன், முன்பு ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்த கட்சிகளையும் இணைத்து காங்கிரசுக்கு வால்பிடிக்கத் தரகு வேலை செய்வதே இன்று போலி கம்யூனிஸ்டுகளின் முதன்மைப் பணியாகிவிட்டது.

ஒன்றரை ஆண்டுக்காலம் ஆட்சி நடத்திய ஐக்கிய முன்னணி என்பதே கூட்டணிகளின் கூட்டணிதான். அரசியல் 'விபத்து' போல திடீரென உருவான சந்தர்ப்பவாத அணிதான் ஐக்கிய முன்னணி. அதுவும் இன்று அவிழ்த்துக் கொட்டிய நெல்லிக்காய் மூட்டைப் போல சிதறிக் கிடக்கிறது. ஐக்கிய முன்னணியில் முக்கிய அங்கம் வகித்த ஜனதா தளம் பிளவுபட்டு லல்லு பிரசாத் யாதவ் தலைமையில் ராஷ்டிரீய ஜனதா தளம் உருவாகிவிட்டது. தேவே கௌடா - சரத் யாதவ் தலைமையிலான ஜனதா தளமோ குழுச் சண்டைகளால் கரைந்து கொண்டிருக்கிறது.

மூப்பனாரின் த.மா.கா. காங்கிரசில் மீண்டும் இணைய சோனியாவின் தயவுக்காகக் காத்திருக்கிறது. லல்லுவின் ராஷ்டிரீய ஜனதா தளமும், முலயம் சிங்கின் சமாஜ்வாதி கட்சியும் கூட்டு சேர்ந்து "ராஷ்டிரீய லோக் தாந்திரிக் மோர்ச்சா" என்ற பெயரில் ஒரு புதிய அணியைக் கட்டிக் கொண்டு, காங்கிரசை ஆதரிக்கின்றன. தெலுங்கு தேசம் கட்சியோ பாரதீய ஜனதா அணிக்குத் தாவி விட்டது. நம்பிக்கை வாக்கெடுப்பில் பாரதீய ஜனதா அரசை ஆதரித்த அசாம் கண பரிசத், தேசிய மாநாட்டுக் கட்சி ஆகியவையும், பாரதீய ஜனதா தீண்டத்தகாத கட்சி அல்ல என்று பேசிய தி.மு.க.வும் என முன்னாளைய ஐக்கிய முன்னணி இன்று கலகலத்துப் போய்விட்டது. இருந்தாலும் ஐ.மு.வைப் புதுப்பித்து, அதை மதச்சார்பற்ற - ஜனநாயக அணியாக மாற்றிவிட முடியும் என்று போலி கம்யூனிஸ்டுகள் கதையளக்கின்றர்.

கடந்த அக்டோபரில் கல்கத்தாவில் 'மார்க்சிஸ்டு'கள் தமது கட்சியின் அகில இந்திய மாநாட்டை நடத்திய போது, லல்லுவின் ராஷ்டிரீய ஜனதா தளத்தை மதச்சார்பற்ற அணியில் முக்கிய கூட்டணிக் கட்சியாக ஏற்க மாட்டோம் என்று அறிவித்தனர். ஏனெனில், லல்லு கும்பல் தனது ஊழல் கொள்ளையால் நாடெங்கும் அம்பலப்பட்டுப் போயிருந்தது. போலி கம்யூனிஸ்டுகளும் லல்லுவின் ஊழல் - ஒடுக்குமுறை ஆட்சிக்கு எதிராக பீகாரில் சட்டவாதப் போராட்டங்களை நடத்தி வந்தனர். போலி கம்யூனிஸ்டுகள் தலைமையில் அமையும் மூன்றாவது அணி மதச்சார்பற்ற அணியாக மட்டுமின்றி, ஊழல் எதிர்ப்பு அணியாகவும் இருக்கும் என்று நாடகமாடினர். பின்னர் அது புசுவானமாகிவிட்டது.

ஊழலைக் காரணம் காட்டி லல்லுவை ஓரங்கட்டினால், லல்லுவுடன் கூட்டணி சேர்ந்துள்ள முலயம் சிங் மூன்றாவது அணியை ஆதரிக்காமல் போய் விடுவார். லல்லுவும் முலயம் சிங்கும் காங்கிரசை ஆதரிப்பதால், லல்லுவைப் புறக்கணித்து விட்டு காங்கிரசின் ஆதரவைப் பெறுவதும் சிரமமாகிவிடும். எனவே ஊழல் எதிர்ப்புக் கொள்கையை போலிகள் மூட்டை

**மூன்றாவது அணியைத் தேடி....: போலி கம்யூனிஸ்டுகள் நடத்திய மதவெறி எதிர்ப்பு மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர்கள்.**





படிப்பகம்

www.padippakam.com

## மதவெறியை மாய்த்திட ஒரு கோடி கையெழுத்து விண்ணப்பம்

(சென்ற மாதம் 20-ம் தேதி புதுடில்லியில் நடந்த வகுப்புவாத எதிர்ப்பு சிறப்பு மாநாட்டில், மதவெறிக்கு எதிராக நாடு முழுவதும் ஒரு கோடி கையெழுத்துக்களைத் திரட்ட முடிவு செய்யப்பட்டது. மார்ச் 6-ம் தேதி துவங்க உள்ள இந்த கையெழுத்து இயக்கத்திற்கான உறுதிமொழி வருமாறு)

### வகுப்புவாத எதிர்ப்பு உறுதிமொழி

**இந்திய மக்களாகிய நாங்கள்,**

**இந்தியக் குடியரசின் மதச் சார்பற்ற ஜனநாயக அடித் தளங்களைப் பாதுகாக்கவும் வலுப்படுத்தவும் எங்களது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.**

**பல நூற்றாண்டுகளாக உருவாகி வளர்ந்து நமது பன்முகப் பண்பாடு மற்றும் சமய நல்லிணக்க நாகரீக மாண்புகளைப் பாதுகாக்க உறுதி பூணுகிறோம்.**

**தீய சக்திகளின் சூறையாடல்களிலிருந்து நமது தாய கத்தையும் அதன் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க உறுதி பூணுகிறோம்.**

**சுதந்திர இந்தியா முன்னெப்போதும் சந்தித்திராத இந்த ஆழமான சவாலை எதிர்த்துப் போராடவும் முறியடிக்கவும் உன்னதமான தேச பக்த உணர்வோடு ஒன்றுபட்டு சபதமேற்கிறோம்.**

கட்டி வைத்துவிட்டனர். ''இன்றைய நிலையில் வகுப்புவாத எதிர்ப்புதான் முதன்மையானது; ஊழல் எதிர்ப்பு இரண்டாம் பட்சமானது'' என்று இச்சந்தர்ப்பவாதக் கொள்கைக்கு சித்தாந்த விளக்கமும் அளிக்கின்றனர். பாரதீய ஜனதாவுடன் பங்காளிச் சண்டை நடத்தி வரும் பாசிச ஜெயா கும்பல், தனது ஆதாயத்துக்காக சோனியாவுடன் கூட்டணி கட்டிக் கொண்டால், வகுப்புவாத எதிர்ப்பே முதன்மையானது என்று கூறிக் கொண்டு பாசிச ஜெயாவையும் ஆதரிக்க போலிகள் தயாராகவே உள்ளனர்.

இப்படி எல்லா வண்ணக் கழிசடைகள், பிழைப்புவாத, இலஞ்ச - ஊழல் - கிரிமினல்மயமான கட்சிகளை ஒன்றிணைத்து, பாரதீய ஜனதாவுக்கு எதிரான அணியைக் கட்ட போலிகள் எத்தணிக்கின்றனர், இதற்கான ஆரம்ப முயற்சியாக கடந்த பிப்ரவரி 20-ஆம் நாளன்று டெல்லியில், காங்கிரசு - பாரதீய ஜனதா கூட்டணியில் இல்லாத கட்சிகளை அழைத்து வகுப்புவாத எதிர்ப்புக் கருத்தரங்கம் ஒன்றை நடத்தினர். சாதாரண கண்டனப் பொதுக் கூட்டம் போல நடந்த இக்கருத்தரங்கையே ''மாநாடு'' என்றும், மூன்றாவது அணிக்கான அடித்தளமிட்ட நிகழ்ச்சி என்றும் போலிகள் ஆரவாரம் செய்தனர்.

இக்கூட்டத்தில் இடது, வலது போலி கம்யூனிஸ்டுகளுடன் தி.மு.க., த.மா.கா., பார்வர்டு பிளாக், புரட்சி சோசலிஸ்டு கட்சி, சமாஜ்வாதி கட்சி, அசாம் கண பரிசத், ராஷ்டிரீய ஜனதா தளம், தேசிய மாநாட்டுக் கட்சி, ஜனதா தளம் ஆகிய கட்சிகளின் தலைவர்களும், சில கலாச்சார அமைப்புகள், பத்திரிகையாளர்கள், திரைப்படத் துறையினர் ஆகியோரும் கலந்து கொண்டனர். 'மாநாட்டின்' இறுதியில், இந்து வெறியர்கள் நடத்தி வரும் அட்டூழியங்களுக்கு எதிராக ஒரு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றி அதை அரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்க முடிவு செய்தனர்.

பாதிரியார் எரிப்பு, தேவாலய இடிப்பு, நாடெங்கும் சிறுபான்மையினர் மீதான சிறியதும் பெரியதுமான தாக்குதல்களால் இந்து வெறியர்கள் அம்பலப்பட்டுப் போயுள்ள நிலையில், பாரதீய ஜனதா கூட்டணிக் கட்சிகளே இவற்றைக் கண்டித்து முணுமுணுக்கும் நிலையில், எதிர்க்கட்சிகள் இத்தகைய இந்து வெறியாட்டங்களை எதிர்த்து வீரவசனம் பேசுவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இந்து மதவெறி பாசிச சக்திகளை முறியடிக்க என்ன செய்யப் போகிறார்கள் என்பதுதான் கேள்வி. கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி அதை அரசுத் தலைவரிடம் கொடுத்த சடங்கைத் தவிர, உருப்படியாக எந்தத் திட்டமும் போலி கம்யூனிஸ்டுகளிடமோ, வகுப்புவாத எதிர்ப்புக் கருத்தரங்கில் பங்கேற்ற கட்சிகளிடமோ இல்லை.

வகுப்புவாத எதிர்ப்பு என்ற பெயரில் நடந்த இந்தக் கோமாளி கூத்து போதாதென்று, மதவெறிக்கு எதிராக நாடு முழுவதும் ஒரு கோடி கையெழுத்துக்களைத் திரட்டுவது என்றும் முடிவு செய்துள்ளனர். இதன்படி வகுப்புவாத எதிர்ப்பு உறுதி மொழி என்று அச்சிட்ட படிவத்துடன் கடந்த மார்ச் 6-ந் தேதியிலிருந்து மக்களிடம் கையெழுத்து வாங்கும் இயக்கத்தைத் தொடங்கியுள்ளனர். வகுப்புவாத எதிர்ப்பு கருத்தரங்கில் பங்கேற்ற கட்சிகள் தமது தலைவர்களும் பிரமுகர்களும் மக்களிடம் கையெழுத்து வேட்டை நடத்துவது போல புகைப்படம் எடுத்து நாளிதழ்களில் விளம்பரப்படுத்திக் கொண்டதோடு இந்த இயக்கத்தை மூட்டைக் கட்டி விட்டன. போலி கம்யூனிஸ்டுகளே கூட இந்தக் கையெழுத்து இயக்கத்தை அக்கறையுடன் நடத்த முயற்சிக்காமல் முடக்கிவிட்டனர்.




## ஒரு கோடி கையெழுத்து இயக்க உறுதிமொழிப் படிவம்: இந்துவெறி எதிர்ப்பா? சமரசமா?

இது ஒருபுறமிருக்க, இந்து வெறியர்களுக்கு எதிரான கையெழுத்து இயக்கமாகச் சித்தரிக்கப்படும் இதற்கான படிவத்தில் காணப்படும் உறுதி மொழியில், இந்து வெறியர்களுக்கு எதிராக ஒரு வார்த்தை கூட கிடையாது. சமய நல்லிணக்கம், தேசபக்தி, தேசிய ஒருமைப்பாடு, தீய சக்திகளை முறியடிப்பது என்று பொத்தாம் பொதுவான வாசகங்களே அதில் உள்ளன. பாரதீய ஜனதா எதைக் கொள்கையாகக் கொண்டுள்ளதோ, எதைப் பிரச்சாரம் செய்து பதவிக்கு வந்துள்ளதோ அதே கொள்கைதான் இந்த உறுதிமொழியிலும் உள்ளது. இந்து வெறியர்களை எதிர்ப்பவர்கள் மட்டுமல்ல; இந்து வெறியர்களே கூட அதை மனப்பூர்வமாக ஆதரித்து கையெழுத்து போட முடியும்.

இந்து வெறியர்கள் என்று குறிப்பிட்டு எந்த வார்த்தையும் இல்லாமல், பொதுவாக மதவெறி, தீய சக்திகள் என்று உள்ளதால் - அது இந்து, முஸ்லிம், கிறித்துவ, சீக்கிய, பௌத்த மதவெறி என்று யாரும், எப்படி வேண்டுமானாலும் கருதிக் கொண்டு கையெழுத்திட முடியும். அதில் வாஜ்பாயும், அத்வானியும், ஜோஷியும் கூட கையெழுத்திட முடியும்.

இந்த 'மூன்றாவது அணி'யிலுள்ள ஏறத்தாழ எல்லா கட்சிகளுமே பிழைப்புவாத - ஊழல் - கிரிமினல்மயமானவைதான்! இந்துத்துவ பாசிச எதிர்ப்பு என்பதும் இவர்களது கொள்கையல்ல. தேர்தல் அரசியலில் கூட இந்துத்துவ எதிர்ப்பு என்ற பெயரில் ஓரணியில் நிற்கக்கூட இவர்களுக்கு அருகதையில்லை. ம.பி., இராசஸ்தான், டெல்லி சட்டமன்றத் தேர்தல்களில் கூட, இவர்கள் ஒரு பொது வேட்



படிப்பகம்

www.padippakam.com

பாளரை நிறுத்த முடியவில்லை. பதவி வெறி, குழுச் சண்டைகளால் பாரதீய ஜனதா எதிர்ப்புச் சக்திகளைச் சிதறடிப்பதைத் தவிர, இக்கட்சிகளால் எதையும் சாதிக்கவும் முடியவில்லை.

ஒருபுறம், போலி கம்யூனிஸ்டுகள், மூன்றாவது அணி என்ற பெயரில் பிழைப்புவாத - சந்தர்ப்பவாத ஓட்டுக் கட்சிகளைத் திரட்டி, காங்கிரசு ஆதரவுடன் பாரதீய ஜனதாவை வீழ்த்தி விடலாம் என்று கூறுகின்றனர். காங்கிரசு கட்சியே இந்து மதவாதத்தைத் தூக்கிப் பிடிக்கும் கட்சிதான் என்பதைச் சொல்லத் தேவையில்லை. மறுபுறம், இந்திய தேசிய வெறியைத் தூண்டுவது, தேசிய இனப் போராளிகளையும் கம்யூனிசப் புரட்சியாளர்களையும் மிருகத்தனமாக ஒடுக்குவது, பயங்கரவாதப் பீதியூட்டி சிறுபான்மையினரை நசுக்கி கருப்புச் சட்டங்களைத் திணிப்பது போன்ற பலவற்றிலும் அரசியல் ரீதியிலும் இந்துத்துவ பாசிசத்துக்கு இசைவாகவே காங்கிரசும், போலி கம்யூனிஸ்டுகளும், முன்னாள் ஐக்கிய முன்னணிக் கட்சிகளும் செயல்படுகின்றனர்.

எனவே, இத்தகைய பத்தாம் பசலிகளால் இந்துத்துவ பாசிசத்தை வீழ்த்தவோ, மதச்சார்பற்ற - ஜனநாயக அணியைக் கட்டியமைக்கவோ ஒருக்காலும் சாத்தியமில்லை. ஆனாலும், இந்துவெறி எதிர்ப்பு மூன்றாவது அணி என்ற பெயரில் மக்களை ஏய்க்க இக்கோமாளிகள், மண்குதிரை மீதேறி ''திக் விஜயம்'' செய்யக் கிளம்பியுள்ளனர். இப்'புரட்சி'ப் பயணத்தைத் தொடர, 'அன்னை' சோனியாவின் அருளாசிக்குக் காத்து நிற்கின்றனர்.

● மனோகர்


**''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள் படிவம் IV (விதி - 8)**

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை-600 083. |
| 2. வெளியிடும் காலம் | : | மாதம் இருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | : | இரா. சண்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | எழில் பிரிண்ட்ஸ் 110, 2-ஆம் தளம், 63, ஆற்காடு சாலை, சென்னை-600 024. |
| 4. வெளியிடுபவர் பெயர் | : | இரா. சண்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை-600 083. |
| 5. ஆசிரியர் பெயர் | : | இரா. சண்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 25, அருணாச்சலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், சென்னை-600 083. |

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கிறேன்.

(ஒ-ம்.) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.


# சட்ட விரோத சாராயக் கடையை இழுத்து மூடுவோம்

## — சென்னை சேத்துப்பட்டு பகுதி மக்களின் போர்க் குரல்

சென்னை சேத்துப்பட்டுப் பகுதியில் மக்கள் நடமாட்டம் மிகுந்த இடத்தில் 'திருப்பதி ஒயின்ஸ்' என்ற சீமைச் சாராயக் கடை உள்ளது. இக்கடையின் அடுத்த கட்டிடத்தில் தனியார் குழந்தைகள் பள்ளி ஒன்றுள்ளது. மாலையில் இங்கு தனிப்பயிற்சி வகுப்புகளும் நடக்கிறது.

'திருப்பதி ஒயின்ஸ்' எதிரே கோவில் ஒன்று உள்ளது. இந்தச் சாராயக் கடை அருகே 100 அடி தொலைவில் ஒரு ஆரம்பப் பள்ளியும் உள்ளது. இப்படி எல்லா சட்ட விதிகளையும் மீறி, அரசே இச்சாராயக் கடைக்கு அனுமதி அளித்துள்ளது. குடிகாரர்கள் ரோட்டில் விழுந்து கிடந்து, மக்கள் நடமாட்டத்திற்கே தடையாக உள்ளனர்.

மக்களின் போக்குவரத்துக்கு தடையாக உள்ள 'திருப்பதி ஒயின்ஸ்' கடையை மூடும்படி மக்கள் கலை இலக்கியக் கழகம் எல்லா மட்டத்திலும் மனுச் செய்தது. அதன்பின் சேத்துப்பட்டு காவல் நிலையத்திலிருந்து சாராயக் கடைக்கு போலீசு பாதுகாப்பு போடப்பட்டது.

ம.க.இ.க.வினரின் நடவடிக்கைக்குப் பின் சாராயக் கடை நிர்வாகி இராமகிருஷ்ணன் சேத்துப்பட்டிலுள்ள பிரபல ரவுடியை ஏவி மகஇக-வினரை மிரட்ட முயன்று தோற்றுப் போனார்; இதன்பின் ம.க.இ.க., சாராயக் கடையை அகற்றக் கோரி ஒரு பொதுக்கூட்டத்திற்கு விண்ணப்பித்தது. இதற்கு போலீசு அனுமதி மறுத்துவிட்டது.

22.2.99-இல் பகுதியில் ஊர்வலமும் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே ஆர்ப்பாட்டத்திற்கும் மகஇக அனுமதி கோரியது. ஊர்வலத்தைத் தடை செய்த போலீசு, சேத்துப்பட்டுப் பகுதியோடு தொடர்பே இல்லாத, வெகு தொலைவில் உள்ள வள்ளுவர் கோட்டமருகே ஆர்ப்பாட்டத்திற்கு மட்டும் அனுமதி அளித்தது போலீசு.

தடையை மீறி சேத்துப்பட்டிலேயே ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் நடத்துவது, கைது என்றால் முன்னணித் தோழர்கள் மட்டும் கைதாவதென ம.க.இ.க தோழர்கள் முடிவு செய்தனர்.


அதன்படி அன்று காலையில் பகுதியில் முழக்கமிட்டபடி மகஇக தோழர்கள் 10 பேர் ஊர்வலமாகச் செல்ல, ஏறக்குறைய 200-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டனர். போலீசு வருவதற்கு முன் ஊர்வலம் முடிவடைந்தது. போலீசு தோழர்களைக் கைது செய்ய முயன்ற போது, மக்கள் சூழ்ந்து கொண்டு எதிர்ப்புத் தெரிவிக்கவே, வந்திருந்த போலீசார் மேலதிகாரிகளுக்குத் தகவல் தந்தனர்.

உதவிக் கமிஷனர் தலைமையில் போலீசு படையே வந்தது. அவர்களையும் சூழ்ந்து கொண்ட மக்கள் சாராயக் கடை பற்றிக் கேள்விகளால் துளைத்தெடுத்தனர். இதற்கு பதில் கூற வழியற்ற போலீசு, மக்களை கலைந்து செல்லும்படியும், வள்ளுவர் கோட்டமருகே ஆர்ப்பாட்டம் செய்யும்படியும் கூறியது.

மக்கள், 'பகுதியில் தான் பிரச்சினை. இங்கு தான் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி தரவேண்டும்' என்று முழக்கமிட்டனர். இக்கட்டத்தில் ஆர்ப்பாட்டத்திற்குப் பொறுப்பேற்ற மகஇக தோழர் சரவணன் சைக்கிள் மீது ஏறி நின்று, அதிகாரிகளின் மோசடிகளையும், போலீசின் அடாவடித்தனத்தையும் தோலுரித்துப் பேசினார். இறுதியில் மக்களின் விருப்பப்படி, மீண்டும் அனுமதி பெற்று பகுதி வட்டாட்சியர் அலுவலகம் எதிரே ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பதை ஏற்றுக் கலைந்து சென்றனர்.

தகவல்
ம.க.இ.க., சென்னை.

**சட்ட விரோத சாராயக் கடைக்குப் பாதுகாப்பு கொடுக்கும் போலீசை அம்பலப்படுத்தும் தோழர் சரவணன்**





படிப்பக

## ஒரிசாவில் வேர்விட்டுப் பரவும் இந்துவெறி பயங்கரவாதம்

ஒரிசாவில் கடந்த ஜனவரி மாத இறுதியில் கிறித்துவப் பாதிரியாரை அவரது குழந்தைகளுடன் சேர்த்து உயிரோடு எரித்துக் கொன்ற இந்துவெறி காட்டுமிராண்டிகள், இப்போது மதக் கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டு அம்மாநிலத்தில் காலூன்ற முயற்சிக்கின்றனர்.

ஒரிசாவின் கஜபட்டி மாவட்டத்தில் காமரி குன்றுகளை அடுத்துள்ள ரனாலாய் கிராமத்தில் ''பானா'' எனப்படும் தாழ்த்தப்பட்ட சாதியினரும், பழங்குடியின மக்களும் தனித்தனியே வாழ்கின்றனர். இவ்விரு பிரிவினருக்கிடையே முரண்பாடுகள் இருந்தாலும் இதுவரை மோதல் ஏதும் நடந்ததில்லை. பானாக்களில் பெரும்பான்மையினர் கிறித்துவர்கள், பழங்குடியினரை விட ஒப்பீட்டளவில் பானாக்கள் கல்வியிலும் வாழ்க்கை வசதியிலும் மேம்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் நுழைந்த இந்துவெறியர்கள், பானாக்களை அச்சுறுத்தி மதம் மாற்றம் செய்யும் நோக்கத்துடன், பழங்குடியினரைக் கோபமூட்டி ஏவிவிட்டனர். கிறித்துவ நிறுவனங்கள் பணம் கொடுப்பதால்தான் பானாக்கள் வசதியுடன் இருப்பதாக அவதூறு செய்தும், பழங்குடியினருக்கும் பானாக்களுக்கும் இடையிலான முரண்பாடுகளைப் பூதாகரமாக்கியும் ஆத்திரமூட்டி வந்தனர். இது நாள்வரை தாங்கள் இந்துக்கள் என்பதை ஏற்காத பழங்குடியினர், இந்து வெறியர்களின் வருகைக்குப் பிறகு தங்களை இந்துக்களாக அறிவித்துக் கொண்டனர்.



தாழ்த்தப்பட்ட கிறித்துவர்களுக்கு எதிராகப் பழங்குடியினரைத் தூண்டி, ஒரிசாவில் இந்துவெறியர்கள் நடத்திய வன்முறை வெறியாட்டம்.

பழங்குடியினரை பானாக்களுக்கு எதிராக நிறுத்தி வெறியூட்டிய இந்துவெறியர்கள், மதக் கலவரத்தைக் கட்டவிழ்த்து விடும் நோக்கத்துடன் பானாக்களின் குடியிருப்பை அடுத்துள்ள குன்றில் நீண்ட காலத்துக்கு முன்பு பெரிய அளவில் வரையப்பட்டிருந்த சிலுவைக் குறியைச் சிதைத்து, அதன் மீது திரிசூலக் குறியை வரைந்து வைத்தனர். இது பானாக்களை ஆத்திரமடையச் செய்தது. எனினும் மோதல் ஏதும் நடக்கும் முன்பு இரு பிரிவின் பெரியவர்கள் கூடி, சமாதானக் கமிட்டியை நிறுவி, மீண்டும் சிலுவைக் குறியை அதே இடத்தில் வரைய முடிவு செய்தனர். ஆனால், இந்து வெறியர்கள் பழங்குடியினர் சிலரை தம் பின்னே திரட்டிக் கொண்டு, மீண்டும் சிலுவைக் குறியை அழித்து, திரிசூலக் குறியை வரைந்தனர். இதனால் ஆத்திரமடைந்த கிறித்துவ பானாக்கள் அவர்களை அடித்து விரட்டினர்.

இத்தருணத்திற்காகவே காத்திருந்த இந்துவெறியர்கள் அருகிலுள்ள கிராமங்களிலிருந்து குண்டர்களைத் திரட்டிக் கொண்டு வந்து, கிறித்துவர்களை மிருகத்தனமாகத் தாக்கி, அவர்களின் நூற்றுக்கும் மேற்பட்ட குடிசைகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். அவர்களது அற்ப உடமைகளையும் சூறையாடினர். இந்து வெறியர்களின் இத்தாக்குதலில் 11 கிறித்துவர்கள் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் கிடக்கின்றனர். பானாக்களின் குடியிருப்பு பகுதி முழுவதும் இப்போது மொட்டைச் சுவருடன் நிற்கிறது.

இத்தனைக்கும் பிறகும் இது மதக் கலவரமல்ல; இரு சமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதல் என்று ஆளும் காங்கிரசு அரசு பசப்பியது. எதிர்க்கட்சிகளின் கண்டனம் - போராட்டத்துக்குப் பின்னரே இக்கலவரம் பற்றி ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடத்த ஒப்புக் கொண்டுள்ளது. குழுச் சண்டையில் சிக்கியுள்ள ஒரிசா காங்கிரசு அரசின் கையாலாகத்தனத்தைச் சாதகமாக்கிக் கொண்டு பார்ப்பன அதிகார வர்க்கமும், போலீசும், நீதித்துறையும் வெளிப்படையாகவே இந்து வெறியர்களுக்கு ஆதரவாக நிற்கின்றன. கடந்த ஜனவரியில் தனது இரு குழந்தைகளுடன் சேர்த்து கிறித்துவ பாதிரியார், இந்துவெறி குண்டர்களால் உயிருடன் எரிக்கப்பட்டார். இந்தக் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 51 பேரில் 44 பேரை ஒரிசா உயர்நீதி மன்றம் பிணையில் விடுதலை செய்துள்ளது. இக்கொலையில் முதன்மைக் குற்றவாளியான ரவீந்திரபால் சிங் என்ற இந்து வெறியன் தப்பியோடி தலைமறைவாகிவிட்டதாகக் கூறிய போலீசார், இன்னமும் தேடுதல் நாடகமாடுகின்றனர். கிறித்துவ பாதிரியார் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டது பற்றி விசாரிக்க, மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட நீதிபதி வாத்வா தலைமையிலான விசாரணைக் கமிஷன் முறையாகச் செயல்பட முடியாமல் பா.ஜ.க. அரசு முட்டுக் கட்டைகளைப் போட்டு வருகிறது. கடந்த இரு மாதங்களாக இக்கமிஷன் செயல்பட அலுவலகமோ, ஊழியர்களோ, இதர சாதனங்களோ தரப்படவில்லை என்று நீதிபதி வாத்வா வெளிப்படையாகவே புலம்புகிறார். இவையனைத்தும், கலவரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு இந்துவெறியர்கள் சிறுபான்மையினரை வேட்டையாடவும், பிணங்களின் மீதேறிப் பதவியைப் பிடிக்கவும் சாதகமாக உள்ளதையே அபாய அறிவிப்பாக உணர்த்துகின்றன.

## புதிய உத்தியுடன் ஈராக் மீது தொடரும் அமெரிக்காவின் போர்

ஈராக் மீதான அமெரிக்காவின் போர் வெறித் தாக்குதல் ஓய்ந்து விட்டதாகச் சித்தரிக்கப்பட்டாலும், கடந்த இரு மாதங்களாக பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கக் கூட்டுப்படை போர் விமானங்கள் ஈராக் மீது அன்றாடம் குண்டு வீச்சு, ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. ஈராக்கில் விமானங்கள் பறக்க ஐ.நா. மன்றம் தடைவிதித்துள்ள வடபகுதியைக் கண்காணிக்கும் கடமையை நிறைவேற்றுவது என்ற பெயரில் ''குறைந்த தரமுடைய போர்'' எனப்படும் இத்தாக்குதலை அமெரிக்காவும் பிரிட்டனும் நடத்தி வருகின்றன.

ஏறத்தாழ 4 மாதங்களுக்கு முன்பு, பெருமளவு படைகளைக் குவித்து ஈராக் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்காவும் பிரிட்டனும் உலக அரங்கில் கண்டனத்திற்குள்ளாகி அம்பலப்பட்டுப் போயுள்ளன. எனவே, உலக அரங்கில் அம்பலமாகாமல் இருக்கவும், வளைகுடாப் பிராந்தியத்தில் தொடர்ந்து ஆதிக்கம் செய்யவும் இப்போது புதிய உத்தியாக ''குறைந்த தரமுடைய போரை'' நடத்தி வருகின்றன.

விமானம் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ள பகுதி மட்டுமின்றி, ஈராக்கின் இராணுவக் குறியிடங்களைத் தாக்குவதே அவற்

www.padippakam.com



றின் நோக்கமாக உள்ளது. ஈராக்கின் போர் விமானத்தளம், வானொலி, அஞ்சல் நிலையங்கள், ஏவுகணைத் தளம் ஆகியவற்றைக் குறிவைத்தே வடபகுதியில் இத்தாக்குதல்கள் நடந்துள்ளன. இத்தாக்குதல் நடவடிக்கையால் ஈராக் தனது போர்விமானப் படை ஆற்றலில் பெரும் பகுதியை இழந்துள்ளது.

வரம்புக்குட்பட்ட அளவுக்கு ஈராக் எண்ணெய் ஏற்றுமதி செய்து, உணவு - மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்து கொள்ள ஐ.நா. மன்றம் அனுமதி அளித்துள்ளது. ஆனால், அந்த அற்ப உரிமையையும் பறிக்கும் வகையில், பெட்ரோலிய எண்ணெய் இணைப்புக் குழாய்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி சேதப்படுத்தி வருகிறது. அன்றாடம் நடந்து வரும் இப்போர்த் தாக்குதலில் 50-க்கும் மேற்பட்ட ஈராக் குடிமக்கள் மாண்டுள்ள போதிலும், வெறும் 10 பேர் தான் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்கப் பத்திரிகைகள் கூசாமல் புளுகுகின்றன. புதிய உத்தியுடன் ஈராக் மீதான போரைத் தொடர்ந்து வரும் அமெரிக்காவின் மேலாதிக்க வெறியை அம்பலப்படுத்தி முறியடிப்பதே ஏழை நாடுகளின் இன்றைய உடனடிக் கடமையாக உள்ளது.

## என்ரானின் கொள்ளைக்கு மனித உரிமைகள் பலி

அமெரிக்காவைச் சேர்ந்த மனித உரிமை கண்காணிப்பு என்னும் அமைப்பு, மகாராஷ்டிராவில் என்ரான் மின்நிலையம் நிறுவ அனுமதிக்கப்பட்டதிலிருந்து நடந்து வரும் மனித உரிமை மீறல்கள் பற்றிய ஓர் ஆய்வறிக்கையை அண்மையில் சமர்ப்பித்துள்ளது. 1992 முதல் 98 வரை அமெரிக்க ஏகபோக மின் நிறுவனமான என்ரானுக்கு விசுவாசமாக மகாராஷ்டிர மாநில அரசு நடத்திய மனித உரிமை மீறல் அட்டூழியங்களை 165 பக்கங்களைக் கொண்ட அந்த ஆய்வறிக்கை பட்டியலிட்டுள்ளது.

என்ரானுக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டங்களை மாநில அரசு திட்டமிட்ட - ஒழுங்கமைந்த முறையில் மிருகத்தனமாக ஒடுக்கியது. இது மக்களின் கருத்துச் சுதந்திரம், கூட்டம் கூடும் உரிமையைப் பறிக்கும் காட்டுமிராண்டித்தனமாகும். என்ரானுக்கு எதிராக நடந்த 30-க்கும் மேற்பட்ட போராட்டங்களை பெருமளவு படைகளைக் குவித்து போலீசு ஒடுக்கியது. இப்போராட்டங்கள் அனைத்தும் அமைதியான முறையில் மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டுவதற்காகவே நடந்தன. ஓரிரு முறை கல்லெறிச் சம்பவங்கள் நடந்ததைத் தவிர, வேறெந்த வன்முறைத் தாக்குதல், சூறையாடல், மோதல்களில் மக்கள் ஈடுபடவும் இல்லை. ஆனாலும், போலீசார் முன்னெச்சரிக்கை கைது, தடியடி, கண்ணீர்ப்புகை வீச்சு, சித்திரவதைகளில் இறங்கி போராட்டங்களையும் போராளிகளையும் ஒடுக்கினர். இது சர்வதேச மனித உரிமை, கருத்துச் சுதந்திர உரிமைக்கு எதிரான கடுமையான குற்றமாகும்.

மக்களின் உரிமையைப் பறிக்கும் வகையில் இந்திய அரசு 144-ஆவது பிரிவு குற்றச் சட்டத்தைக் கொண்டு கூட்டம் கூடும் உரிமையைப் பறிக்கிறது. மகாராஷ்டிர மாநில போலீசு 37(1)-ஆவது பிரிவு சட்டத்தைக் கொண்டு முன்னெச்சரிக்கை கைது என்ற பெயரில் என்ரான் எதிர்ப்பாளர்களை நசுக்குகிறது.

1994-லிருந்து 300 ரிசர்வ் போலீசாரும் அதிகாரிகளும் என்ரான் மின்நிலையம் அருகே பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். ஒரு போலீசுக்கு நாளொன்றுக்கு ரூ. 125-க்கு மேல் செலவிட்டு என்ரானைப் பாதுகாக்க மக்களின் வரிப் பணத்தை வாரி இறைக்கிறது. இது மக்களின் உரிமையைப் பறிக்கும் கொடுஞ்செயலாகும்.

அமெரிக்க, இந்திய அரசுகள் முரட்டு வக்கீலைப் போலச் செயல்படுகின்றன. பன்னாட்டு நிறுவனங்களின் சந்தைக்காகவும் கொள்ளைக்காகவும் மனித உரிமைகளை அவை பலியிடுகின்றன. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையிலேயே சட்டமும், நீதியும், போலீசும் இயங்குகின்றன. இந்த உண்மையை மனித உரிமை கண்காணிப்புக் குழுவின் அறிக்கை மீண்டும் நிருபித்துக் காட்டுகிறது.

## செய்யூர் மக்களின் வாழ்வைப் பறிக்கும் அனல்மின் நிலையம்

தலைமுறை தலைமுறையாக விவசாயம், மீன்பிடித்தல் மற்றும் உப்பளத் தொழிலில் ஈடுபட்டு வரும் செய்யூர் பகுதிவாழ் மக்களின் வாழ்வைப் பறித்து, 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்க தேசிய அனல் மின் நிறுவனம் தீர்மானித்துள்ளது. வரும் தமிழ்ப் புத்தாண்டு நாளில் ரூ. 4000 கோடி செலவில் அமைய உள்ள இம்மின் நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா பிரதமர் தலைமையில் நடைபெற உள்ளது.



அனல் மின்நிலையத்தின் வருகையால், எதிர்கால வாழ்வு பறிபோகும் அச்சத்தில் செய்யூர் உப்பளத் தொழிலாளர்கள்.

மாமல்லபுரத்திற்கும் பாண்டிச்சேரிக்கும் இடையே கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள செய்யூர், கடற்கழி எனப்படும் மணற்திட்டுகள் நிறைந்த ஏரி போன்ற உப்பு நீர்த் தேக்கங்கள் உள்ள பகுதியாகும். மாநிலத்தின் மூன்றாவது பெரிய உப்பளத் தொழில் நடக்கும் பகுதியாகும். செய்யூரை ஒட்டியுள்ள 42 கிராமங்களில் விவசாயம், மீன்பிடித்தல் மற்றும் உப்பளத் தொழில் பாரம்பரியமாக உள்ளது. அனல் மின் நிலையத்தின் வருகையால் இம்மக்களின் வாழ்வே இன்று கேள்விக்குறியாகி விட்டது.

அனல் மின் நிலையத் திட்டத்திற்காக 3000 ஏக்கர் நிலங்கள் மக்களிடமிருந்து பறிக்கப்பட உள்ளது. இதனால் உப்பள வயல்கள் குறைந்து, அத்தொழிலும் அதில் ஈடுபட்டு வரும் ஆயிரக்கணக்கான குடும்பங்களும் வாழ்விழக்க நேரிடும். இப்பகுதியிலுள்ள பக்கிங்காம் கால்வாய் இயற்கையான வடிகால் ஆறாக உள்ளது. மின்நிலையம் அமைந்தால் வடிகாலை இணைக்கும் சிற்றோடைகள் தடைப்பட்டு வடிகால் வசதி கடுமையாகப் பாதிக்கப்படும். இதனால் மழைக் காலத்தில் விளைநிலங்கள் நீரில் மூழ்கி விவசாயம் நாசமாகும்.

இது தவிர, அனல் மின் நிலையம் கொட்டவுள்ள சாம்பலால் சுற்றுச் சூழல் கடுமையாகப் பாதிக்கப்படும். செய்யூரை அடுத்துள்ள இடைக்கழிநாடு பஞ்சாயத்தில் இலட்சக்கணக்கான மா, பலா, தென்னை, பனை, முந்திரி மரங்களும் சாகுபடியும் நடக்கின்றன. மின் நிலையச் சாம்பல் காற்றில் பரவி இம்மரங்களையும்



படிப்பகம்

www.padippakam.com



சாகுபடியையும் நாசமாக்கி விடும். நெல் சாகுபடி சாம்பல் மாசுகளால் நஞ்சாகி மகசூல் குறையும். வேடந்தாங்கலை ஒட்டியுள்ள செய்யூர் பகுதி பறவைகளின் சரணாலயமாகவும் உள்ளது. மின் நிலையம் அமைந்தால் சுற்றுச்சூழல் மாசு காரணமாக பறவைகளும் அழிய நேரிடும். ஏரிகளும் கடலும் மாசுபடுவதால் மீன்பிடித் தொழிலும் கடுமையாகப் பாதிக்கப்படும். இதுதவிர, மின்நிலையக் கொதிகலன்களுக்குத் தேவையான நல்ல நீரை பாலாற்றிலிருந்து ஆழ்குழாய்கள் மூலம் உறிஞ்சி எடுப்பதால், ஏற்கனவே குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள இப்பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு தீவிரமாகும். மொத்தத்தில் செய்யூர் வட்டார மக்களின் வாழ்வும், சுற்றுச் சூழலும் மோசமாகப் பாதிப்படையும்.

நாட்டு முன்னேற்றம் என்ற பெயரில் தமது வாழ்வைப் பறிக்கும் இம்மின் திட்டத்திற்கு எதிராகப் போராடி வரும் செய்யூர் மக்கள், இத்திட்டத்திற்காக ''பூமி பூசை'' செய்ய வந்த சுற்றுச் சூழல் அமைச்சக அதிகாரிகளை விரட்டியடித்துள்ளனர். அடுத்து நடைபெற உள்ள அடிக்கல் நாட்டு விழாவை முறியடிக்க அணிதிரண்டு வருகின்றனர்.

## பிரிட்டனின் ஜனநாயக முகத்திரை கிழிந்தது

உலகின் ஜனநாயகத் தொட்டிலாக வர்ணிக்கப்படும் வல்லரசு நாடான பிரிட்டனில் அமைதியான முறையில் வெள்ளை நிறவெறிக் கொடுமைகள் தொடர்கின்றன.

1993-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஸ்டீபன் லாரன்ஸ் என்ற கருப்பின மாணவன் தனது வெள்ளையின நண்பனுடன் பேருந்துக்காகக் காத்திருந்தபோது, இலண்டன் புறநகரான எல்தாமில் 5 வெள்ளை நிறவெறியர்கள் ஸ்டீபனைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டுத் தப்பியோடினர். இப்படுகொலையை நேரில் பார்த்த பலரும் சாட்சியமளித்த போதிலும், கொலைகாரர்களான வெள்ளை நிறவெறியர்களைப் பற்றி நன்கு அறிந்திருந்த போதிலும் பிரிட்டிஷ் போலீசார் அவர்களைக் கைது செய்யவில்லை. கொல்லப்பட்ட ஸ்டீபன் முன்னாள் பிரிட்டிஷ் காலனி நாடான ஜமைக்காவிலிருந்து குடியேறிய கருப்பின வம்சாவளியைச் சேர்ந்த இளைஞன் என்பதாலேயே, நிறவெறி பிடித்த போலீசு இக்கொலையை மூடி மறைக்க முயன்றது.

கொல்லப்பட்ட ஸ்டீபன் லாரன்சின் தந்தை நிவில் லாரன்ஸ் இது குறித்து வழக்குத் தொடுத்துப் போராடிய பிறகு, இக்கொலை விவகாரம் பற்றி ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடந்தது. ஏறத்தாழ ஆறாண்டுகள் நடந்த விசாரணைக்குப் பிறகு, பிரிட்டிஷ் போலீசார் நிறவெறிக் கொடுமையில் நிறுவனமயமாகிவிட்டனர் என்று நீதிபதி குற்றம் சாட்டியுள்ளார். ''அப்பட்டமாகவும் முழுமையாகவும் நிறவெறியால் நடந்த கொலையை, இளைஞர்களுக்கிடையிலான குழுச் சண்டையாகச் சித்தரித்தும், பொய்ச் சாட்சிகளைச் சோடித்தும், குற்றத்தைப் பதிவு செய்யாமல் இழுத்தடித்தும் போலீசார் வெள்ளை நிறவெறியில் மூழ்கிவிட்டனர்; இது பிரிட்டிஷ் குடிமக்களின் ஜனநாயக மாண்புக்கு ஏற்பட்ட அவமானம்'' என்றும் அந்நீதிபதி தனது விசாரணை அறிக்கையில் சாடியுள்ளார்.

இதைத் தொடர்ந்து பிரிட்டனில் வாழும் சிறுபான்மை மக்கள் மீதான வெள்ளை நிறவெறிக் கொடுமைகள், அவமானப்படுத்தல், அச்சுறுத்தல், கீழ்த்தரமாக நடத்துதல் பற்றிய புகார்கள் குவியத் தொடங்கின. தொலைக்காட்சி நேர்காணல் நிகழ்ச்சிகளில் ஆசிய, ஆப்பிரிக்க, தென்னமெரிக்க நாடுகளிலிருந்து குடியேறிய கருப்பின மக்கள் தமது குமுறலை வெளிப்படுத்தியுள்ளனர். இலண்டன் மாநகரில் 20% பேராக சிறுபான்மையினர் உள்ள போதிலும் நகரப் போலீசுத் துறையில் வெறும் 2% பேர்தான் வெள்ளையர் அல்லாதவர்கள் உள்ளனர். நாடு முழுவதும் மொத்தம் 24 கருப்பர்கள்தான் போலீசுத் துறையில் நடுத்தர நிலை அதிகாரிகளாக உள்ளனர். கடந்த ஆண்டு பிரிட்டிஷ் மகாராணியின் சிறப்பு காவற்படையிலேயே நிறுவனமயமான நிறவெறி நிலவுவதாகக் குற்றம் சாட்டப்பட்டு, பின்னர் சிறுபான்மை கருப்பினத்தவரையும் இப்படையில் சேர்க்க உத்திரவிடப்பட்டது. குற்றவாளிகளிலே கருப்பினத்தவர் என்றால் வெள்ளை நிறவெறியோடு மிருகத்தனமாகக் கொட்டடிகளில் சித்திரவதை செய்வது, வெள்ளையர் வாழும் பகுதியில் கருப்பர்கள் குடியிருக்க அனுமதி மறுப்பது, பொய்க் குற்றம் சாட்டி கருப்பர்களை விசாரணைக்குப் போலீசார் இழுத்துச் சென்று தொல்லைப்படுத்துவது, கருப்பர் வீடுகள் முன் நள்ளிரவில், துப்பாக்கியால் சுட்டுப் பீதியூட்டுவது, கருப்பினப் பெண்களிடம் ஆபாச சைகை காட்டி கேலி - கிண்டல் செய்வது, அங்காடிகளில் பல சரக்கு வாங்கும் கருப்பர்கள் திருடுகிறார்களா என்று பின் தொடர்ந்து கண்காணிப்பது என்பதாக பிரிட்டிஷ் சமுதாயமே வெள்ளை நிறவெறியில் மூழ்கியுள்ளதாகச் சமூகவியலாளர்கள் புலம்புகின்றனர்.



தமது அன்பு மகன் வெள்ளை நிறவெறியர்களால் கொல்லப்பட்ட இடத்தில் அஞ்சலி செலுத்தும் நிவில் லாரன்சு தம்பதியினர். அந்நிகழ்ச்சியில் பங்கேற்று, நிறவெறி எதிர்ப்பு நாடகமாடும் பிரிட்டிஷ் உள்துறைச் செயலர்.

எவ்வளவுதான் சிங்காரித்து கழுதைக் குட்டியை குதிரையாக்க முயன்றாலும், மூக்கு வெளுக்கும்போது அது தன்னை இனங்காட்டவே செய்யும். எவ்வளவுதான் ஜனநாயக வேடம் போட்டாலும், ஏகாதிபத்திய வல்லரசான பிரிட்டனின் காலனியாதிக்க - மேலாதிக்க வெறியின் ஓர் அங்கமாகவே வெள்ளை நிறவெறி நீடிக்கிறது என்ற உண்மை மீண்டும் நிரூபணமாகவே செய்யும்.



படிப்பகம்

www.padippakam.com



## கர்ப்பிணி கைதிக்கு காலில் விலங்கு!
### — அமெரிக்க சிறைகளில் காட்டுமிராண்டித்தனம்

அமெரிக்கச் சிறைகளில் பெண் கைதிகள் பாலியல் வன்முறைக்கும் மனிதத் தன்மையற்ற கொடூரமான சித்திரவதைக்கும் ஆளாகி வருகிறார்கள் என்ற உண்மையை சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனம் அண்மையில் தனது ஆய்வறிக்கையின் மூலம் அம்பலப்படுத்தியுள்ளது.

அமெரிக்கச் சிறைகளில் 1997-ஆம் ஆண்டில் 1,38,000 பெண் கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். 1985-ஆம் ஆண்டை விட இது மூன்று மடங்கு அதிகமாகும். போதை மருந்து ஒழிப்புப் போலீசுப் படையினரால் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளாலேயே இத்தகைய பெருக்கம் ஏற்பட்டது. சிறைக் கைதிகளின் பெருக்கத்திற்கு ஏற்ப சிறைக் கொட்டடிக் காவலர்கள் இல்லை என்பதால் ஆண் கைதிகளையே காவலர்களாக நியமிப்பது தொடர்ந்து நடக்கிறது. இது சர்வதேச மனித உரிமை விதிகளுக்கே எதிரானது. ஆனாலும், அமெரிக்கச் சிறைகளில் பெண் கைதிகளின் கொட்டடிக் காவலர்களில் 70% பேர் ஆண்களாகவே உள்ளனர்.

இவர்கள் பெண் கைதிகளை ஆபாசமாகத் திட்டுவதும், அடிப்பதும், சோதனை என்ற பெயரில் உறுப்புகளைத் தொடுவதும், குளிக்கும் போதும் உடை மாற்றும் போதும் கண்காணிப்பதும், பாலியல் வன்முறையை ஏவுவதும் கேள்வி முறையின்றித் தொடர்கின்றன. பெண் கைதிகள் மீதான பாலியல் சித்திரவதைகளை, சர்வதேச மனித உரிமைச் சாசன விதிகள் மிருகத்தனமான வன்முறை என்று குறிப்பிடுகின்றன. ஆனால், அவை அமெரிக்கச் சிறைகளில் அன்றாட ஒழுங்காக மாறிவிட்டது.

சிறை ஊழியர்களோ, காவலர்களோ பெண் கைதிகளிடம் பாலியல் வன்முறையில் ஈடுபட்டால் அமெரிக்காவின் 12 மாநிலங்களில் அவர்களைத் தண்டிக்க எந்தக் குற்றவியல் சட்டமும் இதுவரை இல்லை. 1992-லிருந்து 1998 வரை பெண் சிறைக் கைதிகள் மீது நடந்த பாலியல் சித்திரவதை, தாக்குதல், வன்முறை என 96 வழக்குகளை பொது மன்னிப்பு நிறுவனம் கண்டறிந்துள்ளது. ஆனால், இவற்றுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் சிறை நிர்வாகம் மேற்கொள்ளவில்லை. மாறாக, இதுபற்றி முறையிட்ட பெண் கைதிகள் தாக்குதலுக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாயினர்.

வன்முறையில் ஈடுபட்டவர்கள், தப்பிக்க முயற்சித்தவர்கள் எனக் காரணம் காட்டி விசாரணைக்கு அழைத்து வரும்போதும், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் போதும் ஏன், பிரசவத்தின் போதும் கூட பெண் கைதிகளின் கால்களில் விலங்கு பூட்டுவது அமெரிக்கச் சிறைகளில் தொடர்ந்து நடக்கிறது. 1997-98-இல் 2200 கர்ப்பிணிப் பெண்களுக்குச் சிறைக் கொட்டடியிலும் விலங்கு பூட்டப்பட்டிருந்தது. இவர்களில் 1350 பேருக்கு விலங்கு பூட்டிய நிலையிலேயே கொட்டடியில் பிரசவம் நடந்துள்ளது. குழந்தை பிறந்ததும் அதைத் தனது அணைப்பில் வைத்துப் பராமரிக்க முடியாமல், தாயும் சேயும் பிரிக்கப்படும் கொடுமை தொடர்கிறது. சிறையில் பிறந்த 2 இலட்சம் குழந்தைகளும் அவற்றின் தாய்மார்களான 80,000 இளம் பெண்களும் அமெரிக்கச் சிறைகளில் உரிய மருத்துவ - சுகாதார வசதிகள் இன்றி வதைபடுகின்றனர் என்று சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனம் ஆய்வறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளது.

தன்து சொந்த நாட்டிலேயே மனித உரிமை, ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து வரும் அமெரிக்க ஏகாதிபத்திய காட்டுமிராண்டிகளுக்கு, உலகெங்கும் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் நிலைநாட்டப் போவதாகக் கூச்சலிட்டுக் கொண்டு, ஏழை நாடுகள் மீது போர் தொடுக்கவும் பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் என்ன அருகதை இருக்கிறது?

## "விவசாயி கிள்ளுக்கீரையல்ல!"

### துறையூர் நகரச் சந்தை குத்தகைதாரர்களின் அடாவடித்தனத்தையும், அநியாயக் குத்தகையையும் எதிர்த்துக் கிளர்ந்தெழும் விவசாயிகள்

துறையூர் நகர காய்கறிச் சந்தையில் வியாபாரிகள் வைத்ததே சட்டமாக உள்ளது. விவசாயிகள் சந்தைக்குக் கொண்டு வரும் காய்கறிகளை ஒன்றுக்குப் பாதியாக விலை கேட்கின்றனர் வியாபாரிகள். அப்படி வாங்கியதைக் கணக்கு முடிக்கும் போது, அதிலும் பாதியாகக் குறைத்தே பணம் தருகின்றனர்.

விவசாயிகளே சந்தையில் தமது விளைச்சலை விற்கலாமென்றால், சந்தை குத்தகைக்காரர்களான துரைராஜ், முருகன் ஆகியோர் நகராட்சி விதித்த கட்டணத்தை விடப் பத்து மடங்கு அதிகமாகக் கேட்கின்றனர். அநியாயக் குத்தகையைத் தர மறுப்பவர்களின் காய்கறிகளைச் சூறைவிடுவதோடு, விவசாயிகளைக் கைநீட்டி அடிக்கவும் செய்கின்றனர். போலீசில் முறையிட்டாலும் நடவடிக்கை எடுப்பதில்லை.

விவசாயிகளுக்கு என காய்கறிச் சந்தையில் தனி இடம் ஒதுக்கித் தரக் கோரியும், விவசாயிகளைத் தாக்கி அநியாயக் குத்தகை வசூலிக்கும் ஒப்பந்தக்காரர்களான துரைராஜ், முருகன் ஆகியோரைக் கைது செய்து, அவர்களின் குத்தகை ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரியும் துறையூர் விவசாயிகள் விடுதலை முன்னணி, 4.3.99-இல் கண்டனப் பேரணி, ஆர்ப்பாட்டம் நடத்தியது.

50 பெண்கள் உட்பட 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள், வி.வி.மு. அமைப்பாளர் தோழர் பொம்மன் தலைமையில் நடந்த பேரணி, ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். போலீசிடம் அனுமதி பெற்றிருந்தும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தாததால் சாலை மறியல் செய்தனர்.

கிட்டதட்ட ஒரு மணி நேரம் விவசாயிகள் விடாப்பிடியாக போராடிய பிறகு தான், போலீசு போக்குவரத்தை ஊர்வலம் செல்லுவதற்கு வசதியாக ஒழுங்குபடுத்தித் தந்தது. ஊர்வலத்தின் முடிவில், வட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்குள் ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில், விவசாயிகளைக் கிள்ளுக்கீரையாக எண்ணி திமிரோடு நடந்து கொள்ளும் குத்தகைதாரர்களின், அதிகாரிகளின் ஊழல் கூட்டணியை அம்பலப்படுத்தி விவசாயிகளும், வி.வி.மு. தோழர்களும் பேசினர். இதன் பின்னும், அதிகார வர்க்கம் விவசாயிகளுக்கு சந்தையில் தனி இடம் ஒதுக்கித் தர மறுத்தால், போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு விவசாயிகள் தயாராகவே உள்ளனர்.

— தகவல்: வி.வி.மு.,
துறையூர் வட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

# நீதி – மாண்பு பற்றிப் பேச சட்டமன்றம் – நீதிமன்றத்திற்கு அருகதையுண்டா?

அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் தாமரைக்கனி சட்டமன்ற விவாதத்தின் போது அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தைத் தாக்கி, மூக்கைக் கிழித்து இரத்தம் சிந்த வைத்தார். இதற்காக அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்பசாமி, தாமரைக்கனி இருவரும் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டனர்.

இது போதாது என சட்டமன்ற உறுப்பினர்கள், மந்திரிகள் கூறியதைத் தொடர்ந்து, தமக்குள்ள அதிகாரத்தின்படி தாமரைக்கனியைக் கைது செய்து ஒரு வாரம் சிறையிலடைக்க சபாநாயகர் உத்தரவிட்டார். இது 'இயற்கை நீதி'க்கு முரணானது என்ற அ.தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் மணியன் என்பவரின் 'கேபியல் கார்பஸ்' மனுவை ஏற்று, உயர்நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வு தண்டனையை ரத்து செய்து, தாமரைக்கனியை விடுதலை செய்ய உத்தரவிட்டது.

உயர்நீதி மன்றம் உத்தரவிட்ட போதே சட்டமன்றத்தில் சபை அவமதிப்பு, உரிமை மீறுதல் பிரச்சினைக்காக, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி, சபை முடிவாக தாமரைக்கனியை 15 நாள் காவலில் வைக்க உத்தரவிட்டனர்.

**வீரபாண்டி ஆறுமுகத்தின் மூக்கு கிழிந்து போன பொழுதுதான், சட்டசபை மாண்பும் கிழிந்து போனதா?**



நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதா அல்லது சட்டமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதா என சிறை அதிகாரிகள் குழப்பிக் கொண்டிருந்த போது, உயர்நீதி மன்றத்தின் 'இறையான்மையை'க் காப்பாற்ற, தாமரைக்கனியை விடுதலை செய்து; உடனே சட்டமன்ற 'இறையாண்மை'யைக் காக்க மீண்டும் சிறைக் காவலில் வைக்க சபாநாயகர் உத்தரவிட்டார். மீண்டும் உயர்நீதி மன்றம் சட்டமன்ற இறையாண்மையில் தலையிட்டால் உரிய நடவடிக்கை எடுப்போம் என்றார்.

உயர்நீதி மன்றம் இடைக்காலத் தீர்ப்பாக தாமரைக்கனியை பிணையில் விடுதலை செய்து, வழக்கை 30-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தது. முதல்வர் கருணாநிதியின் ஆலோசனைப்படி, இத்தீர்ப்பை சபாநாயகர் ஏற்றுக் கொண்டார். 30-ஆம் தேதி இறுதித் தீர்ப்பு கூட சட்டமன்ற முடிவுக்கு சாதகமாக இருக்காது என சபாநாயகர் கூறுகிறார். அதாவது நீதிபதிகள் விலைபோய் விட்டனர் எனக் கூறாமல் கூறுகிறார். ஆயினும், நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்புக்குப் பின் ஏப்ரல் 10-ஆம் தேதி அனைத்து சபாநாயகர்களின் மாநாட்டில் இது பற்றி இறுதி முடிவெடுக்கப்படும் என்று தமிழக சபாநாயகர் கூறியுள்ளார்.

முதல்வர் கருணாநிதியோ, 'தமிழகம் பல்வேறு விசயங்களில் முன்னோடியாக இருந்துள்ளது. சட்டமன்றமா, நீதிமன்றமா என்ற இந்தப் பிரச்சினையிலும் ஒரு முடிவு ஏற்பட்டு, இதிலும் தமிழகம் முன்னோடியாக இருக்கப் போகிறது' என்று பெருமிதமாகப் பேசுகிறார்.

சட்டமன்ற உறுப்பினர்கள், 'சட்டமன்றம்தான் சட்டங்களையே உருவாக்குகிறது. சட்டமன்ற அதிகாரத்திற்குள் நீதிமன்றம் மூக்கை நுழைப்பது தவறு. நீதிமன்ற உத்தரவை ஏற்கக் கூடாது' என்றபோது, 'நிலைப்படி சிறிதாயிருந்தால் உயரமானவர்கள் குனிந்துதான் செல்ல வேண்டும். நிமிர்ந்து சென்றால் இடிக்கும்' என்று சட்டமன்றம்தான் உயர்ந்தது, அதிகாரம் கொண்டது எனக் கூறாமல் கூறுகிறார், கருணாநிதி.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக அரசியல் சட்டம், அதை இயற்றுகின்ற சட்டமன்றம் - பாராளுமன்றம், நிறைவேற்றுகின்ற அதிகாரிகள் - நீதிமன்றம், கண்காணிக்கின்ற பத்திரிகைத் துறை என்று பட்டியலிடுகின்றனர். இவை ஒன்றுக்கொன்று சமமானவை; ஒன்றினுள் மற்றொன்று தலையிடுவதில்லை; ஆனால், கண்காணிப்பதும், முறைப்படுத்துவதும் என்று ஏற்றுக் கொண்டுள்ளனர். அதனால்தான் சட்டமன்ற உரிமையில் நீதிமன்றம் தலையிடுவதா என்று ஒரு பிரிவினரும், இயற்கை நீதி மறுக்கப்பட்டதால்தான் நீதிமன்றம் தலையிட வேண்டியதாயிற்று என்று எதிர்த் தரப்பும் வாதிடுகின்றனர்.

இதேபோல 1963-64-ஆம் ஆண்டில் உத்திரப் பிரதேசத்தில் ஒரு பிரச்சினை எழுந்தது. சட்டமன்ற அவமதிப்பு - உரிமை மீறல் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நபரை சிறைக்கு அனுப்பும் அதிகாரம் பேரவைக்கு உள்ளது என அலகாபாத் உயர்நீதி மன்றம் இறுதித் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஏற்கனவே, எம்.ஜி.ஆர். முதல்வராயிருந்த போது வானளாவிய அதிகாரம் உள்ளது என முழங்கிய அன்றைய சபாநாயகர் பி.எச். பாண்டியன், இன்று தாமரைக்கனியைத் தண்டிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு இல்லை என்று அறிக்கை விடுகிறார். முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதி மோகன் உயர்நீதி மன்றத் தீர்ப்பு தவறானது என்று கூறியுள்ளார்.

சட்டசபையின் 'மாண்பு', 'புனிதம்' இவற்றை புதிதாக யாரும் கெடுத்துவிட

**தாக்கப்பட்டதாக நாடகமாடும் தாமரைக்கனி மட்டும்தான் சட்டமன்றத்தில் உள்ள ஒரே அரசியல் ரவுடியா?**





படிப்பகம்

www.padippakam.com

முடியாது. நாடாளுமன்றமும், சட்டமன்றமும் அரட்டை மடங்களாக, பன்றித் தொழுவங்களாக நாளும் நாறிக் கொண்டுள்ளன.

சட்டமன்றத்தில் இப்படிச் சம்பவமா என நீதிமன்றம் கண்டிக்கிறது. நீதிமன்றம் புனிதமானது. அதன் தீர்ப்பை யாரும் விமர்சிக்கக் கூடாது என்றும், மீறினால் நீதிமன்ற அவமதிப்பு எனச் சிறையிலும் அடைக்கிறது நீதிமன்றம். சமீபத்தில் ஒரு வழக்கிறஞர் உச்சநீதி மன்ற நீதிபதியை நோக்கி செருப்பு வீசியதற்காக எவ்வித விசாரணையுமின்றி சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

ஆனால் நீதிமன்றம் புனிதமானது தானா? பணமிருந்தால் உச்சநீதி மன்றத்தி லேகூட நீதியை விலை கொடுத்து வாங்கி விட முடியும். இன்று இயற்கை நீதி, சட்டத்தின் ஆட்சி பற்றி கவலைப்படும் உயர்நீதி மன்றம் இவற்றை எல்லாம் காலில் போட்டு மிதித்துத் தானே 'தேசியப் பாதுகாப்புச் சட்டம்', 'தடா'-வில் அப்பாவிகளின் உரிமைகளைப் பறித்தது. அப்போதெல்லாம் இயற்கை நீதி பற்றியோ, சட்டத்தின் ஆட்சி பற்றியோ கவலைப்படவில்லையே.

இன்று கூட மத்திய அரசையே ஆட்டிப் படைக்கும் அ.தி.மு.க. கட்சியின் சட்ட மன்ற உறுப்பினர்கள் என்பதால்தானே இந்தத் தீர்ப்புகள். கருணாநிதிக்கு பா.ஜ.க.வும் காங்கிரசுமே எதிராக உள்ளன. இந்த இரு 'தேசிய'க் கட்சிகளுமே பார்ப்பன - பாசிச ஜெயாவை உச்சி மோந்து நட்புக் கொள்கின்றன. இந்த அரசியல் சூழல் எதிர்மறையாக இருந்திருந்தால் இதே நீதிபதிகள், இந்த வழக்கை கால்தூசுக்கும் மதித்திருக்க மாட்டார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

மதவெறிக் கும்பலின் நரபலி வேட்டைகளை அம்பலப்படுத்திப் பேசிய கோவை ம.க.இ.க. தோழர்களைப் பிணையில்விட மறுத்து, 60 நாள் சிறையிலிடைத்த உயர்நீதி மன்றம், ஆடிட்டர் ராஜசேகரைக் கொலை செய்ய முயன்ற சசிகலாவின் அண்ணன் மகன் மகாதேவனை 15 நாட்களுக்குள் பிணையில் விடுவித்தது.

எனவே, இறையாண்மை, புனிதம் என்பதெல்லாம் பம்மாத்து. பணமிருந்தால் எல்லாமே பல்லிளிக்கும். சொன்னபடி ஆடும். நீதிமன்றத்தில் தினசரி நிகழ்ச்சிதான் இது. விதிவிலக்காக, ஒரு சில தனிநபர் பிரச்சினைகளில், ஓரிரு முறை நியாயமாகத் தீர்ப்பு வழங்கியிருக்கலாம்.

ஊரைக் கொள்ளையடித்து உலையில் போட்டு முழுங்கிய ஜெயா மீதான சிறப்பு நீதிமன்ற வழக்குகளை இத்தனை ஆண்டுகளாக இழுத்தடிப்பதற்கு என்ன காரணம்? மிகமிக அற்பக் காரணங்களுக்காக, இன்னும் பல ஆண்டுகள் இழுத்தடிப்பார்கள், ஜெயா மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமரும் வரை. பிறகு எங்கே உள்ளது நீதி?

● சுப்பு



# நாட்டை மீண்டும் காலனியாக்க வரும் அமெரிக்க மான்சாண்டோ விதை கம்பெனியை விரட்டியடிப்போம்!

*நமது நாட்டு விவசாயிகளை ஒரு பேரபாயத்தில் சிக்க வைக்கும் சதிவலை பின்னப்பட்டு வருகிறது. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த மான்சாண்டோ என்ற பன்னாட்டு நிறுவனத்திற்கு, தனது பருத்தி விதைகளை, தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் சோதனை முறையில் பயிரிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.*

*மான்சாண்டோவின் பருத்தி விதையில் இருந்து முளைக்கும் பருத்திச் செடியில் இருந்து விதைகளை எடுத்து வைத்து, அடுத்த பட்டத்திற்கு விவசாயிகள் பயன்படுத்த முடியாது; அவ்விதைகளுக்கு முளைக்கும் திறன் இருக்காது. அவ்விதைகளின் முளைக்கும் திறனைக் காயடிக்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திதான், மான்சாண்டோ, தனது பருத்தி விதைகளை உருவாக்கியுள்ளது. ஒருமுறை மான்சாண்டோ விதைகளைப் பயிரிடும் பருத்தி விவசாயி, பிறகு தனது வாழ்நாளெல்லாம் பருத்தி விதைகளுக்கு மான்சாண்டோவைதான் அண்டியிருக்க நேரிடும்.*

*பாரம்பரிய இந்தியப் பருத்தி விதைகளை அழித்து, இந்தியப் பருத்தி விவசாயிகளை தனது கொத்தடிமைகளாக்கும் சதித் திட்டத்தோடுதான் மான்சாண்டோ இந்தியாவில் காலடி எடுத்து வைத்துள்ளது.*

*பருத்தி, ஒரு துவக்கம்தான். நாளை, டங்கல் ஒப்பந்தத்தைக் காட்டி, உணவுப் பயிரிலும் இதே தொழில் நுட்பத்தைப் பன்னாட்டு நிறுவனங்கள் புகுத்தக்கூடும். இன்று, தொழில் நுட்பத்திற்கும், மூலதனத்திற்கும் ஏகாதிபத்தியங்களிடம் கையேந்தும் நிலையில் வைக்கப்பட்டுள்ள இந்தியா, நாளை, உணவுக்குக் கூட ஏகாதிபத்திய நாடுகளை அண்டி வாழ வேண்டிய அவல நிலை உருவாகி விடும்.*

*இப்படிபட்ட பேரபாயத்தில் இருந்து நாட்டையும், மக்களையும் காப்பாற்ற ஓட்டுக் கட்சிகளை நம்புவது, நம் தலையில் நாமே மண்ணை வாரிக் கொட்டிக் கொள்வது போலாகும். தாராளமயம் - உலகமயம் என்ற பெயரில், இந்த ஓட்டுக்கட்சிகள்தான் மான்சாண்டோவிற்கு அனுமதியளித்து, இப்படிபட்ட பேரபாயத்தை உருவாக்கியுள்ளன.*

*இந்நிலையில், தமிழகத்தில் இயங்கி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, மக்கள் கலை இலக்கியக் கழகம் —— இம்மூன்று புரட்சிகர அமைப்புகளும் இணைந்து,* ''நாட்டை மீண்டும் காலனியாக்க வரும் அமெரிக்க மான்சாண்டோ விதை கம்பெனியை விரட்டியடிப்போம்'' *எனும் இயக்கத்தை எடுத்து, மான்சாண்டோவிற்கு எதிராகத் தமிழக விவசாயிகளை அணிதிரட்டி வருகின்றன. இவ்வியக்கத்தின் ஒரு பகுதியாக,* தொழிலாளர் தினமான மே 1 அன்று, மதுரை நகரில், பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

*மான்சாண்டோ நமது காலைச் சுற்றியிருக்கும் நச்சுப் பாம்பு; அதை விரட்டியடிக்காமல் நமக்கு வாழ்வு இல்லை.*

**மான்சாண்டோவை விரட்டியடிப்போம்!**
**நாடு மறுகாலனியாவதைத் தடுப்போம்!**

இவண்,
வி.வி.மு., பு.மா.இ.மு., ம.க.இ.க., தமிழ்நாடு.


படிப்பகம்

www.padippakam.com

# இந்து மதவெறி அமைப்புகளின் வரி ஏய்ப்பு மோசடிகள்

**விசுவ இந்து பரிசத், அறக்கட்டளை எனும் போர்வையில் ஒளிந்து கொண்டு, கோடிகோடியாய் வருமான வரி ஏய்ப்பிலும் ஹவாலா பணக் கடத்தலிலும் ஈடுபட்டு வருகிறது.**

விசுவ இந்து பரிசத் - இந்து மதவெறி நிறுவனமான ஆர்.எஸ்.எஸ். குடை அமைப்புகளுள் ஒன்று. அயோத்தியில் இராமன் கோயில் கட்ட செங்கல் பூசை, இரத யாத்திரை என மதவெறிப் படுகொலைகளை நடத்தி, பாபர் மசூதியை இடிக்கத் தலைமை தாங்கிய அமைப்பு. மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமன் கோயில் கட்ட, சட்டவிரோதமான முறையில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வரும் அமைப்பு; கிறித்துவ பாதிரியாரை உயிரோடு எரித்தும், தேவாலயங்களை இடித்தும், தனது துணை அமைப்பான பஜ்ரங் தளம் என்னும் குண்டர் படையைக் கொண்டு வெறியாட்டம் போட்டுவரும் அமைப்பு.

ஆனால், விசுவ இந்து பரிசத் மத நோக்கங்களுக்கான நிறுவனம் அல்ல; கல்வி, மருத்துவம், ஏழைகளுக்கு உதவி முதலான சேவைகளைச் செய்து வரும் ஓர் அறக்கட்டளை நிறுவனம் என்றால், அதை எந்த முட்டாளும் நம்ப மாட்டான். இருப்பினும் விசுவ இந்து பரிசத் தன்னை ஓர் அறக்கட்டளை நிறுவனமாகவே பதிவு செய்து கொண்டு, பல நூறு கோடி ரூபாய் வருமான வரி ஏய்ப்பு - மோசடிகளைத் தொடர்ந்து செய்து வருகிறது.

கோடி கோடியாய் சொத்து சேர்த்துள்ள பெருமுதலாளிகள், நிலப்பிரபுக்கள், ஓட்டுக்கட்சித் தலைவர்கள், சினிமாக்காரர்கள், இரகசிய உலகப் பேர்வழிகள் முதலானோர் வருமானவரி ஏய்ப்பு செய்யவும், கறுப்புப் பணத்தை அனுபவிக்கவும் செய்துள்ள சட்டபூர்வ ஏற்பாட்டுக்குப் பெயர்தான் அறக்கட்டளை. ஏனெனில், அறக்கட்டளை நிறுவனத்துக்கு வருமான வரிகள் ஏதும் கிடையாது. டாடா - பிர்லா அறக்கட்டளையிலிருந்து ராஜீவ், எம்.ஜி.ஆர். அறக்கட்டளை வரை இப்படி ஏராளமான அறக்கட்டளை நிறுவனங்கள் உள்ளன. இவை ஆண்டுதோறும் தமது மொத்த வரவில் 75% க்கு மேலான தொகையை கல்வி, மருத்துவம், அனாதைகள் - ஆதரவற்றோருக்கு உதவி, பொதுச் சேவை முதலான தரும காரியங்களுக்குச் செலவிட்டதாகக் கணக்கு காட்டி, வருமான வரித் துறையிடம் தணிக்கை செய்து கொள்கின்றன. இதுவே கறுப்புப் பணத்தை மூடி மறைத்து அனுபவிக்கும் சட்டபூர்வ மோசடியாகும்.

ஆனால், இந்து மதவெறி அமைப்பான விசுவ இந்து பரிசத் மோசடியிலும் மோசடி செய்து, பல ஆயிரம் கோடிகளைச் சுருட்டியுள்ளது.

குறிப்பிட்ட ஒரு மதத்துக்கோ, சாதிக்கோ நலம் பயக்கும் வகையில் செயல்படும் எந்த நிறுவனத்தையும் அறக்கட்டளையாக ஏற்க முடியாது என்று வருமானவரிச் சட்டங்கள் கூறுகின்றன. மேலும், அறக்கட்டளைக்குச் சேரும் தொகையில் 75% தொகையை சேவை நோக்கங்களுக்காகச் செலவிட வேண்டும். முதலாவதாக, இந்து மதவெறி அமைப்பான விசுவ இந்து பரிசத்தை ஓர் அறக்கட்டளை நிறுவனமாகக் காட்டுவதே மோசடியானது. அப்படியே அறக்கட்டளையாக கூறிக் கொண்டாலும், அது காட்டும் வரவு - செலவு கணக்குகளோ அதைவிட மோசடியானது.

வரவு - செலவு தணிக்கை அறிக்கையில் உள்ளபடி, விசுவ இந்து பரிசத் ஆண்டுக்கு ஏறத்தாழ 2 கோடி ரூபாய் நன்கொடைகள் மூலம் பெற்றுள்ளதாகக் கணக்கு காட்டுகிறது. ஆனால், இதைவிடப் பல நூறு மடங்கு அதிகமான தொகையைத் திரட்டியுள்ளது என்று வருமான வரித் துறையினரே கூறுகின்றனர். 1997-98 ஆம் ஆண்டின் வரவு - செலவு தணிக்கை அறிக்கையின் படி, ரூ. 2.7 கோடி வசூலானதாகவும், இதில் 1.52 கோடி ரூபாய் சேவை மற்றும் உதவி நோக்கங்களுக்குச் செலவிடப்பட்டதாகவும் விசுவ இந்து பரிசத் கூறுகிறது. இந்தப் பொய்க்கணக்குகூட, அறக்கட்டளை நிறுவனச் சட்ட விதிகளை ஈடேற்றுவதாக இல்லை. மேலும், எந்த அமைப்பு, தனிநபர் அல்லது சேவைக்காக பணம் செலவிடப்பட்டது என்கிற விபரமும் அதில் இல்லை. ஏழைகளுக்கு அன்னதான உதவி என்ற பெயரில் ரூ. 10,101 மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 97 - 98-ஆம் ஆண்டில், இப்படி எங்கேயும் அன்னதானம் செய்யப்படவில்லை என்று விசுவ இந்து பரிசத்தைச் சேர்ந்த சாமியார்களே ஒப்புக் கொள்கின்றனர்.

1990-இல் செங்கல் பூசை நடந்த போது மட்டுமே ரூ. 8.29 கோடி திரட்டியதாக, தனது வரவு - செலவு தணிக்கை அறிக்கையில் கூறுகிறது. ஆனால், அப்போது இராமன் கோயில் கட்ட ஏறத்தாழ 20 கோடி ரூபாய்க்கும் மேலாக நன்கொடை திரட்டியுள்ளதாக விசுவ இந்து பரிசத் தலைவர்கள் மேடைகளில் வெளிப்படையாகப் பேசினர். இதற்கும் மேலாக, தங்க - வைர நகைகள், வாகனங்கள் எனப் பல நூறு கோடிக்கு நிதி திரட்டப்பட்ட போதிலும், விசுவ இந்து பரிசத் கூசாமல் பொய்க் கணக்கு காட்டியது. இந்தப் பொய்க் கணக்கின்படியும், சேவைப் பணிகளைச் செய்த்தற்கான செலவுக் கணக்குகளும் முறையாக இல்லை. இதுதவிர, விசுவ இந்து பரிசத்தின் துணை அமைப்புகளாகக் காட்டப்படும் பஜ்ரங் தளம், சிரீராம ஜென்மபூமி நியாஸ் முதலான 6 அமைப்புகளும் வருமான வரிச் சட்டத்திற்கு உட்பட்டு செயல்படவுமில்லை. அவற்றின் வரவு - செலவு தணிக்கை அறிக்கைகளிலும் மோச

**அயோத்தியில் இராமன் கோயில் கட்டவும், இந்து தர்மத்தைக் கட்டிக் காக்கவும் விசுவ இந்து பரிசத் நடத்தும் சாமியார்கள் - சன்னியாசிகள் மாநாடு. அறக்கட்டளை என்ற பெயரில் பகிரங்கமாக நடக்கும் மதவெறி நடவடிக்கை.**





படிப்பகம்

www.padippakam.com

டிகள் மலிந்து கிடக்கின்றன.

வருமான வரிச் சலுகை உள்ள நிலையில் ஓர் அறக்கட்டளை நிறுவனம், வருமானத்துக்கும் அதிகமாகச் செலவிடக் கூடாது என்றும், அறக்கட்டளை நிறுவனமே நன்கொடை இன்றிச் செயல்பட முடியாத இக்கட்டான சூழ்நிலையில்' மட்டுமே முன் அனுமதி பெற்றுச் செலவிடலாம் என்றும் வருமான வரிச் சட்டங்கள் கூறுகின்றன. ஆனால் விசுவ இந்து பரிசத்தின் துணை அமைப்பான சிறீராம ஜென்மபூமி நியாஸ், 1990-ஆம் ஆண்டின் வரவு - செலவு தணிக்கை அறிக்கையில் ரூ. 1.20 கோடியை வருமானத்துக்கும் அதிகமாகச் செலவிட்டதாகக் கணக்கு காட்டியுள்ளது.

1991-ஆம் ஆண்டில் இந்த அமைப்பு, நன்கொடைகள் மூலம் ரூ. 8.48 லட்சம் திரட்டியதாகக் கூறுகிறது. ஆனால், நன்கொடை ரசீதுகளை அச்சிட ரூ. 31 லட்சமும் அதை நாடு முழுவதும் விநியோகிக்க ரூ. 1.69 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 32.69 லட்சம் செலவிட்டதாகக் கூசாமல் புளுகுகிறது. அதாவது, வரவு ரூ. 8.48 லட்சம்தான்; செலவோ ரூ. 32.69 லட்சம் என்கிறது. ஆனால், இந்த அமைப்பின் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

1990-இல் விசுவ இந்து பரிசத்தின் வருமானவரி மோசடிகளை ஆராய முயன்ற விஸ்வபந்து குப்தா என்ற வருமான வரித் துணை இயக்குனர், இடமாற்றம் செய்யப்பட்டு, பின்னர் தற்காலிகப் பணி நீக்கமும் செய்யப்பட்டார். எந்த அளவுக்கு அதிகார வர்க்கத்தில் இந்துவெறியர்களின் ஆதிக்கம் நிலவுகிறது என்பதற்குச் சான்றுகூற இதுவொன்றே போதுமானது.

விசுவ இந்து பரிசத், எந்த வெளிநாட்டிலிருந்தும் நன்கொடைகள் பெறவில்லை என்கிறது. ஆனால், ஹவாலா புள்ளியான எஸ்.கே. ஜெயினின் தரகராக இலண்டனில் இயங்கும் மோகினி ஜெயின் மூலமாக, வெளிநாடுகளில் திரட்டிய கறுப்புப் பணத்தை ஹவாலா வழியில் இந்தியாவில் விசுவ இந்து பரிசத் பெற்றுள்ளது. ஹவாலா வழக்கின் ஆரம்ப விசாரணையிலேயே இந்த விவகாரம் மையப் புலனாய்வுத் துறைக்குத் தெரிய வந்தது. ஆனால், ஹவாலா வழக்கு விசாரணைக்கு சர்வ கட்சி ஆதரவுடன் சமாதி கட்டப்பட்டதால், இந்த விவகாரம் வெளியே தெரியாமல் மூடிமறைக்கப்பட்டு விட்டது.

விசுவ இந்து பரிசத்தின் தலைவரான அசோக் சிங்காலின் மருமகனுக்குச் சொந்தமான மும்பையிலுள்ள ''கம்ப்யூட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட்'' என்ற நிறுவனம் பங்கு பத்திர மோசடி வழக்கில் சிக்கியது. இந்நிறுவனத்தின் பெயருக்கு வெளிநாடுகளில் வாழும் பார்ப்பனச் செல்வந்தர்கள் மூலம் கேட்போலைகளை அனுப்பச் செய்து, அதன் மூலம் விசுவ இந்து பரிசத் அந்நியச் செலாவணி மோசடியில் ஈடுபட்ட விவகாரம் மெதுவாகக் கசிந்தது.

ஆனால், இதுபற்றி விசாரணை நடத்துவதற்கு முன்பே பார்ப்பன அதிகாரிகள் தில்லுமுல்லுகள் செய்து மூடி மறைத்துவிட்டனர்.

வெளிநாடுகளிலிருந்து நன்கொடைகள் பெறவில்லை என்று விசுவ இந்து பரிசத் கூறினாலும், அதன் 6 துணை அமைப்புகளில் ஒன்றான ''பாரத் கல்யாண் பிரதிஷ்தான்'' என்ற அமைப்பு கடந்த ஐந்து ஆண்டுகளாக சட்டபூர்வமாகவே வெளிநாடுகளில் வாழும் இந்துக்களிடமிருந்து நன்கொடை பெற்று வருகிறது. ஆனாலும், அது பெற்ற தொகைக்கும் செலவுக்குமான கணக்குகளை இன்றுவரை முறையாகச் சமர்ப்பிக்கவில்லை.

விசுவ இந்து பரிசத்தின் மோசடிகளைச் சட்டபூர்வமாக்கும் முயற்சியாக வருமான வரிச் சட்டத்தின் 11,12-ஆவது விதிகளில் திருத்தம் செய்ய பாரதீய ஜனதா அரசு முயற்சித்து வருகிறது. மேலும், ஓர் அறக்கட்டளை நிறுவனம் திரட்டும் நன்கொடையில் 5% அளவுக்கு சாதி, மத நிறுவனங்களுக்குச் செலவிடலாம் என்று துணை விதிகளை உருவாக்கவும் தீவிரமாக முயற்சிக்கிறது. இதையொட்டி எதிர்க்கட்சிகள் மூலமாகவும், வருமான வரித்துறையினர் மூலமாகவும் விசுவ இந்து பரிசத் செய்துவரும் மோசடிகள் மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளன.

வருமான வரித்துறையினர் குற்றம் சாட்டுவது ஒருபுறமிருக்க, துவாரகா மட சங்கராச்சாரியான சொரூபானந்தா, ''அயோத்தியில் இராமன் கோயில் கட்டுவது என்ற பெயரில் விசுவ இந்து பரிசத் பலநூறு கோடிகளை மோசடி செய்துள்ளது. வசூலான தொகையை பரிசத்தின் தலைவர்கள் ஏப்பம் விடுகின்றனர். இந்துக்களை முட்டாளாக்கி பரிசத் ஏய்க்கிறது. இம்மோசடி பற்றி விரிவான விசாரணை நடத்தவேண்டும்'' என்று தனக்கு உரிய பங்கு கிடைக்காத ஆதங்கத்தில் உண்மையைப் போட்டு உடைக்கிறார். அயோத்தியின் முக்கிய சன்னியாசிகளான மகந்து அவைத்யநாத், மகந்து ராம்சந்திரதாஸ் ஆகியோர் விசுவ இந்து பரிசத்தின் அறக்கட்டளைக் குழு தலைமைப் பொறுப்பில் இருந்தாலும், நிதி மோசடி மற்றும் பங்கு பிரிப்பதில் ஏற்பட்ட தகராறு காரணமாக அண்மைக்காலமாக அவர்கள் எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்வதில்லை.

உண்மையில், விசுவ இந்து பரிசத்



**கையிலே குறுவாளுடன் அணிவகுத்து நிற்கும் பஜ்ரங் தளக் குண்டர்கள்: மதவெறி காட்டுமிராண்டிகளா? அறக்கட்டளை நிறுவனத்தின் சமூகத் தொண்டர்களா?**

திரட்டும் கோடிக்கணக்கிலான பெருந்தொகை இந்துவெறி குண்டர்களைப் பயிற்றுவிக்கவும், தீனி போடவும், கலவரங்களைக் கட்டவிழ்த்து விடுவதற்குமே செலவிடப்படுகிறது. பரிசத்தின் இளைஞர் அமைப்பாகச் சித்தரிக்கப்படும் பஜ்ரங் தளத்துக்குத்தான் பெருமளவு நிதி செலவிடப்படுகிறது. அதிநவீன துப்பாக்கிகள், வாகனங்கள், தொலைதொடர்புச் சாதனங்கள் கொண்ட அமைப்பு ரீதியான பாசிச குண்டர் படையாக பஜ்ரங்தளம் வளர்க்கப்படுகிறது. ஆனாலும், இந்த உண்மைகளை மூடி மறைத்து வரவு - செலவு தணிக்கை அறிக்கைகள் காட்டப்படுகின்றன.

நேர்மை, நாணயம், ஒழுக்கம், கட்டுப்பாடுமிக்கவர்கள் என்று ''துக்ளக் சோ'' போன்ற கோயபல்சுகள் எவ்வளவுதான் ஒப்பனை செய்தாலும், இந்துவெறியர்களின் தில்லுமுல்லு, மோசடி, பயங்கரவாதச் செயல்களே அவற்றின் யோக்கியதையைத் திரைகிழித்துக் காட்டுகின்றன. விசுவ இந்து பரிசத்தின் மோசடிகள் அம்பலமாகியுள்ள நிலையில், இம்மதவெறி பயங்கரவாத அமைப்பைத் தடை செய்து, அதன் சொத்துக்களைப் பறிமுதல் செய்து தண்டிக்கக் கோரி, மதச்சார்பற்ற-புரட்சிகர ஜனநாயக சக்திகள் கிளர்ந்தெழுவதே இன்றைய தேவையாக உள்ளது. • பாலன்

www.padippakam.com

# நாட்டை அடகு வைப்பதில் பா.ஜ.க. கூட்டணி அரசின் நாலுகால் பாய்ச்சல்

**பட்ஜெட்டுக்கு முன்னும், பின்னும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு பா.ஜ.க. அரசு செய்து வரும் சலுகைகளால், மூன்று இலட்சம் சுரங்கத் தொழிலாளர்கள் வேலையிழந்து நிற்கின்றனர்.**

கடந்த இரு மாதங்களாக ராணிகஞ்ச் - அசன்சால் வட்டாரத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் கட்டாரியின் ஒலியோ, இயந்திரங்களின் பேரிரைச்சலோ இன்றி 'அமைதி' நிலவுகிறது. ஒன்றரை லட்சம் தொழிலாளர்கள் கவலை தோய்ந்த முகத்துடன் பரிதவிக்கிறார்கள். நேற்று வரை அவர்கள் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள். ஆனால் இன்று...?

உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) கட்டளைக்கு அடிபணிந்து கிடக்கும் இந்து வெறி ஆட்சியாளர்கள், வெளிநாடுகளிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாடுகளையும் சுங்கவரிகளையும் பெருமளவு குறைத்ததன் விளைவாக, நாட்டின் கிழக்கிலும் மேற்கிலுமுள்ள அரசுத் துறை நிலக்கரிச் சுரங்கங்கள் அடுத்தடுத்து மூடப்பட்டு, பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து நிற்கின்றனர்.

இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால், அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் நிலக்கரியின் விலை 'மலிவாக' உள்ளது; உள்நாட்டு நிலக்கரியின் விலை அதிகமாக உள்ளது என்று கூறி அரசுத்துறை நிறுவனங்களே உள்நாட்டு நிலக்கரியை வாங்குவதில்லை. இதனால் பீகார் - மே. வங்க மாநிலங்களில் உள்ள கிழக்கத்திய நிலக்கரி வயல் நிறுவனமும் (ECL), ம.பி. - மகாராஷ்டிரா மாநிலங்களில் உள்ள மேற்கத்திய நிலக்கரி வயல் நிறுவனமும் (WCL) நட்டத்தில் இயங்குவதாகக் கூறி, தொழிலாளர்களுக்கு ''லே-ஆப்'' கொடுத்தன. பின்னர் படிப்படியாகச் சுரங்கப் பணிகள் அனைத்தையும் நிறுத்திவிட்டு, தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடிக்கின்றன. அரசுத்துறை நிறுவனமான கிழக்கு - மேற்கு நிலக்கரி வயல் நிறுவனங்களில் பணியாற்றும் 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்று வேலை இழந்து, வாழ்விழந்து நிற்கிறார்கள்.

பல மாநில மின் வாரியங்கள், கிழக்கு - மேற்கு நிலக்கரி வயல் நிறுவனங்களிலிருந்து நேற்று வரை பெருமளவுக்கு நிலக்கரியை வாங்கி வந்தன. ஆனால், இப்போது 'விலை மலிவான' நிலக்கரியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகின்றன. இதனால் மேற்கத்திய நிலக்கரி வயல் நிறுவனத்தில் மட்டும் ஏறத்தாழ 6 இலட்சம் டன் நிலக்கரி வாங்குவாரின்றிக் கிடங்குகளில் தேங்கிக் கிடக்கிறது. இதைக் காரணம் காட்டி 18 சுரங்கங்களை நிர்வாகம் மூடிவிட்டது. கிழக்கத்திய நிலக்கரி வயல் நிறுவனம் 64 சுரங்கங்களை மூடி, 72,000 தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடித்தது. இன்னும் 50 சுரங்கங்களை மூடப் போவதாக அறிவித்துள்ளது. மேற்கத்திய நிலக்கரி வயல் நிறுவனமோ இன்னும் 32 சுரங்கங்களை மூடப் போவதாக அறிவித்துள்ளது.

மாநில மின் வாரியங்கள் தற்போது அரசுத்துறை நிலக்கரியை வாங்காததோடு, ஏற்கனவே அவை வாங்கிய நிலக்கரிக்கும் இன்னமும் பாக்கியைச் செலுத்தாமல் பெருமளவு கடன் வைத்துள்ளன. உதாரணமாக, ம.பி. மின்வாரியம் ரூ. 225 கோடியும், மகாராஷ்டிர, கர்நாடக மின் வாரியங்கள் தலா ரூ. 150 கோடியும், பீகார் மின் வாரியம் ரூ. 350 கோடியும் பாக்கி வைத்துள்ளன. ஏற்கனவே மாநில மின் வாரியங்கள் நட்டத்தில் தள்ளிவிடப்பட்டுள்ள நிலையில், அவை பாக்கியைத் திருப்பிச் செலுத்தவும் உடனடி வாய்ப்புகள் இல்லை. மேலும், பல தனியார் தொழில் நிறுவனங்களில் நிலவும் தேக்கம், உற்பத்திச் சரிவு காரணமாக, அவை நிலக்கரியை வாங்குவதும் பெருமளவு குறைந்துவிட்டது.

இவை ஒருபுறமிருக்க, இந்நிலக்கரி வயல் நிறுவனங்கள் வாங்கியுள்ள துரப்பன, அகழ்வுச் சாதனங்களும், எந்திரங்களும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடம் அடகு வைக்கப்பட்டுள்ளவையாகும். அவற்றுக்கு வட்டி செலுத்தக் கூட முடியாமல் இந்நிறுவனங்கள் திணறுகின்றன. முறையாக வட்டி செலுத்தாவிடில், அவை அந்நிய நிதி நிறுவனங்களுக்கே சொந்தமாகிவிடும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

உலக வர்த்தக நிறுவனத்தின் கட்டளையை ஏற்க மறுத்து, நிலக்கரி இறக்குமதிக்குத் தடை விதிப்பதும் நிலக்கரி வயல் நிறுவனங்களில் தின்று கொழுக்கும் அதிகார வர்க்கச் சுமையை வெட்டி எறிவதும் தான் இந்நெருக்கடிகளுக்குத் தீர்வாக முடியும். ஆனால், ஆட்சியாளர்களும், நிலக்கரி நிர்வாகமும் தமது ஏகாதிபத்திய சேவைக்காக இலட்சக்கணக்கான தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டி, வீதியில் வீசியெறிந்துள்ளனர். ''கருப்பு வைரம்'' எனப்படும் நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் சுரங்கத் தொழிலாளர்களில் ஆகப் பெரும்பான்மையானவர்கள் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினராவர். தலைமுறை தலைமுறையாக, குடும்பம் குடும்பமாக உழைத்து, இந்நாட்டின் மின்சாரம் மற்றும் தொழில் உற்பத்திக்கு முதுகெலும்பாக விளங்கிய இலட்சக்கணக்கான நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் இன்று வேலையிழந்து, வாழ்விழந்து நிற்கிறார்கள்.

காங்கிரசு வழியில் பாரதீய ஜனதாவால் விசுவாசமாகப் பின்பற்றப்படும் தாராளமயக் கொள்கை, சுரங்கத் தொழிலாளர்களின் வாழ்வை மட்டுமல்ல; இதர துறைகளைச் சேர்ந்த கோடானு கோடி மக்களின் வாழ்வைப் பறிக்கவுள்ளது.

✱ வீடு மற்றும் வீட்டுமனைத் துறையில் 100% நேரடி அந்நிய முதலீட்டுக்கு நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சர் ராம்ஜெத் மலானி அண்மையில் தாராள அனுமதி

**தொழிலாளர் வாழ்வைப் பறிக்கும் நிலக்கரி இறக்குமதியை எதிர்த்து, ஐதராபாத்தில், சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் நடத்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்.**






படிப்பகம்

www.padippakam.com

அளித்துள்ளார். அடுத்துவரும் ஐந்தாண்டுகளில் ஏறத்தாழ 3 கோடி வீடுகள் கட்டும் திட்டத்தை நிறைவு செய்ய ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் தேவை என்பதால், இத்துறையில் அந்நிய முதலீட்டுக்குத் தாராள அனுமதி அளிப்பது அவசியம் என்கிறார். இதன் விளைவாக நவீன எந்திரங்களைக் கொண்டு அந்நிய நிறுவனங்கள் கட்டுமான வேலைகளில் ஈடுபடுவதால், உள்நாட்டு கட்டுமான நிறுவனங்களும், கூலி வேலை செய்யும் இலட்சக்கணக்கான கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்வும் பறிக்கப்படும்.

✱ காப்பீட்டுத் துறையில் 26% அளவுக்கு அந்நிய மூலதனப் பங்குகளை அனுமதிப்பதென மத்திய அமைச்சகம் அண்மையில் முடிவு செய்துள்ளது. இதன் விளைவாக, காப்பீட்டுத்துறை படிப்படியாக நட்டத்திற்குத் தள்ளப்பட்டு, அதில் பணியாற்றும் இலட்சக்கணக்கான ஊழியர்களின் எதிர்கால வாழ்வு கேள்விக்குறியாகும். பிரேசில் மற்றும் தென் கிழக்காசிய நாடுகளின் வழியில் இந்தியாவும் திவாலாக்கப்பட்டு, அதன் எஞ்சிய செல்வங்களும் சூறையாடப்படும்.




**நிதித்துறையை ஏகாதிபத்திய நிறுவனங்களின் கொள்ளைக்குத் திறந்துவிடும் அயோக்கியத்தனத்தை எதிர்த்துப் போராடும் காப்பீட்டுத்துறை ஊழியர்கள்.**

✱ உலக வர்த்தக நிறுவனத்தின் கட்டளைப்படி, சர்வதேச சந்தை விலைக்கேற்ப இந்திய இரும்பு - எஃகு விலைகளைக் குறைக்குமாறு வர்த்தக அமைச்சகம் உற்பத்தியாளர்களை நிர்பந்தித்து வருகிறது. விலைகளைக் குறைக்காவிட்டால், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) மூலம் கடன் பெறும் சலுகையையும் பறிக்க முயற்சிக்கிறது. சர்வதேசச் சந்தைக்கேற்ப விலைகளைக் குறைத்தால், இரும்பு - எஃகு உற்பத்தியாளர்கள் நட்டமடைய நேரிடும். அதை ஈடுகட்ட ஆட்குறைப்பு, லே-ஆஃப், ஆலை மூடல் என இலட்சக்கணக்கான தொழிலாளர் வாழ்வு பறிக்கப்படும். அல்லது 'விலை மலிவான' வெளிநாட்டு இரும்பை இறக்குமதி செய்தால், உள்நாட்டு இரும்பு - எஃகு ஆலைகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டு, நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களைப் போலவே இரும்பு - எஃகு ஆலைத் தொழிலாளர்களும் வீதியில் வீசியெறியப்படுவர்.

— இவைதான் ''சுதேசி'' பசப்பல்களுடன் பட்ஜெட்டுக்கு முன்னும் பின்னுமாக பாரதீய ஜனதா ஆட்சியாளர்கள் தீவிரமாகச் செயல்படுத்தி வரும் தாராளமயக் கொள்கையின் 'சாதனைகள்'!

நாளை நம் வாழ்வு என்னவாகுமோ என்கிற பீதியில் தொழிலாளர்கள் குமுறிக் கொண்டிருக்கும் நிலையில், அதற்கு வடிகால் வெட்டும் நோக்கத்துடன், தொழிற்சங்கத் தரகர்கள் தாங்களும் உலக வர்த்தக நிறுவனத்தையும் தாராளமயத்தையும் எதிர்ப்பதாகச் சவடால் அடித்துத் தொழிலாளர்களை ஏய்க்கக் கிளம்பிவிட்டனர். சுரங்கத் தொழிலாளர்களைத் தம்பின்னே திரட்டிக் கொண்டு, எவ்வித அரசியல் போராட்டத்திலும் அவர்களை ஈடுபடுத்தாமல், அவர்களது சந்தா பணத்தில் பிழைத்து வரும் தொழிற் சங்கங்கள் இப்போது தமது பிழைப்புக்கே அபாயம் ஏற்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்ட நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கோரியும், சுரங்க மூடலை எதிர்த்தும் வழக்கமான சட்டவாதப் போராட்டங்களை நடத்தி வருகின்றன. போலி கம்யூனிஸ்டுகள் மட்டுமின்றி காங்கிரசு, பாரதீய ஜனதா தலைமையிலுள்ள தொழிற் சங்கங்களும் உலக வர்த்தக நிறுவனத்தை எதிர்த்துக் குரல் எழுப்புகின்றன.

இதே சங்கங்கள்தான் துறைமுகத் தொழிலாளர்களையும் தம் பின்னே பெருமளவில் திரட்டி வைத்துள்ளன. அந்நிய நிலக்கரியை கப்பல்களிலிருந்து இறக்குமதி செய்ய மாட்டோம் எனத் துறைமுகத் தொழிலாளர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தினாலே போதும்; உலக வர்த்தக நிறுவனத்தின் கட்டளை செல்லாக் காசாகி, ஆட்சியாளர்கள் தொழிலாளி வர்க்கத்திடம் மண்டியிட நேரிடும். ஆனால், போலி கம்யூனிஸ்டுகள் உட்பட எந்த தொழிற் சங்கமும் இத்தகைய முயற்சியில் இறங்கவோ, உலக வர்த்தக நிறுவனத்துக்கு எதிராக நாடு தழுவிய தொழிலாளர் ஒற்றுமையைக் கட்டியமைக்கவோ தயாராக இல்லை. தன்னெழுச்சியாக சில உள்ளூர் தொழிற்சங்கக் கிளைகள் இத்தகைய முயற்சியில் ஈடுபட்ட போதிலும், காலம் கனியவில்லை என்று கூறி தொழிற் சங்கத் தலைமைகள் போராட்ட உணர்வை மழுங்கடித்து வருகின்றன. நாடு மீண்டும் மறுகாலனியாக்கப் படுவதையும், தனியார்மயம் - தாராளமயத்தையும் ஆதரித்து வரும் காங்கிரசு, பாரதீய ஜனதா ஆகிய ஆளும் வர்க்கக் கட்சிகளின் தொழிற் சங்கங்கள், தொழிலாளர் போராட்டங்கள் நாடு தழுவிய அளவில் எரிமலையாக வெடிக்கும் முன்பாக அதனைத் தணித்து, திசை திருப்பும் நோக்கத்துடனேயே, அவையும் இப்போது உலக வர்த்தக நிறுவனத்துக்கு எதிராக நிற்பதாக மாய்மாலம் செய்து வருகின்றன.

அன்று காலனியவாதிகளுக்குச் சாதகமாக சுதந்திரப் போராட்டத்தைத் திசை திருப்பி காந்தியும் காங்கிரசும் துரோகமிழைத்ததைப் போலவே, இன்று ஆளும் வர்க்கத் தொழிற்சங்கங்களும் போலி கம்யூனிஸ்டுகளும் விருப்ப ஓய்வுத் திட்டம், தங்கக் கைகுலுக்கல் திட்டம் முதலானவற்றின் மூலம் தொழிலாளர் போராட்டத்தைத் திசை திருப்பி, பொருளாதாரவாதப் புதை சேற்றினுள் மூழ்கடித்து வருகின்றன. ஆனால், வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் இத்துரோகங்களுக்கு எதிராக விரைவில் விழித்தெழுவார்கள். உலக வர்த்தக நிறுவனத்துக்கும் அதன் பாதந்தாங்கும் ஆட்சியாளர்களுக்கும் எதிராக புரட்சிகரத் தொழிலாளர்களின் முறுக்கேறிய கரங்கள் உயரும்; அது புரட்சிக்கான முன்னறிவிப்பாக நாடெங்கும் எதிரொலிக்கும்!

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மோதல் நிழலா? நிஜமா?

**வாஜ்பாயி, இந்து மதத் தீவிரவாதிகளை எதிர்க்கும் மிதவாதியாகவும்; முரளி மனோகர் ஜோஷியும், குருமூர்த்தியும் தாராளமயத்தை எதிர்க்கும் சுதேசிகளாகவும் காட்டப்படுவது, இந்திய மக்களை ஏய்க்கும் நாடகம்தான்!**

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த வடமாநிலத் தேர்தல்களில் பா.ஜ.க. மண்ணைக் கவ்வியதைத் தொடர்ந்து, ஒருபுறம் பாரதீய ஜனதா கட்சிக்குள்ளும்; மறுபுறம் பா.ஜ.க.விற்கும், ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தள், விசுவ இந்து பரிசத், சுதேசி விழிப்புணர்வு இயக்கம் உள்ளிட்ட சங் பரிவார அமைப்புகளுக்கு இடையிலும் கொள்கைப் பூர்வமான மோதல்கள் நடைபெற்று வருவதாக சங் பரிவார அமைப்புகளும், அதன் தலைவர்களும் மீண்டும் காட்டிக் கொண்டு வருகின்றனர்.

• சனவரி மாதத் துவக்கத்தில் பெங்களூரில் நடந்த பா.ஜ.க.வின் தேசிய செயற்குழு கூட்டத்தில், பா.ஜ.க. தலைமை இந்துத்துவா கொள்கைகளை நீர்த்துப் போகச் செய்து விட்டதாலும், சுதேசிக்குத் துரோகமிழைத்ததாலும்தான் தோல்வியடைந்ததாக ஒரு குழு குற்றஞ் சுமத்தியது; மதன் லால் குரானா, சுந்தர்லால் பட்வா, பைரோன் சிங் ஷெகாவத் தலைமையிலான மற்றொரு குழுவோ, கட்சியின் தோல்விக்கு ஆர்.எஸ்.எஸ். தான் காரணம் என எதிர்க்குற்றச்சாட்டுகளை அடுக்கியது. பெங்களூர் மாநாடு பா.ஜ.க.விலுள்ள இந்துத்துவா தீவிரவாதிகளுக்கும், மிதவாதிகளுக்கும்; தாராளமயத்தின் ஆதரவாளர்களுக்கும், சுதேச ஆதரவாளர்களுக்கும் இடையே நடந்த போராட்டமாகச் சித்தரிக்கப் பட்டது.

• ஆர்.எஸ்.எஸ். இயக்கி வரும் தொழிலாளர் அமைப்பான ''பாரதீய மஜ்தூர் சங்கம்'', பாரதீய ஜனதா கூட்டணி அரசின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்து தில்லியில் ஊர்வலம் நடத்தியது; அந்த ஊர்வலத்தில் பேசிய பாரதீய மஜ்தூர் சங்கத்தின் பொறுப்பாளரும், ஆர்.எஸ்.எஸ்.இன் முக்கியத் தலைவர்களுள் ஒருவருமான தத்தோபந்த் தெங்காடி, பா.ஜ.க. கூட்டணி அரசு காப்புரிமை சட்டத்திலும், காப்பீடு துறையை அந்நிய நிறுவனங்களுக்குத் திறந்து விடும் பிரச்சினையிலும் சமரசம் செய்து கொண்டு, நாட்டை விற்று விட்டதாகக் குறை கூறினார். நாக்பூர் நகரில் நடந்த மற்றொரு கூட்டத்தில், அவர், ''வாஜ்பாய், தன்னை தேச விரோத சக்திகள் சூழ்ந்து கொள்ள அனுமதித்துவிட்டதாக''க் குற்றஞ் சுமத்தினார்.

• ஆர்.எஸ்.எஸ். இயக்கி வரும் மாணவர் அமைப்பான ''அகில பாரதீய வித்யார்தி பரிஷத்''-இன் பொன்விழாக் கொண்டாட்டத்தில் பேசிய அவ்வமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் ராம் பகதூர் ராய், ''வாஜ்பாய் ஒரு உதவாக்கரை பிரதமர்'' என்றார்.

• ''பா.ஜ.க., தனது சொந்தக் கொள்கைகளையே கைகழுவி வருவதாக'' விமர்சித்த ஆர்.எஸ்.எஸ்.-இன் இணைப் பொதுச் செயலாளர் கே.எஸ். சுதர்சன், ''இந்த அரசு தேச நலன்களுக்கு விரோதமாகச் செயல்படுமானால், நாங்கள் எதிர்ப்புக் காட்டத் தயங்க மாட்டோம்'' எனவும் எச்சரித்தார்.

• பிப்ரவரி மாதத்தில் நடந்த பா.ஜ.க. கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில், ''பா.ஜ.க.விற்கு நெருக்கமான சிலரின் பேச்சுகளும், செயல்பாடுகளும், கூட்டணி அரசின் கௌரவத்தைக் குலைத்து வருகின்றன; பா.ஜ.க.வின் சகோதர அமைப்புகள், கூட்டணியின் கௌரவத்தையும், ஒற்றுமையையும் குலைத்து விடாதபடி பா.ஜ.க. பார்த்துக் கொள்ள வேண்டும்'' எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பா.ஜ.க. அரசின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து சுதேசி விழிப்புணர்வு இயக்கம் நடத்தும் ஆர்ப்பாட்டம்: தேர்தல் உத்தி.



இத்தீர்மானத்தில் வாஜ்பாயி மட்டுமல்ல, வாஜ்பாயியைக் குறி வைத்துத் தாக்கி வரும் பா.ஜ.க.-வின் தலைவர் குஷாபாவ் தாக்கரேயும் கையெழுத்திட்டார். இத்தீர்மானம், ஆர்.எஸ்.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக மிதவாதி வாஜ்பாய் அடைந்த வெற்றியாகவும், இனி ஆர்.எஸ்.எஸ். தலையீடின்றி வாஜ்பாய் தன்னிச்சையாகச் செயல்படப் போவதின் தொடக்கமாகவும் காட்டப்பட்டது.

— இதனை, குழுச் சண்டை என்பதா? இல்லை, கொள்கை வழிப் போராட்டம் என்பதா? இதனைக் கொள்கைப் போராட்டம்தான் என எடுத்துக் கொண்டால், இதன் விளைவு என்னவாக இருந்திருக்க வேண்டும்? இந்துத்துவா தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடுவதாகக் கூறும் வாஜ்பாய் உள்ளிட்ட மிதவாதிகளும், பா.ஜ.க. கூட்டணி அரசின் தாராளமயச் சலுகைகளை எதிர்ப்பதாகக் கூறும் முரளி மனோகர் ஜோஷி, குருமூர்த்தி உள்ளிட்ட சுதேசி ஆதரவாளர்களும் கட்சிக்கு உள்ளேயும், வெளியேயும், நாடாளுமன்றத்திலும் எதிரணியினரை எதிர்த்து விட்டுக் கொடுக்காமல் போராட்டம் நடத்தியிருக்க வேண்டும்.

ஆனால், சங் பரிவாரத்திற்குள் என்ன நடக்கிறது? குஜராத்தில் கிறித்தவ மதத்தைச் சேர்ந்த மலைவாழ் பழங்குடியினர், இந்து மதவெறியர்களால் தாக்கப்பட்டதை, ''இந்துத்துவா தீவிரவாதி'' கேசுபாய் படேல் எதைக் கூறி நியாயப்படுத்தினாரோ, அதே காரணத்தை தான் (மதமாற்றம்) 'மிதவாதி' வாஜ்பாயும் கூறினார்; இன்னும் ஒருபடி மேலே போய், மதமாற்றத்தைப் பற்றி தேசிய விவாதம் நடத்த வேண்டும் என்றார். மதம் மாறும் உரிமையை ரத்து செய்ய வேண்டும் என்ற 'தீவிரவாதிகளின்' விருப்பத்தைதான், இப்படி சுற்றி வளைத்து வக்காலத்து வாங்கினார், அவர்.

தாராளமயமாக்கத்தின் ஆதரவாளர்களுக்கும், சுதேசி ஆதரவாளர்களுக்கும் இடையே நடந்த போராகச் சித்தரிக்கப்பட்ட பெங்களூர்



படிப்பகம்

www.padippakam.com



**கோவை குண்டு வெடிப்புக்குப் பலியானவர்களின் உறவினர்களைச் சந்திக்கும் அத்வானி; இதே அக்கறையை தாராளமயத்தால் வேலை இழந்து போன பஞ்சாலைத் தொழிலாளர்கள் மீது இவர்கள் காட்டுவதில்லை.**

மாநாட்டின் முடிவில், காப்புரிமைச் சட்டத்தைத் திருத்தவும், காப்பீட்டுத் துறையில் பன்னாட்டு நிறுவனங்களை ஆதரித்தும், பா.ஜ.க. கூட்டணி அரசு எடுத்த முடிவை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பா.ஜ.க. கூட்டணி அரசு பன்னாட்டு நிறுவனங்களுக்குக் காட்டும் சலுகைகளை எதிர்த்து யாத்திரையும், ஆர்ப்பாட்டமும் நடத்தும் சுதேசி விழிப்புணர்வு இயக்க அமைப்பாளர் குருமூர்த்தி, பா.ஜ.க. கூட்டணி அரசின் பட்ஜெட்டை, சுதேசி எனப் பாராட்டுகிறார்.

இப்படி சங் பரிவார அமைப்புகளுக்குள் நடந்து வரும் ''கொள்கைப் போராட்டம்'' ஒரு மோசடி நாடகம் என்பதும், பதவி வெறி - குழுச் சண்டைக்குதான் கொள்கை முலாம் பூசப்படுகிறது என்பதும் வெளிப்படையாகவே தெரியும் போதும், பெரும்பாலான ''தேசிய''ப் பத்திரிகைகள், இக்குழுச் சண்டையை கொள்கைப் போராட்டமாக வலிந்து எழுதுகின்றன; பார்ப்பனிய எதிர்ப்பு, இந்து மதவெறி எதிர்ப்பு பேசும் ஓட்டுக் கட்சிகளும் கூட, வாஜ்பாயி சகிப்புத் தன்மை கொண்டவர் என்றும், ''தவறான கட்சியில் இருக்கும் சரியான மனிதர்'' என்றும் புகழ்ந்து தள்ளுகின்றன.

ஆர்.எஸ்.எஸ். வரலாறு, ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. உள்ளிட்ட சங் பரிவார அமைப்புகளின் கட்டுமானம், சங் பரிவார அமைப்புகளிடையே உள்ள உறவு, சங் பரிவார அமைப்புகளில் தலைவர்கள் நியமிக்கப்படும், ''தேர்ந்தெடுக்கப்படும்'' முறை, சங் பரிவாரங்களின் வர்க்க அடித்தளம் - இவற்றை சற்று கவனத்துடன் பார்த்தாலே, இந்து மதவெறி அரசியலை நடைமுறைப்படுத்துவதிலோ, ஏகாதிபத்தியங்களுக்கும், தரகு முதலாளிகளுக்கும் சேவை செய்வதிலோ, சங் பரிவார அமைப்புகளிடையே கொள்கை போராட்டம் நடைபெறுவதற்கு சாத்தியப்பாடே கிடையாது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

★☆★

**சு**தந்திரப் போராட்டத்தின் பொழுது வெள்ளையனை எதிர்த்துப் போராடுவதைவிட, முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறிக் கலவரங்களைத் தூண்டிவிட்டு நடத்துவதில்தான் ஆர்.எஸ்.எஸ். குறியாக இருந்தது; நாடெங்கும் ''உப்பு சத்தியாகிரக''ப் போராட்டம் நடந்து கொண்டிருந்த பொழுது, ஆர்.எஸ்.எஸ். நாக்பூரில் புல் அறுக்கும் போராட்டத்தை நடத்தியது. இதில் இருந்தே ஆர்.எஸ்.எஸ்.-இன் 'தேச' பக்தியைப் புரிந்து கொள்ளலாம்!

காங்கிரசு, வட இந்திய இந்து தரகு முதலாளிகளின் அரசியல் பிரதிநிதியாகச் செயல்பட்டதால், பெயரளவிற்கேனும் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டங்களை நடத்தித் தீர வேண்டிய அவசியமிருந்தது; ஆர்.எஸ்.எஸ். இந்து தரகு முதலாளிகளின் அடியாள் படையாக மட்டும் செயல்பட்டதால், இந்து மதவெறியைத் தூண்டிவிடும் பசுவதையைத் தடை செய்யக் கோருவது, கிறித்தவ மதத்தைத் தழுவியர்களை இந்து மதத்திற்குள் இழுப்பது போன்ற இயக்கங்களை எடுப்பதே அதன் அரசியலாக இருந்தது.

''சுதந்திர''த்திற்குப் பின், இந்திரா காந்தி எடுத்த மன்னர் மானிய ஒழிப்பு, வங்கிகளை நாட்டுடமையாக்குவது போன்ற பெயரளவிலான இடது சாரி பொருளாதார நடவடிக்கைகளைக் கூட, ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஆதரித்தது கிடையாது.

காங்கிரசு நேரு பாணி சோசலிசப் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்திய பொழுது, பா.ஜ.க.வின் முன்னாள் அவதாரமான ஜனசங்கம், இராசாசி தலைமையில் இயங்கிய சுதந்திராக் கட்சியின் வலதுசாரி - தனியார்மயப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு வால் பிடித்தது. காங்கிரசு தனியார்மய - தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளுக்குத் தாவிவிட்ட பின்பு, பா.ஜ.க. 'சுதேசி'யைத் தூக்கிக் கொண்டது! 1991 - வரை அமெரிக்க சார்பு தரகு முதலாளிகளை ஆதரித்து வந்த ஆர்.எஸ்.எஸ்., அதன் பின் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் திடீர் சுதேசியாக மாறியதற்கு காரணம் என்ன?

இந்துத்துவா கொள்கைகளை மட்டுமே பேசிக் கொண்டிருந்தால், கட்சி வடமாநிலக் கட்சியாகச் சுருங்கி விடும்; மைய அதிகாரத்தைப் பிடிக்கவும், நாட்டின் தென் பகுதியிலும், கிழக்கு, வடகிழக்குப் பகுதியிலும் காலூன்றவும், ஓட்டுப் பொறுக்கவும் கட்சிக்கு வேறொரு முகமூடி தேவை என்பதை ஆர்.எஸ்.எஸ். புரிந்து கொண்டது; காங்கிரசுக்கு மாற்றாகக் காட்டிக் கொள்ளவும், தாராளமயத்தை எதிர்த்து வரும் உழைக்கும் மக்களின் வாக்குகளை அறுவடை செய்து கொள்ளும் நரித்தனத்தோடுதான் ஆர்.எஸ்.எஸ். சுதேசி சவடால் அடித்து வருகிறது.

மகாராஷ்டிரா மாநில ஆட்சியைப் பிடித்தவுடனேயே, என்ரான் விவகாரத்தில் பா.ஜ.க. அடித்த குட்டிக்கரணம் ஒன்றே போதும், ஆர்.எஸ்.எஸ்.-இன் சுதேசி வீராப்பு வெறும் வெத்துவேட்டு எனப் புரிந்து கொள்ளுவதற்கு! அதனால் தான், பா.ஜ.க.வின் செய்தி தொடர்பாளர் கே.எஸ். சர்மா, ''சுதேசி விழிப்புணர்வு இயக்கம் ஒரு குறிப்பிட்ட வரையறுக்குள் மட்டுமே இயங்கும்; பா.ஜ.க.விற்கு எதிராக அவர்கள் எதையும் செய்ய மாட்டார்கள்'' என்கிறார்.

கலாச்சார தேசியத்திற்காக பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கிய ஆர்.எஸ்.எஸ். கும்பல், 'பொருளாதார தேசிய'த்திற்காக எந்தவொரு பன்னாட்டு நிறுவனத்தின் மீதும் ஒரு கல்லைக் கூடத் தூக்கி எறிந்தது கிடையாது. கோவையில் முசுலீம் தீவிரவாதிகளைக் காட்டி அமைப்பை வளர்க்க முயலும் பா.ஜ.க. - இந்து முன்னணி, தாராளமயத்தால் வேலையிழந்து நிற்கும் பாஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகப் போராடுவது கிடையாது. கோவை மில் அதிபர்கள், ராகுல் பஜாஜ் போன்ற தரகு முதலாளிகள், வட்டிக்கடை நடத்தும் மார்வாடிகள், மேல்சாதி நிலப்பிரபுக்கள் போன்ற பிற்போக்கு ஆளுங் கும்பலின் நலனுக்காகவே கட்சி நடத்தும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு, தாராளமயத்தால் பாதிக்கப்படும் தொழிலாளர்களின் - விவசாயிகளின் வாழ்க்கையைப் பற்றிப் பேசும் அருகதையே கிடையாது. காங்கிரசுக்கும் சோசலிசத்திற்கும் எத்துணை தூரமோ, அத்துணை தூரம்தான் பா.ஜ.க.விற்கும் சுதேசிக்கும்!

★☆★

**கா**ந்தி படுகொலை செய்யப்பட்ட பின் தடை செய்யப்பட்டிருந்த ஆர்.எஸ்.எஸ்., கிருபளானி, பிர்லா மூலம் பேரம் நடத்தி, தன் மீது விதிக்கப்பட்டிருந்த


படிப்பகம்

www.padippakam.com

தடையை நீக்கிக் கொண்டது. இதைத் தொடர்ந்து, 1954-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த ஆர்.எஸ்.எஸ்.-இன் மாவட்ட நிர்வாகிகள் மாநாட்டில்தான், தனித்த, அதே சமயம் துணை அமைப்புகளை உருவாக்க ஆர்.எஸ்.எஸ். முடிவெடுத்தது. தொழிலாளர் மத்தியில் பணியாற்ற பாரதீய மஸ்தூர் சங்கம், மாணவர் அமைப்பான அகில இந்திய வித்தியார்தி பரிசத், மதப் பிரச்சாரத்துக்கு விசுவ இந்து பரிசத், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஜனசங்கம் ஆகிய அமைப்புகள் கட்டியமைக்கப்பட்டன.

எந்தவொரு கட்சியிலும் அக்கட்சியில் உறுப்பினராக இருக்கும் ஒருவன், அக்கட்சியின் தலைமைப் பதவிக்கு வந்துவிட முடியும். ஆனால், பா.ஜ.க.வை பொருத்தவரை, ஆர்.எஸ்.எஸ்.-இன் கீழ் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் மட்டுமே தலைமை பதவிக்கு வர முடியும். பா.ஜ.க.வின் முன்னாள் தலைவர்கள் வாஜ்பாயி, அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, தற்போதைய தலைவர் குஷாபாவ் தாக்கரே - இவர்கள் அனைவருமே ஆர். எஸ்.எஸ்.-இல் இருந்து பா.ஜ.க.விற்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள்தான்; பல்வேறு மாநிலங்களிலும், இரண்டாம் மட்ட அளவிலும் தலைவர்களாக இருக்கும் கோவிந்தாசார்யா, கல்யாண் சிங், மதன்லால் குரானா, பைரோன் சிங் ஷெகாவத் போன்றோரும் ஆர்.எஸ்.எஸ்.-இன் தீவிர உறுப்பினர்கள்தான். மேலும், பா.ஜ.க. கூட்டணி அரசின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காகவே ஆர்.எஸ்.எஸ்.-இன் இணை பொதுச் செயலாளர் கே.எஸ். சுதர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.


இது ஒருபுறமிருக்க, சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தின் செயலாக்கக் கமிட்டியில் பா.ஜ.க.வின் துணை பொதுச் செயலாளர் கோவிந்தாசார்யாவும், பா.ஜ.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் வீரேந்திர சிங்கும், பாரதீய மஸ்தூர் சங்கப் பொறுப்பாளர் தத்தோபந்த் தெங்காடியும் இடம் பெற்றுள்ளனர். விசுவ இந்து பரிசத், பஜ்ரங் தள் அமைப்புகளைச் சேர்ந்த 'தீவிரவாதிகள்', பா.ஜ.க. பெயரில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் நுழைகிறார்கள். இப்படி ஆர்.எஸ்.எஸ்.-ஐ மையமாகக் கொண்டு, சங் பரிவார அமைப்புகள் ஒன்றுடன் மற்றொன்று பல வழிகளில் பின்னிப் பிணைந்திருப்பதால், பா.ஜ.க.விற்குள் மிதவாதத் தலைவர்கள் உருவாக முடியுமென்பதையும், பா.ஜ.க.விற்கும், பிற சங் பரிவார அமைப்புகளுக்கும் இடையே இந்துத்துவா மற்றும் சுதேசிக் கொள்கைகளில் முரண்பாடு உள்ளது என்பதையும் முட்டாள்கூட நம்ப மாட்டான்!

நேரு அரசாங்கத்தால் போடப்பட்டிருந்த தடையை நீக்குவதற்காக, ஆர்.எஸ். எஸ்., காங்கிரசிடம் பேரம் நடத்திய பொழுது, அப்பொழுது ஆர்.எஸ்.எஸ்.-இன் தலைவராக இருந்த கோல்வால்கர், ''காங்கிரசு அதிகாரத்திலும், ஆர்.எஸ். எஸ். அமைப்பு ரீதியிலான கலாச்சாரச் சக்தியாகவும் இருப்பதால், அவை இணைந்து இந்த (கம்யூனிச) ஆபத்தை முறியடித்து விட முடியும்'' என்று எழுதினார். 1967-70 கால கட்டங்களில் நாடு முழுவதும் நிலவிய காங்கிரசு எதிர்ப்பு அலையைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, தான் எதிர்த்த அதே போலி கம்யூனிஸ்டுகளுடன் கூட்டுச் சேர்ந்து போராடவும், கூட்டு அமைச்சரவையில் இடம் பெறவும் கூட ஆர்.எஸ். எஸ்.-இன் துணை அமைப்புகள் இறங்கின. அவசர நிலையை அடுத்து, மையவாத ஜனதா கட்சி உருவானபொழுது, வலது சாரியான ஆர்.எஸ்.எஸ்., பாரதீய ஜனசங்கத்தை ஜனதாவுடன் இணைத்தது. அதேசமயம் ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஆர்.எஸ்.எஸ். மிக வேகமாக வளர்ந்தது. 1975-இல் 8,500 ஆக இருந்த ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்கள் 1977-இல் 11,000 ஆகவும், 1982-இல் 20,000 ஆகவும் உயர்ந்தது. 1981-இல் ஜனதா கட்சி சிதறிவிட்ட பின்பு, ஆர்.எஸ். எஸ்., பாரதீய ஜனசங்கத்தை குழி தோண்டிப் புதைத்துவிட்டு, பாரதீய ஜனதாவை உருவாக்கியது.

1980-களில் சீக்கிய மதவெறியை எதிர்ப்பதற்கு இந்திரா காந்தி இந்து மதவெறியைத் தூண்டிவிட்ட பொழுது, ஆர்.எஸ். எஸ். அவருக்கு ஆதரவு கொடுத்தது. இந்திரா காந்தி படுகொலைக்குப் பின்பு நடந்த தேர்தலில், ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் ராஜீவ் காந்தியை ஆதரித்து வேலை செய்தன. இப்படி, காலச் சூழலுக்கு ஏற்ப, தனது இந்து மதவெறி நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளவும், அதிகாரத்தைச் சுவைக்கவும் ஆர்.எஸ்.எஸ். எந்த முகமூடியும் போட்டுக் கொள்ளத் தயங்கியதில்லை.

★☆★

நேரு சோசலிச சிற்பியாகவும், மொரார்ஜி தேசாய் போன்ற கிழட்டுப் பிற்போக்காளர்களை எதிர்த்த இந்திரா காந்தி, முற்போக்குவாதியாகவும் இந்திய மக்கள் முன் நிறுத்தப்பட்டதைப் போல், வாஜ்பாயி மிதவாதியாகக் காட்டப்படுகிறார். கல்வி மாநாட்டில் சரசுவதி வந்தனம் பாடிய விவகாரத்தில் ஆகட்டும், இந்த ஆண்டை சமசுகிருத ஆண்டாக அறிவித்துள்ளதிலும், இந்திய 'நீதி' மன்றங்களை ஒரு பொருட்டாக மதிக்காமல், அயோத்தியில் கோயில் கட்டுவதற்காகத் தூண்கள் செதுக்கப்பட்டு வரும் அடாவடித்தனத்திலும் வாஜ்பாயி 'தீவிரவாதி'களை எதிர்த்துத் தனது சுண்டு விரலைக் கூட ஆட்டியதில்லை.




வாஜ்பாயி, சங் பரிவாரங்களின் நிர்பந்தத்துக்கு ஆளாகி வருவதாகச் சித்தரிக்கிறது ''டைம்ஸ் ஆஃப் இந்தியா'' நாளிதழ்.

ஆனாலும், வாஜ்பாயி மிதவாதியாகவும், முரளி மனோகர் ஜோஷியும், குருமூர்த்தியும் சுதேசி வீரர்களாகவும் காட்டப்படுவது ஆர்.எஸ்.எஸ்.-க்கு மட்டுமல்ல, இந்திய ஆளும் வர்க்கத்திற்கே அவசியமாக உள்ளது. அதனால்தான், ஆளும் வர்க்கத்தின் ஊதுகுழல்களான 'தேசிய' பத்திரிகைகள், ஆர்.எஸ்.எஸ். நடத்தி வரும் மோசடி நாடகத்தை உண்மையைப் போல் பிரச்சாரம் செய்கின்றன.

காங்கிரசு அல்லாத பிற கட்சிகள், மத்தியிலும், பிற மாநிலங்களிலும் ஆட்சியைக் கைப்பற்றுமளவு வளர்ந்துவிட்ட பா.ஜ.க.வோடு கூட்டணி கட்டிக் கொள்ளுவதற்கு, வாஜ்பாயி, மிதவாதியாகக் காட்டப்படுவதை வசதியாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன. காங்கிரசுக்குள் முற்போக்கு சக்திகளை ஆதரிக்க வேண்டும் எனக் கூறி ஏய்த்ததைப் போல, பா.ஜ.க.விற்குள் மிதவாத சக்திகள் இருப்பதாகக் கூறி ஏய்க்கின்றன.

• செல்வம்



படிப்பகம்

# இதுதான் இன்றைய இந்தியா



பெண்ணுரிமைகளைப் பற்றிப் பேசாமல், எந்தவொரு ஓட்டுக் கட்சியும் இனி காலந்தள்ள முடியாது. வலதுசாரியான பா.ஜ.க.வும் இதற்கு விதிவிலக்கானதல்ல. சர்வதேசப் பெண்கள் தினத்தையொட்டி, கடந்த மார்ச் 8-ந் தேதியன்று பா.ஜ.க. அரசு தில்லியில் நடத்திய கருத்தரங்கு தான் இது. 33 சதவீத இட ஒதுக்கீடுக்கு ஆதரவு, பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவிவிடும் காமுகர்களுக்குத் தூக்கு தண்டனை அளிப்பது எனப் பல வழிகளில் பா.ஜ.க., தன்னை பெண்களுக்கு ஆதரவான கட்சியாய் காட்டிக் கொண்டு வருகிறது. பாலியல் குற்றங்களுக்கு மரண தண்டனை சட்டம் வரப் போகிறது எனப் பூச்சாண்டி காட்டியவர்கள், கொண்டு வந்தது என்னவோ ஒரு வக்கிரமான திட்டத்தைதான்!

மைய அரசின் கீழ் இயங்கும் பொது காப்பீட்டுத் துறை, இந்தியப் பெண்களின் மீது தனக்கிருக்கும் அக்கறையைக் காட்டிக் கொள்ளுவதற்காக ''ராஜராஜேஸ்வரி பெண்கள் காப்பீட்டுத் திட்டம்'' எனும் புதிய காப்பீடு திட்டத்தை மார்ச் 19-இல் பிரதமர் வாஜ்பாயி தலைமையில் அறிமுகப்படுத்தியது. விபத்தில் சிக்கிக் கொண்டு கை, கால் இழந்து போனவர்களுக்கு காப்பீடு வழங்குவதைப் போல, பாலியல் வன்முறைத் தாக்குதலால் முடமாகிப் போகும் பெண்களுக்கு காப்பீடு வழங்குவது தான் இதனின் 'சிறப்பாம்'! இத்திட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம், பாலியல் வன்முறையை சாதாரண விபத்தாகச் சுருக்கி விட்டது, இந்து மதவெறிக் கும்பல்.

அமெரிக்கக் காப்பீட்டு நிறுவனங்கள், வேலைக்குச் செல்லும் அமெரிக்கப் பெண்கள், பணியிடங்களில் சந்திக்கும் பாலியல் தாக்குதல்களுக்கு எதிராகக் காப்பீடு செய்து கொள்வதை, ஏற்கனவே வியாபாரமாக்கி விட்டன. காப்பீடு துறை தாராளமயமாக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வியாபாரப் போட்டியில், இந்திய காப்பீடு நிறுவனங்கள் முந்திக் கொண்டுவிட்டதை, 'சுதேசி'க்குக் கிடைத்த வெற்றியாகக் கூட பா.ஜ.க. கூறக் கூடும்.

வயது வேறுபாடின்றி பெண்கள் மீது பாலியல் வன்முறை ஏவிவிடப்படுவதால், சந்தையை முழுசாகக் கைப்பற்றி விடும் நரித்தனத்தோடு, பத்து வயது சிறுமி தொடங்கி எழுபது வயது கிழவி கூட இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளுவதற்கு வசதியாக, இதனை உருவாக்கியுள்ளனர்; ஏழைப் பெண்களைப் பொறி வைத்துப் பிடிப்பதற்காகவே, மிகக் குறைவான ஆண்டுக் கட்டணம் (ரூ. 15) விதிக்கப்பட்டுள்ளது. இனி, இந்திய உள்துறை அமைச்சகம் பாலியல் குற்றங்கள் குறையவில்லையே எனக் கவலைப்பட்டால், நிதி அமைச்சரோ, பாலியல் குற்றங்கள் அதிகரிக்கவில்லையே; சந்தை விரிவடையவில்லையே என வருத்தப்படலாம்!




பாலியல் வன்முறையைப் பணமாகப் பார்க்கும் பா.ஜ.க.வின் வியாபாரபுத்தியை (வியாபாரிகளின் கட்சியிடமிருந்து வேறெதை எதிர்பார்க்க முடியும்?) பெண்ணுரிமை அமைப்புகள் எதிர்த்து அம்பலப்படுத்திய பிறகு, இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்யப் போவதாகக் காப்பீடு துறை கூறியுள்ளது. ஆனாலும், கவிதையெல்லாம் எழுதும் மென்மையானவர் எனக் காட்டப்படும் வாஜ்பாயி, இவ்வக்கிரம் பிடித்த திட்டத்தை தனது கையால் வெளியிட்டதைக் குறித்து சிறிது கூட வருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. ஒருவேளை, இந்த மதவெறியர்களைத் தூண்டிவிட்டு, இந்த வியாபாரத்தை ஓஹோவென்று நடத்திவிடலாம் என அவர் கற்பனை செய்து வைத்திருந்ததில், மண் விழுந்து விட்ட கவலையில் அவர் மூழ்கிப் போய் விட்டாரோ, என்னவோ?

ஒருபுறம் ஓட்டுக்காக பெண்ணுரிமை பேசுவதும், மறுபுறம் காசுக்காக பெண்களின் மானத்தை - உரிமையை விலை பேசும் இக்கேடு கெட்ட பிற்போக்குக் கும்பலை நாம் தண்டிக்கப் போவது எப்போது?

Published and Owned by A. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PAINTS, 110 II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: A. SHANMUGARAJ

FOR INDIA UNDER NO. 42648/85
www.padippakam.com




படிப்பகம்